நிலா
காமிக்ஸ்

கல்கியின்

# பொன்னியின் செல்வன்

காமிக்ஸ்



2

கல்கியின்

# பொன்னியின் செல்வன்

காமிக்ஸ்

நிலா
காமிக்ஸ்

www.nilacomics.com


வணக்கம் வாசகர்களே...
வாருங்கள் குருஷேத்திரத்திற்கு இணையான திருப்புறம்பியம் பள்ளிப்படைக்கு நாம் செல்வோம். மூன்று நாள் தொடந்து யுத்தம் நடைபெற்றது. ஆனால், யாருக்கு வெற்றி என்று தெரியவில்லை. நான்காம் நாள் யுத்தத்தில் விஜயாலய சோழன் பங்கு பெற போவதாக செய்தி வந்திருக்கிறது. அந்த வீரக் கிழவனின் வீரத்தை காணலாம் வாருங்கள்.


நான்காம் நாள் இரவு
பல்லவர்களின் பாசறையில் சபை கூடுகிறது. அதில் பல்லவ மன்னன் அபராஜிதவர்மன், கங்க நாட்டு மன்னன் பிறிதிவீபதி, சோழ நாட்டு மன்னன் முதலாம் ஆதித்தன் மற்றும் அவனுடைய தந்தை விஜயாலய சோழன் ஆகியோர் கூடி ஆலோசனை செய்கிறார்கள்.


போரின் போக்கை பார்த்தால் நாம் தோற்பது நிச்சயம்! பின்வாங்கி கொள்ளிடத்து வடகரைக்கு சென்று விடுவதுதான் நல்லது. (அபராஜிதவர்மன்)
ஆம்! பல்லவ மன்னன் கூறுவதுதான் சரி. பின்வரும் சந்தர்ப்பத்தில் பார்த்துக் கொள்ளலாம். (பிறிதிவீபதி)
நான் கூறுவதை கேளுங்கள்! பின்வாங்க வேண்டிய அவசியமே இல்லை. (விஜயாலய சோழன்)
தந்தையே, தாங்கள் சூழ்நிலை அறியாமல் பேசுகிறீர்கள். (முதலாம் ஆதித்தன்)


சூழ்நிலையை அறிந்துதான் நான் பேசுகிறேன் மகனே. நான் சொல்வதை கேளுங்கள், உடனே எனக்கு ஒரு யானையை கொண்டு வாருங்கள்.
யானை படை முற்றிலுமாக அழிந்துவிட்டது அரசே...
என்ன சொன்னீர், யானை படை அழிந்துவிட்டதா!
அப்படியென்றால் ஒரு குதிரையேனும் கொண்டு வாரும்.
அதையும் முற்றிலும் அழித்துவிட்டார்கள்.
ஆ... சோழநாட்டு சுத்த வீரர்கள் யாரேனும் இருவர் உயிரோடு மிஞ்சி இருக்கிறீர்களா? இருந்தால் வாருங்கள்... (என்று கர்ஜித்தார்)
இப்படி கர்ஜிக்கும் இந்த கிழவனின் வயது தொன்னூறு. அது மட்டுமில்லை ஏற்கனவே நடந்த போரில் ஏற்பட்ட கொடிய காயத்தால் தன் கால்கள் இரண்டையும் இழந்தவர்.


இருவருக்கு பதிலாக இருநூறு சோழவீரர்கள் வந்து நிற்கிறார்கள்.
இரண்டு இரண்டு பேராக வரிசையாக நில்லுங்கள்.
என்னை சுமக்கும் இருவர் விழுந்தால் பின்னால் வரும் இருவர் என்னை தூக்கிக் கொள்ள வேண்டும்.
புரிந்ததா....? புறப்படுங்கள்!


விஜயாலய சோழன் அவ்வீரர்களின் தோள்களின் மீது அமர்ந்து இரு நீண்ட வாள்களை ஏந்தி சுழற்றிக் கொண்டே, போர் களத்திற்குள் நுழைகிறான்.


அந்த பெரும் படைக்குள்ளே செல்லுங்கள்.


விஜயாலய சோழனின் வாள் திருமாலின் சக்கரம் போல் சுழல்கிறது.


எதிரியின் தலைகள் உருளுகின்றன.


எங்கே பாண்டியர்கள்?
எங்கே அந்த மறவர்கள்?


எந்த படையாலும் விஜயாலய சோழனை தடுத்து நிறுத்த முடியவில்லை.


அதை கண்ட பல்லவ படையும், வீறுகொண்டு எழுந்து பாண்டியர்களின் படையை தாக்கின.
வாருங்கள், நாமும் விஜயாலயனுடன் சேர்ந்து பாண்டியர்களை பூண்டோடு அழித்துவிடுவோம்.


பாண்டிய படை தோற்று சிதறி ஓடியது.


இப்போரில் பிரிதிவீபதி வீர சொர்க்கம் அடைகிறான்.


அவனுக்கு களத்தில் வீரக்கல் நாட்டி பள்ளிப்படை கோயில் எடுத்தார்கள்.


இப்போரின் வெற்றியின் மூலமே சோழர்கள் பிற்கால சோழ சாம்ராஜ்யத்தை
நிறுவினார்கள்.


அத்தகைய ரணகள பூமிக்குத்தான் ஆழ்வார்க்கடியான் வந்திருக்கிறான். ஏன்? என்பதை அருகில் சென்று தெரிந்து கொள்வோம் வாருங்கள்!
என்ன இது! இரவு மூன்று நாழிகை ஆகிவிட்டதே, இன்னும் யாரும் இங்கு வரவில்லையே!


ஒருவேளை திட்டத்தை வேறு இடத்துக்கு மாற்றி விட்டார்களோ! ம்...
அப்போது தூரத்தில் ஒரு வெளிச்சம் தன்னை நோக்கி வருவதை ஆழ்வார்க்கடியான் காண்கிறான்.


யாரோ இருவர் பள்ளிப்படையை நோக்கி வருகிறார்கள்.


திட்டமிட்ட இடத்திற்கு வந்ததும், ஒருவன் தீப்பந்தத்தை உயர்த்தி சுற்றும் முற்றும் பார்க்கிறான். அப்போது மேலும் இருவர் வருகின்றனர்.


நால்வரும் கூடி, அவர்களுக்கு உள்ளேயே ஏதோ பேசிக் கொள்கிறார்கள்.


என்ன பேசுகிறார்கள்?
ஒன்றும் கேட்கவில்லையே...
சற்று நேரத்தில் மேலும் இருவர் வருகிறார்கள். அதில் ஒருவன், ஆபத்துதவிகளின் தலைவன் ரவிதாசன்.
ரவிதாசன் நடுநாயகமாக நின்று ஏதோ பேசுகிறான்.


ஏதும் கேட்பது போல் தெரியவில்லையே! ம்...
சற்று அருகில் போனால்தான் விவரம் கிடைக்கும்.
படக்
அந்த சப்தத்தை கேட்டு, அங்கிருந்த ஒருவன்,
யார் அங்கே?
ஆழ்வார்க்கடியானின் இதய துடிப்பு சிறிது நேரம் அப்படியே நின்றுவிட்டது.
அச்சமயத்தில், கோட்டான் ஒன்று வெளிவந்து தன் சப்பட்டையை "படபட" என்று அடித்துக்கொண்டு பறந்தது.
வெட்டுடா அதை! அந்த கோட்டான் நம்மையே பயப்படுத்திவிட்டதே!


வேண்டாம்
நிறுத்துங்கள்,
நம்மை போல் இரவில் விழித்திருக்கும் கோட்டான்களும்,
ஆந்தைகளும் நம் சிநேகிதர்கள், உங்கள் ஆயுதங்களை
கூராக்கி வையுங்கள்! நம் எதிரிகளை பழி தீர்ப்பதற்கு...
அதற்குள் ஆழ்வார்க்கடியான், பதுங்கி
பதுங்கி சதிகாரர்களின் அருகிலிருந்த,
ஒரு பெரிய மருதமரத்தை அடைந்து,
மரத்தோடு மரமாக மறைந்து நின்று
கொண்டான்.
ஹப்பா! அந்த கோட்டானுக்கு
கோடி புண்ணியங்கள்.
அனைவரும்
வந்தாகி
விட்டதா?


எங்கே சோமன் சாம்பவனும், இரும்பன்காரியும்?
இதோ வந்து விட்டோம்.
அடடா! இந்த பாழும் உடம்பு வேறு இப்படி பெருத்துவிட்டதே...
புதிதாக வந்தவர்கள் யார் என்று பார்க்கிறான் ஆழ்வார்க்கடியான்.
கொள்ளிடக்கரையில் நான் பார்த்த அதே நபர்கள்தான் இவர்கள்.
சோமன் சாம்பவனையும், இரும்பன்காரியையும் கண்ட ரவிதாசன்,
வாருங்கள், ஏன் இவ்வளவு காலதாமதம்?
வழி நெடுகிலும் சோழ படையினரின் பாதுகாப்பு பலமாக இருந்ததால், அவர்களின் பார்வையில் அகப்படாமல் வருவதற்கு காலதாமதம் ஆயிற்று.


சோமன் சாம்பவன் கூறியதைக் கேட்டு,
என்ன சொன்னாய்..? சோழ படையினரின் பலத்த பாதுகாப்பா! ஹா.. ஹா.. ஹா.. ஹ...
என்று ஏளனமாக சிரித்துவிட்டு தன் கையிலிருந்த பொன்முடிப்பை வீசி,
இதோ பாருங்கள்! தஞ்சை கோட்டையின் நிலவறையில் இருந்தே எடுக்கப்பட்ட சோழ நாட்டின் பொற் காசுகள்.
அற்புதம்!
ஆஹா!
அபாரம் ரவிதாசரே!


நாணயங்களை கண்ட சோமன் சாம்பவன்,
ஒரு பக்கம் புலி!
மறு பக்கம் பனை!
ரவிதாசரே, இருப்பினும் தங்களுக்கு நெஞ்சு துணிவு தான்!
ஆம் நண்பர்களே! வேளக்காரப் படையினருக்கு நம் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகள் எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல என்பது அனைவருக்கும் நினைவிருக்கட்டும். (ஆவேசமாக).




இவ்வாறு கோஷமிடும் இவர்கள் பாண்டியநாட்டின் ஆபத்துதவிகள், பாண்டிய மன்னர்களுக்கு மெய்காப்பாளராக பணியாற்றியவர்கள். வீரபாண்டியனின் மரணத்திற்கு சோழர் குலத்தை பழி தீர்க்க சபதம் பூண்டவர்கள்.




நமது ஒரு பகைவன் காஞ்சியிலும் மற்றொரு பகைவன் இலங்கையிலும் இருக்கின்றனர். நாம் நமக்குள் இரண்டு பிரிவாக பிரிந்து, ஒரு பிரிவினர் தொண்டை மண்டலத்துக்கும், மற்றொரு பிரிவினர் இலங்கைக்கும் சென்று தக்க சமயம் வரும் வரை காத்திருக்க வேண்டும்.
இலங்கைக்கு செல்ல எந்த வழி நல்லது?
கோடிக்கரை வழி!
கோடிக்கரை வழியாக சென்றால் ஆங்காங்கே பகைவர்களும், ஒற்றர்களும் இருப்பார்கள். ஆகையால் சேதுவிற்கு சென்று அங்கிருந்து கடலை கடப்பதே நல்லது.
சரியான யோசனை!
இலங்கை செல்பவருக்கு நீந்தவும், படகு வலிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். உங்களில் யார் யாருக்கு இந்த இரண்டும் தெரியும்?


எனக்கு தெரியும்.
எனக்கு தெரியும்.


இலங்கை செல்பவருக்கு கட்டாயமாக சிங்கள மொழி தெரிந்திருக்க வேண்டும். உங்களில் யாருக்கு தெரியும்?
எனக்கு தெரியும்.
எனக்கு தெரியும்.


ம்... நல்லது, உங்களில் யார் இலங்கைக்கு போவது என்பதை பிறகு முடிவு செய்வோம். அதுமட்டுமில்லை அங்கு போகிறவர்கள் முதலில் இலங்கை மன்னன் மகிந்தனை சந்திக்க வேண்டும். மகிந்தனின் உதவி கொண்டுதான் நாம் நம்முடைய காரியத்தை சாதிக்க முடியும்.


நன்றாக நினைவிருக்கட்டும்! ஏறக்குறைய இரண்டு காரியங்களும் ஒரே சமயத்தில் முடிய வேண்டும். ஒரு பகைவனை முடித்த பிறகு, அவகாசம் கொடுத்தால் இன்னொரு பகைவன் ஜாக்கிரதையாகிவிடுவான். அதற்கு நாம் இடமே கொடுக்கக் கூடாது! புரிகிறதா? (என்று எச்சரித்தான்)
இடும்பன்காரி, நீ சென்ற காரியம் என்னவாயிற்று? ஏதேனும் செய்தி கொண்டு வந்தீரா?
ரவிதாசரே, தாங்கள் கூறியபடியே நான் கடம்பூர் கோட்டையில் காவலனாக பணியாற்றி வந்தேன். அப்போது ஒரு நாள்.....


கடம்பூர் மாளிகையில் இரவு நடந்த நடுநிசிக் கூட்டத்தில் அவன் பார்த்து தெரிந்து கொண்ட விவரங்கள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் ரவிதாசனிடம் கூறுகிறான், இடும்பன்காரி.
கண்டராதித்தரின் மகன் மதுராந்தகன் பட்டத்துக்கு வருவது முறையா? இல்லை, அரிஞ்சயரின் பேரனும் சுந்தர சோழரின் மகனுமான, கரிகாலன் பட்டத்துக்கு வருவது முறையா?
கண்டராதித்தரின் புதல்வரே! சிவபக்த சிரோன் மணியே!
உங்கள் அனைவரையும் சந்தித்ததில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.
மதுராந்தக தேவர் வாழ்க!
வருங்கால சக்ரவர்த்தி மதுராந்தக தேவருக்கு உடல், பொருள், ஆவி அனைத்தும் தத்தம் செய்து நியாயத்தை நிலை நாட்டுவோம்!


அவன் கூறிய அனைத்து நிகழ்வுகளையும் கேட்டறிந்த ரவிதாசன்,
சபாஷ் இரும்பன்காரி! மிக முக்கியமான செய்தியை கொண்டு வந்திருக்கிறீர். சோழ சாம்ராஜியத்திற்குள்ளேயே இம்மாதிரி ஒரு அரசியல் குழப்பம் ஏற்படுவது நம்முடைய நோக்கத்திற்கு உகந்தது, எது நடந்தாலும் நம்மை யாரும் சந்தேகிக்க மாட்டார்கள் அல்லவா? ம்... வேறு ஏதும் செய்தி இருக்கிறதா?
இருக்கிறது! அங்கு காஞ்சியில் இருந்து கந்தமாறனின் நண்பன் என்று சொல்லிக்கொண்டு ஒருவன் வந்திருந்தான், அவனும் அந்த நடுநிசிக் கூட்டத்தை இரகசியமாக கவனித்துக் கொண்டிருந்தான்.
காஞ்சியிலிருந்தா...!


இன்னொரு வேற்று மனிதனும் அங்கு நடந்ததை எல்லாம் கோட்டை மதில் சுவற்றின் மேலிருந்து கவனித்துக் கொண்டிருந்தான்.
அப்படியா! அவன் யார் என்று தெரிந்ததா?
முன் குடுமி வைத்திருந்த ஒரு வைஷ்ணவன்.
வைஷ்ணவனா!
அந்த வைஷ்ணவன் யாரென்று யூகித்துவிட்டான் ரவிதாசன்.
ஆ! அவனை நீ என்ன செய்தாய்? சம்புவரையரிடம் பிடித்துக் கொடுக்கவில்லையா?
இல்லை, ஒரு வேளை அவன் நம்மவனாய் இருக்கலாம் என்று நினைத்துவிட்டேன்.
ச்சீ.... மடையா!
அவன் நம்மவன் அல்ல. கட்டையாய், குட்டையாய் இருப்பான். கையில் தடி வைத்திருப்பான். பெயர் ஆழ்வார்க்கடியான் என்று சொல்லிக்கொள்வான்.


ஆம்! அவனே தான்!
பெரும் பிசகு செய்துவிட்டாய் இரும்பன்காரி! நண்பர்களே, நன்றாக நினைவு வைத்துக் கொள்ளுங்கள். நம்முடைய இரு பகைவர்களை காட்டிலும் மிகமிக கொடிய பகைவன் அந்த ஆழ்வார்க்கடியானே, நம் திட்டத்தை அடியோடு நாசம் செய்யக்கூடியவன்.
ரவிதாசரே! அப்பேர்பட்டவன் யார்?
அவன் யாரா? முதன்மை மந்திரி அநிருத்த பிரம்மராயரின் சீடன், பயங்கரமான ஒற்றன். அடுத்த முறை அவனை கண்டால், கண்ட இடத்திலேயே கண்டந்துண்டமாக வெட்டுங்கள். கையில் கிடைக்கும் ஆயுதத்தை அவன் மார்பில் பாய்ச்சுங்கள். ஆயுதம் ஏதும் இல்லையென்றால், கையினாலேயே அவன் தலையை திருகி கிள்ளி எறியுங்கள். எப்படி பாம்பை பார்த்தால் இரக்கம் இல்லாமல் அடித்துக் கொள்வீர்களோ அதே போல் அடித்துக் கொள்ளுங்கள். அவன் நம் திட்டங்களை சர்வநாசம் செய்யக்கூடியவன்.


அட பாதகர்களா... என் மேல் ஏன் இத்தனை கொலை வெறி? நான் என்ன தீங்கு செய்தேன் உங்களுக்கு!
அப்போது அவனுக்கு அடக்கிக்கொள்ள முடியாத அளவு தும்மல் வரவும், துணியை வாயில் வைத்து பொத்திக்கொண்டு...
அச்ச்
என்று தும்மினான்.
ஆழ்வார்க்கடியானின் தும்மல் சத்தம் பக்கத்தில் பேசிக் கொண்டிருந்த சதிகாரர்களுக்கு சிறிது கேட்டுவிட்டது.
என்ன சப்தம் அங்கே?


என்னவென்று போய் பார்.


சப்தம் கேட்ட இடத்திற்கு ஒருவன் தீப்பந்தத்துடன் வருகிறான்.
ஐயோ! இப்போது மட்டும் நாம் சிக்கினால், நாளைய விடியல் நமக்கு வைகுண்டத்தில்தான். நாராயணா! எப்படியாவது என்னை காப்பாத்து!
ஆழ்வார்க்கடியான் தப்புவதற்கு ஏதேனும் வழி உண்டா என்று சுற்றும் முற்றும் பார்க்கிறான்.


மரக்கிளையில் ராட்சத வௌவால்கள் தலைகீழாக தொங்கிக் கொண்டிருந்தன.
சட்டென்று அதில் ஒன்றைப்பிடித்து, கையில் ஆயுதமாக வைத்துக் கொண்டான்,
தீவட்டி ஏந்தியவன் அருகில் வரவும், வௌவாலை அவன் முகத்தின் மீது ஓங்கி எறிந்தான்.
ஆ...!
கையிலிருந்த தீவட்டி தவறி கீழே விழுந்தது.
அப்போது ஏற்பட்ட சலசலப்பில் வௌவால்கள் அனைத்தும் பறந்தன.


சதிகாரர்கள் வெளவால் கூட்டத்தில் மாட்டிக்கொண்டு நிலை தடுமாறினர்.


அடுத்த கணமே ஆழ்வார்க்கடியான் ஓட்டம் பிடித்தான்.
பிடியுங்கள் அவனை!
விடாதே பிடி!
ஆழ்வார்க்கடியான் தப்பித்தால் என்ன? தப்பிக்காவிட்டால் நமக்கென்ன? வாருங்கள், பொழுது விடியப்போகிறது! சேந்தன் அமுதன் வீட்டில் விட்டுவந்த நமது நாயகன் வந்தியத்தேவனை சென்று சந்திப்போம்.


விடியற்காலை
பொன்னார் மேனியனே! புலித் தோலை அரைக்கசைத்து மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே!
பாடலை கேட்டு வந்தியத்தேவன் கண் விழிக்கிறான். அருகில் சேந்தன் அமுதன் பாடிக்கொண்டே கோயிலுக்கு பூக்கள் பறித்துக் கொண்டிருக்கிறான்.
உடனே வந்தியத்தேவனும் எழுந்து, தஞ்சை கோட்டை செல்ல புறப்பட்டுவிடுகிறான்.
அமுதா, உன்னுடனேயே நானும் கோட்டை வாயில் வரை வருகிறேன்.
எனது குதிரை இங்கேயே இருக்கட்டும்.
ஆகட்டும் நண்பரே.


காலை உணவுக்கு பிறகு இருவரும் தஞ்சை கோட்டையை நோக்கி வருகிறார்கள், அப்போது...
உனக்கு சம்மதமாயிருக்கும் போது அநேகமாக கல்யாணம் ஆனது போலதானே? (என்று தொடர்ந்தான் இரவு பேசியதன் தொடர்ச்சியாக).
அது எப்படி சொல்ல முடியும். என் மாமன் மகள் பூங்குழலி இதற்கு சம்மதிக்க வேண்டாமா?
எல்லோரும் பெண்களை கேட்டுக் கொண்டுதானா கல்யாணம் செய்கிறார்கள்?
உதாரணத்திற்கு, நம் பெரிய பழுவேட்டரையர் அறுபத்தைந்து வயதுக்கு மேல் செய்து கொண்ட அந்த திருமணம்...


அந்த ராணியின் சம்மதத்தின் பேரிலா நடந்திருக்கும்.


ஜய்யோ! அது எல்லாம் பெரிய இடத்து சமாசாரம், நாம் ஏன் அதை பற்றி பேச வேண்டும்?


முக்கியமாக உங்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன்! பழுவேட்டரையர்களை பற்றி கோட்டைக்குள் யாரிடமும் ஏதும் பேச வேண்டாம்.
என்ன அமுதா, இப்படி என்னை ஒரேடியாக பய முறுத்துகிறாயே!
உண்மையைதான் கூறுகிறேன், அவர்களுடைய அதிகாரத்திற்கு மிஞ்சிய அதிகாரம் வேறு கிடையாது. அதனால்தான் அநிருத்த பிரம்மராயர் வெறுப்படைந்து பாண்டிய நாட்டுக்கு போய்விட்டார்.


இப்போது சோழ சாம்ராஜ்யத்தையே இரண்டு பழுவேட்டரையர்கள்தான் ஆளுகிறார்கள்.
அப்படி என்றால் சக்ரவர்த்தி...?


சக்ரவர்த்தி நோய்வாய்பட்டு கிடக்கிறார். பழுவூர்க்காரர்கள் போட்ட கோட்டை அவர் தாண்டுவதே இல்லை. அவர்களுடைய சொந்த புதல்வர்களுடைய பேச்சுகூட அவர் காதில் ஏறுவதில்லையாம்.


பழுவேட்டரையர்களை பற்றி கரிகாலர் கூறியது சரிதான்! அவர்களிடம் சற்று ஜாக்கிரதையாகத்தான் இருக்கவேண்டும்.


ஓஹோ... அப்படியா சமாசாரம்!
ஆமாம், அதிலும் சக்ர வர்த்தி தஞ்சைக்கு வந்த பிறகு பழுவேட்டரையர்களுடைய அதிகாரம் எல்லை இல்லாமல் போய்விட்டது. அவர்களை தட்டிக்கேட்ப தற்கே யாரும் கிடையாது.


இவ்வாறு பேசிக் கொண்டே கோட்டை வாயிலை வந்தடைகிறார்கள்.
நான் வருகிறேன் பூஜைக்கான நேரம் நெருங்கிவிட்டது.
நான் கூறியது நினைவிருக்கட்டும்! ஜாக்கிரதையாக சென்று வாருங்கள்.
அமுதன் சென்றதும், நந்தினி தனக்கு கொடுத்த முத்திரை மோதிரத்தை பார்த்து..,
இதை காட்டினால் நிச்சயம் கோட்டைக்குள் விடுவார்களாம்! ம்... அதையும் பார்க்கலாம்.


தஞ்சை கோட்டை


தஞ்சை கோட்டையின் பிரதான வாயிற்பகுதிக்கு வந்தியத்தேவன் வருகிறான்.


தன்னிடம் முத்திரை மோதிரம் இருக்கும் தைரியத்தில், வந்தியத்தேவன் தஞ்சை கோட்டையை ஏற இறங்கப் பார்க்கிறான்.
தஞ்சை கோட்டையில் பாதுகாப்பு பலமாகத்தான் உள்ளது. (வந்தியத்தேவன்)


அங்கே பாரேன், அவன் என்னமோ கோட்டையையே விலைக்கு வாங்க வந்தவன் மாதிரி பார்க்கிறான்.
இன்று நாம் உள்ளே செல்வதை யாராலும் தடுக்க முடியாது.


காவலர்களின் அனுமதி பெற்று ஒவ்வொருவராகக் கோட்டைக்குள் செல்வதை வந்தியத்தேவன் பார்த்துக்கொண்டு இருக்கையில், காவலன் ஒருவன்,
தம்பி! இங்கே வா.
கவனமாக குனிந்து செல்.
என்று அழைத்தவுடன், காவலர்களை நோக்கிச் செல்கிறான் வந்தியத்தேவன்.



தம்பி, யார் நீங்க? எதற்காகக் கோட்டைக்கு முன்னாடி நின்று போற, வரவங்கள எல்லாம் வேடிக்கை பார்க்கிறீங்க? உங்களுக்கு என்ன வேண்டும்? யாரைப் பார்க்கனும்?
என்று கேட்டவுடன், வந்தியத்தேவன் காவலர்களின் அருகில் சென்று, தன்னிடம் உள்ள முத்திரை மோதிரத்தைப் பெருமிதத்துடன் காண்பிக்கிறான்.
நான் கோட்டைத் தளபதி சின்ன பழுவேட்டரையரைப் பார்க்க வேண்டும்.
அதில் இருக்கும் பனை மரச் சின்னத்தைக் கண்ட காவலன்,


கோட்டை கதவுகளை திறந்துவிடுங்கள்!
ஐயா! தாங்கள் உள்ளே செல்லுங்கள்.


பதறியடித்துக் கொண்டு காவலர்கள், வந்தியத்தேவனை சகல மரியாதையுடன் கோட்டைக் கதவைத் திறந்து உள்ளே விடுகிறார்கள்.
ஆஹா, இந்த முத்திரைக்குத்தான் எத்தனை மதிப்பு, பழுவேட்டரையர் களின் அதிகாரம் இந்த முத்திரை மோதிரத்திலிருந்தே தெரிகிறது!


சோழர்களின் தலைநகரைக் கண்டு வியப்புக்குள்ளாகிறான்.
நகரம் என்றால் இது அல்லவோ நகரம்! நாளுக்கு நாள் விரிந்து பரந்து வரும் ஒரு சாம்ராஜ்யத்தின் தலைநகரம் இப்படித் தான் இருக்கும் போலும். இங்கு உள்ள அனைத்து மாளிகைகளுமே அற்புதமாக அல்லவா இருக்கின்றன! (வந்தியத்தேவன்)
இதில் சக்கரவர்த்தியின் அரண்மனையை நாம் எப்படிக் கண்டுபிடிப்பது? யாரையாவது கேட்கலாமா? ம்..... வேண்டாம் வேண்டாம்! யாரையும் கேட்கக் கூடாது, கேட்டால் வெளியூரிலிருந்து வந்த பட்டிக்காட்டான் என்று நினைத்துவிடுவார்கள்!


இவ்வாறு எண்ணிக்கொண்டு அவன் வருகையில், எதிரே ஒரு பிரமாண்டமான மாளிகை தென்பட்டது.


அதில் பெரிய புலிக்கொடி பறந்து கொண்டிருக்கிறது. அதைப் பார்த்த வந்தியத்தேவன்,
ஆஹா! இதுவே சக்கரவர்த்தியின் அரண்மனையாக இருக்க வேண்டும்.
முத்திரை மோதிரம் இருக்க நமக்கு என்ன கவலை! தயக்கமின்றி நேராக உள்ளே சென்றுவிட வேண்டியதுதான்.


அப்போது காவலர்கள் அவனை தடுத்து,
நில்!
யார் நீ?
அவர்களை ஏற இறங்க பார்த்துவிட்டு, பதில் ஏதும் பேசாமல் தன் முத்திரை மோதிரத்தைக் காண்பிக்கிறான்.
முத்திரை மோதிரத்தைப் பார்த்ததுதான் தாமதம், எந்தவித கேள்வியும் கேட்காமல், பதறி அடித்துக் கொண்டு, சக்கரவர்த்தியின் அரண்மனைக்குள் வந்தியத்தேவனை அனுமதித்தனர்.
மன்னித்துவிடுங்கள், மன்னித்துவிடுங்கள்! நீங்கள் தாராளமாய் உள்ளே செல்லலாம்.



பெரிய பழுவேட்டரையர் வந்துவிட்டாரா என்று கேட்கலாமா...?
கேட்டால் தவறாக நினைக்க மாட்டார்களா...! ம்...
இல்லை, பழுவேட்டரையர்களுக்கு நான் மிகவும் நெருங்கியவன் என்று எண்ணிக் கொள்வார்கள்.
ஏம்பா, பழுவேட்டரையர் திரும்பி வந்துவிட்டாரா?
யாரைக் கேட்கிறாய் தம்பி, சின்னவர் அரண்மனையில்தான் இருக்கிறார்.
அது எனக்குத் தெரியாதா? நடுநாட்டுக்குச் சென்றிருந்த பெரியவரைப் பற்றிதான் கேட்கிறேன்.
ஓ! பெரியவர் நடுநாட்டுக்கா சென்றிருக்கிறார்! அது எனக்கு தெரியாதே. நேற்று மாலை இளைய ராணியின் பல்லக்கு திரும்பி வந்தது. பெரியவர் இன்னும் வரவில்லை, ஒருவேளை இன்று இரவு திரும்பக்கூடும்.


இதுவும் நல்ல செய்திதான். அவர் வருவதற்குள் நாம் சக்கரவர்த்தியைப் பார்த்து ஓலையைக் கொடுத்துவிட வேண்டும். ஆனால் இவ்வளவு பெரிய அரண்மனையில் சக்கரவர்த்தியின் இருப்பிடத்தை எப்படி அறிவது! சின்ன பழுவேட்டரையரின் அனுமதியில்லாமல், சக்கரவர்த்தியைச் சந்திக்க முடியாது என்பது நாடறிந்த செய்தி. அவர் எங்கே இருப்பார்? எப்படி இருப்பார்? அவரை எப்படிச் சமாளிப்பது? ம்...
வழி வழியாக வந்த வாணர் குலத்து மூளையே, நீதான் எனக்கு ஏதாவது ஒரு நல்ல வழி சொல்ல வேண்டும்!
சக்கரவர்த்தி வாழ்க!
சக்கரவர்த்தி வாழ்க!


யார் இவர்கள்?
அக்காலத்தில், நம்மை போன்ற புலவர்கள் அறம்பாடி அரசர்களைக் கொன்றிருக்கிறார்கள் என்றால், நாம் ஏன் புகழ்பாடி சக்கரவர்த்தியை நலமுடன் எழுப்ப முடியாது!
நீ இந்தப் புலவர்களைக் கோட்டை தளபதியிடம் அழைத்துச் செல்.
நம் குலத்து முன்னோர்கள் செய்த புண்ணியம் நமக்குத் துணையாயிருக்கிறது. இல்லாவிட்டால் சரியான நேரத்தில் இந்தப் புலவர்கள் நமக்குக் கோட்டைத் தளபதி சின்ன பழுவேட்டரையர் எங்கிருக்கிறார் என்பதைக் காட்ட வருவார்களா... !


ஆஸ்தான மண்டபத்தில் சின்ன பழுவேட்டரையர் வெற்றிலை மென்று கொண்டு சிம்மாசனம் போன்ற ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார். அவருடன் முக்கியஸ்தர்கள் பலர் இருக்கிறார்கள்.
வந்தியத்தேவன் சாதுர்யமாக,
இந்த புலவர்களின் கூட்டத்தோடு கூட்டமாக கலந்து, எப்படியாவது நாம் சக்கரவர்த்தியை சந்தித்து விடவேண்டியதுதான்.


புலவர்களின் கூட்டத்தில் வந்தியத்தேவன் இருப்பதைக் கவனித்த சின்ன பழுவேட்டரையர்,
கூட்டத்தில் வரும் அந்த வாலிபனை பார்த்தால் புலவனை போல் தெரியவில்லையே...!
தம்பி, இங்கே வா.


வீரதீரமான இளைஞர்களைக் கண்டாலே உற்சாகமாகி, உடனே அவர்களைத் தன்னுடைய படையில் சேர்த்து கொள்ள வேண்டும் என்று கருதுவார் சின்ன பழுவேட்டரையர். வந்தியத் தேவனைக் கண்டதுமே அதே ஆர்வத்துடன் அழைக்கிறார்.
தம்பி, யாரப்பா நீ? எங்கிருந்து வருகிறாய்?
ஐயா, என் பெயர் வந்தியத்தேவன், காஞ்சியிலிருந்து வருகிறேன்!


காஞ்சியில் இருந்து வருகிறேன் என்ற வார்த்தையைக் கேட்டதும் சின்ன பழுவேட்டரையரின் முகம் மாறியது,
எங்கிருந்து வருகிறாய்?
இளவரசர் கரிகாலரிடமிருந்து சக்கரவர்த்திக்கு ஓலை கொண்டு வந்திருக்கிறேன்!
அதை இப்படிக் கொடு?
என்று அதிகாரத்துடன் கேட்டார்.
இடுப்பில் சொருகியிருக்கும் ஓலையை எடுக்கிறான். அப்போது ஓர் ஓலை தவறுதலாக கீழே விழுகிறது. அதை வந்தியத்தேவனும் கவனிக்கவில்லை, சின்ன பழுவேட்டரையரும் கவனிக்கவில்லை.


இது வழக்கமான ஓலைதான்.
படித்த ஓலையை மீண்டும் தன்னிடம் கொடுக்காமல் வேறொருவனிடம் கொடுப்பதை வந்தியத்தேவன் பார்க்கிறான், அவனைப் பார்த்த சின்ன பழுவேட்டரையர் மிரட்டும் தோரணையில்,
என்ன தம்பி?
ஐயா அந்த ஓலை?
சக்கரவர்த்தியிடம் நானே கொடுத்து விடுகிறேன். நீ போ.
என்னடா இது வம்பா போச்சு! இளவரசர் ஆதித்த கரிகாலர், சக்கரவர்த்தியிடம் நேரடியாகக் கூறச் சொன்ன விஷயத்தை, சக்கரவர்த்தியிடம் கூறாமல் எப்படி இங்கிருந்து போவது?
என்ன தம்பி யோசிக்கிற? நீ போ! நான் பார்த்துக் கொள்கிறேன்.


ஐயா! என்னையே நேரடியாக ஓலையைக் கொடுக்கும்படி.......
ஒகோ! அப்படியா விஷயம்? என் மீது நம்பிக்கை இல்லாமல் போய்விட்டதா இளவரசருக்கு?
வேறு வழியே இல்லை ஏதாவது பொய் சொல்லித்தான் காரியத்தைச் சாதிக்க வேண்டும்.


இளவரசர் அவ்வாறு கூறவில்லை, தங்கள் தமையனார்தான் அவ்வாறு கூறினார்! (என்று ஒரு போடுபோட்டான்)
என்ன? பெரியவரை நீ பார்த்தாயா? எங்கு பார்த்தாய்? (என்று மிரட்டுகிறார்)
கடம்பூர் சம்புவரையர் அரண்மனையில்.
ஆமாம்! பெரியவர் கடம்பூருக்குத் தான் சென்றிருக்கிறார்...! ஆனால் இவனை எப்படி நம்புவது!


சின்ன பழுவேட்டரையர் சந்தேகம் தீராமல்.
அங்கு இன்னும் யார் யார் வந்திருந்தார்கள்?
மழபாடி தென்னவன் மழவரையர், *
குன்றத்தூர் பெருங்கிழார், *
மும்முடி பல்லவரையர், *
தான்தோங்கி கலிங்கராயர், *
வணங்காமுடி முனையரையர், *
தேவசேநாதிபதி பூவரையர், *
அஞ்சாத சிங்கமுத்தரையர், *
இரட்டைக்குடை ராஜாளியார், *
கொல்லிமலை பெருநிலவேளார்*...
போதும், போதும்.


ஏன் தம்பி, நீ இதை முன்னமே கூறியிருக்கக் கூடாதா... நீயே சக்கரவர்த்தியிடம் நேரடியாக ஓலையைக் கொடுத்துவிட்டு வா. மற்றதை பின் விவரமாக பேசுவோம். புலவர்கள் வந்து விட்டால் நாம் பேசுவது ஏதும் சக்கரவர்த்தி யின் காதில் விழாது.
என்று கூறி ஓலையைக் கொடுத்து வந்தியத்தேவனைச் சக்கரவர்த்தியிடம் அனுப்பி வைக்கிறார்.
* சோழப் பேரரசின் கீழ் ஆட்சி செய்து வந்த குறுநில மன்னர்கள்.


வந்தியத்தேவன் சென்ற சிறிது நேரத்திற்கு பிறகு,
ஆஹா! இது என்ன ஓலை!
இந்த ஓலையை உன்னிடம் கொண்டு வந்து சேர்ப்பவன் என் நண்பன் வந்தியத்தேவன். இவனிடம் அந்தரங்கமான வேலை எதையும் நீ நம்பி ஒப்புவிக்கலாம். இப்படிக்கு ஆதித்த கரிகாலன்.
நாம் சந்தேகித்தது சரிதான். ம்... என்னை மீறி இவன் எங்கு சென்றுவிடுவான்!


சுந்தரசோழச் சக்கரவர்த்தியின் அரண்மனை.
சுந்தரசோழச் சக்கரவர்த்தியின் கால்களுக்கு மகாராணி வானமாதேவி மூலிகைத் தைலம் தடவி கொண்டிருக்கிறார். சக்கரவர்த்தி, வந்தியத்தேவன் கொண்டு வந்த ஓலையைப் படித்துவிட்டு, மகாராணி வானமாதேவியிடம்,
பார்த்தாயா உன் மகனை! நாம் அவனை இங்கு வரச் சொல்லி ஓலை அனுப்பினால், பதிலுக்கு அவன் நம்மைக் காஞ்சிக்கு வரச் சொல்கிறான்.
காஞ்சியிலே பொன் மாளிகை கட்டியிருக்கானாம்.
ஆஹா! இவ்வுலகிலேயே பெற்ற தாய் தந்தையருக்காக பொன் மாளிகை கட்டியவன் என் மகன் ஒருவனாகத்தான் இருப்பான்.
என்று ராணி ஆனந்தம் அடைகிறார்.


நீயும், நானும் அங்கு வந்து சில நாட்கள் தங்கியிருக்க வேண்டுமாம்.
நம்முடைய குலத்தில், தாங்கள் வசிப்பதற்காக யாரும் பொன்னாலான மாளிகையைக் கட்டியதில்லை, இறைவனுக்கு ஆலயம் எழுப்புவதையே முக்கியமாகக் கருதினார்கள்.
இந்த தெய்வ நிந்தனைக்கு நான் என்ன பரிகாரம் செய்வது! அய்யோ...
சக்கரவர்த்தி ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறார்...?


பிரபு! தங்கள் திருகுமாரர் செய்தது அப்படி ஒன்றும் தவறில்லையே.
என்ன சொல்ல வருகிறான் இந்தப் பிள்ளை? ம்....!
மகனுக்கு தாயும், தந்தையுமே முதன்மையான தெய்வங்கள்.
தம்பி, நீ சொல்வது ஒரு வகையில் சரிதான்,


மகனுக்குதான் தாயும், தந்தையும் தெய்வம்! ஆனால் மற்றவர்களுக்கு அப்படியில்லைதானே? (என்று மடக்குகிறார் சுந்தரசோழர்)
பிரபு.,
அரசர் திருமாலின் அம்சம் பெற்றவர் என்று வேத புராணங்கள் சொல்கின்றன. ஆகையால் தாங்களுக்குப் பொன் மாளிகை எடுத்தது பொருத்தமானதே... (என்று சக்கரவர்த்தியை புகழ்கிறான்.)
வானமா! இந்த மாதிரி நண்பர்கள் கரிகாலனுடன் துணையாக இருக்கும் வரை கரிகாலனைப் பற்றிய கவலை நமக்குத் தேவையில்லை.


பிரபு தங்கள் குமாரரின் வீரம் நாடறிந்தது. அபிமன்யுவும் கூட கரிகாலனுக்கு இணையாக மாட்டார் என்று மக்கள் கூறுகிறார்கள். நான் போய் கரிகாலனுக்குத் துணையா..?
சக்கரவர்த்தி வானமாதேவியை பார்த்து, "அவன் சொல்வதைக் கேட்டாயா?" என்பதைப் போல் பார்க்கிறார்.
தம்பி, கரிகாலனை நேருக்குநேர் நின்று வென்று விடுபவர்கள் இந்த அகிலத்தில் இல்லை என்பதை நான் அறிவேன். அதே போல் ஒருவனின் பலமே பலவீனம், பலவீனமே பலம்...! (சக்கரவர்த்தி தன் கருத்தைக் கூறி முடிப்பதற்குள், அங்கு பேரொலி எழும்புகிறது)
பராக்! பராக்! இதோ வருகிறார்கள், புலவர் பெருமக்கள்! கவிஞர் சிகாமணிகள்! தமிழ்ப்பெருங்கடலின் கரை கண்டவர்கள்!!


கட்டியம் கூறிக் கொண்டே வருவது வந்தியத்தேவனின் காதில் விழுகிறது.
ஆஹா! அதற்குள் அந்தப் புலவர் கூட்டம் வந்துவிட்டதே, அவர்களுடன் ஒருவேளை சின்ன பழுவேட்டரையரும் வரக்கூடும். அதன் பிறகு நாம் அரசரிடம் சொல்ல வேண்டியதைச் சொல்ல முடியாமலே போய்விட்டாலும் போய்விடலாம்.


வந்தியத்தேவன் அவசர அவசரமாக,
பிரபு தயவு கூர்ந்து நான் கூறுவதைக் கேளுங்கள். தாங்கள் அவசியம் இந்தத் தஞ்சையிலிருந்து கிளம்பி விடவேண்டும்! இங்கே தங்களை அபாயம் சூழ்ந்திருக்கிறது!
*அபாயம்! அபாயம்...!
* ஆபத்து


அதற்குள் சின்ன பழுவேட்டரையர் புலவர் கூட்டத்துடன் வருகிறார், வந்தியத்தேவன் பேசியது அவர் காதில் அரைகுறையாக விழுகிறது.
பராக்! பராக்! இதோ வருகிறார்கள், புலவர் பெருமக்கள்! கவிஞர் சிகாமணிகள்! தமிழ்ப்பெருங்கடலின் கரை கண்டவர்கள்! தொல்காப்பியம் முதலிய சங்க நூல்களை கரைத்துக் குடித்தவர்கள்! சிலப்பதிகாரம் முதலிய ஐம்பெருங்காப்பியங்களைப் படித்தவர்கள்! தாங்களே சுயமாகவும் கவி பாட வல்லவர்கள்! பராக்! பராக்!


சக்கரவர்த்திக்கு, கோட்டைத் தளபதி காலாந்தக கண்டரின் வணக்கம்.
சின்ன பழுவேட்டரையரின் பெயர் காலாந்தக கண்டர்.
வாருங்கள் தளபதி,
இந்த பிள்ளையை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. தாங்களுக்கும் பிடித்திருக்க வேண்டும்! இல்லையென்றால், இந்த பிள்ளையிடமே நேரடியாக என்னிடம் ஓலையைக் கொடுக்கும்படி தாங்கள் அனுப்பியிருப்பீர்களா!
ஏற்கனவே வந்தியத்தேவன் மீது கோபம் கொண்டிருந்த சின்ன பழுவேட்டரையர், வந்தியத்தேவனைத் திரும்பி பார்க்கிறார்.
அடேய்! என்னிடமே உனது வேலையைக் காட்டுகிறாயா?


என்ன தம்பி, ஏதோ சக்கரவர்த்தியிடம் அபாயம், அபாயம் என்றாயே?
ஆஹா, நாம் கூறியது இவர் காதில் விழுந்துவிட்டதே! சரி சமாளிப்போம்.
தளபதி, நான் சக்கரவர்த்தியிடம் "அபாயம், அபாயம்" என்று கூறவில்லை, *"அபயம் அபயம்" என்று கூறினேன்!
சக்கரவர்த்தி, வந்தியத்தேவனின் சாமர்த்தியத்தைக் கண்டு,
சரியான ஆளைத்தான் தேர்வு செய்து அனுப்பியிருக்கிறான் கரிகாலன்...
தளபதி தாங்கள் வந்த காரியம்?
பிரபு, ஆஸ்தான புலவர்கள் தங்களை தரிசிப்பதற்காக வந்திருக்கிறார்கள்.
* அடைக்கலம் / பாதுகாப்பு


தமிழ்ப் புலவர்கள் என்ற வார்த்தையைக் கேட்டதும் உற்சாகம் அடைந்த சக்கரவர்த்தி,
ஆஹா, தமிழ்ப் புலவர்களைக் காக்க வைப்பது பெரும் பாவம் அல்லவா! உடனே அவர்களை வரச் சொல்லுங்கள்.
சுந்தரசோழச் சக்கரவர்த்தி வாழ்க!
மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி வாழ்க!
புலவர்களைக் கண்டவுடன் சக்கரவர்த்தி எழுந்திருக்க முயற்சி செய்கிறார். ஆனால் அவரால் முடியவில்லை,
பிரபு, தாங்களை சிரமப்படுத்திக் கொள்ள வேண்டாம்.


ஆம் அரசே, தங்களுக்கு சிரமம் கொடுக்க நாங்கள் வந்தோமில்லை.
புலவர்களே ஒரு உண்மையைக் கூறட்டுமா, வைத்தியர்களைக் காண்பதைவிட, எனக்குத் தமிழ் புலவர்களைக் காண்பது மகிழ்ச்சியே.
தமிழ் கேட்டு என் உடம்பு சரியானால் ஆகுமே ஒழிய, மருந்துண்டு என் நோய் தீரப்போவதில்லை!
உண்மைதான் அரசே! தமிழுக்கு அத்தகைய ஆற்றல் உண்டு.
முதலில் அனைவரும் அமருங்கள்.


அனைவரும் கம்பளம் விரித்த இடத்தில் அமருகிறார்கள். அவர்களுடன் வந்தியத்தேவனும் சென்று அமர்ந்துவிடுகிறான்.
புலவர்களே, தமிழ்ப் பாடல்கள் கேட்டு அதிக காலமாயிற்று. உங்களில் எவரேனும் முதலில் ஒரு பாட்டு பாடுங்கள்.


அரசே, நான் உலகபுரத்திலிருந்து வருகிறேன். தாங்கள் உடல் நோயுற்றிருப்பது அறிந்த நாள் முதல் நாங்கள், தங்களுக்காக பிரார்த்தனை நடத்தி வருகிறோம். அந்த பிரார்த்தனை பாடல் ஒன்றை இப்போது இங்கு நான் பாடுவதற்கு தாங்கள் அனுமதி தரவேண்டும்.


அப்படியே ஆகட்டும்! கேட்கக் காத்துக் கொண்டிருக்கிறேன்.
*போதிய திருநிழல் புனித! நிற்பரவும் மேதகு நந்திபுரி மன்னர் சுந்தரச் சோழர் வண்மையும் வனப்பும் திண்மையும் உலகிற் சிறந்துவாழ் கெனவே!
*கவிதை
நன்று நன்று!
நன்று நன்று!
ஆஹா!
என்று பாராட்டுகிறார்கள்.
புத்த மதத்தினர் இவ்வளவு நன்றி உடையவர்களாய் இருப்பது வியப்பிலும் வியப்பு!
சோழ சாம்ராஜ்யத்தில், பௌத்தம், சைவம் & வைணவம் என்ற மும்மதங்களும் தழைத்தோங்கின.
எங்கே சமயச் சண்டை உண்டாகிவிடுமோ என்று எண்ணிய சுந்தரசோழர், அதைத் தடுக்கும் பொருட்டு,


ஆம், அது வியப்பான காரியந்தான்! உலகபுரம் புத்த மடத்துக்கு நான் செய்த சேவை மிக அற்பம். அதற்கு இவ்வளவு பாராட்டு வேண்டுமா என்ன?
தங்களிடம் பலன் அடைந்தவர்கள் யார்தான் நன்றி செலுத்தித் தங்களைப் பாராட்டாதிருக்க முடியும்? இந்திரனும், சூரியனும், சிவபெருமானும் கூட, தங்களுடைய *வண்மையின் பயனை அநுபவித்திருக்கிறார்கள்!
இது என்ன புதுக் கதை!
இந்திரனும், சூரியனும், சிவபெரு-மானும் கூடவா என்னிடம் நன்றி செலுத்த வேண்டும்?
* ஈகை / தானம்


ஆமாம் அரசே! தாங்கள் இந்நேரத்தில் எனக்கு ஒரு பாடல் பாட அனுமதி தரவேண்டும்?
ஆகட்டும்!
உடனே புலவர் கையில் இருந்த ஓலையை பிரித்து படிக்கிறார்.
*இந்திரன் ஏறக் கரி அளித்தார்
பரிஏ ழளித்தார்
செந்திரு மேனித் தினகரற்கு,
சிவனார் மணத்துப்
பைந்துகி லேறப் பல்லக்களித்தார்,
பழையாறை நகர்ச்
சுந்தரச்சோழரை யாவரொப்பார்கள் இத்
தொன்னிலத்தே!
*கவிதை
நன்று!
நன்று!


இந்தப் பாடலின் பொருள் இன்னதென்பதை யாராவது விளக்கிச் சொல்ல முடியுமா?
அப்போது புலவர்களின் தலைவர் நல்லன் சாத்தனார் எழுந்து,
நான் கூறுகிறேன் அரசே!
ஒரு சமயம், தேவேந்திரனுக்கும் விருத்திரா சூரனுக்கும் நடந்த போரில், இந்திரனுடைய ஐராவதம் இறந்து போனது. அப்பொழுது ஐராவதத்திற்கு மாற்றாக அதைவிட சிறந்த யானையைத் தாங்கள் பரிசளித்தீர்கள்!
சூரிய பகவானுக்கும், ராகுவிற்கும் நடந்த யுத்தத்தில் சூரியனின் ஏழு குதிரைகள் ராகுவின் விஷத்தினால் இறந்து போயின. அதற்குப் பதிலாக தாங்கள் புதியதாக ஏழு குதிரைகளைப் பரிசாக அளித்தீர்கள்!
பின்னர் சிவபெருமானுக்கும் பார்வதிதேவிக்கும் கைலாயங்கிரியில் நடந்த திருமணத்திற்குப், பல்லக்கைப் பரிசளித்தீர்கள்! இதற்கு இணை யார் இருக்கிறார்கள் என்று கூறுகிறது இப்பாடல்.
புலவர் கூறியதைக் கேட்டுச் சுந்தர சோழர் கலீர் என்று சிரித்தார்.
ஹா..ஹா..ஹா..


சுந்தரசோழர் சிரிப்பதை கண்டு அனைவரும் மகிழ்ச்சி அடைகின்றனர்.
புலவர்களை முன்னமே அழைத்து வரும்படி செய்திருக்க வேண்டும்.
பிரபு, நான் பெரிய தவறு செய்துவிட்டேன்! என்னை மன்னிக்க வேண்டும்.
எதற்காக மன்னிப்பு? நீர் என்ன பிழை செய்தீர்?
ஒருவேளை இந்திரனுக்கு நான் அளித்த வெள்ளை யானையையும், சூரிய தேவனுக்கு நான் கொடுத்த குதிரையையும் திரும்பப் பறித்து கொண்டு வந்துவிட்டீரோ?


அதையும் செய்யக்கூடியவர் தான் நீர்? ஹாஹாஹா....
ஹா..ஹா..ஹா..
ஹா..ஹா..ஹா..
ஹா..ஹா..ஹா..
ஹா..ஹா..ஹா..
உடன் அனைவரும் சிரிக்கின்றனர்
வந்தியத்தேவனும் விழுந்து விழுந்து சிரித்தான்,
ஹா..ஹா..ஹா..
சிரிக்கின்றாயா! ம்... உன்னைக் கவனித்து கொள்கிறேன்.
என்று சின்ன பழுவேட்டரையர், அவனை முறைத்து ஒரு பார்வை பார்க்க, உடனே வந்தியத்தேவன் சிரிப்பதை நிறுத்திக் கொள்கிறான்.
பிறகு அரசரை பார்த்து,
அரசர்க்கரசே! நான் இவர்களைப் போன்ற தமிழ்ப் புலவர்களை இதுநாள் வரை தங்களிடம் வரவிடாமல் தடை செய்து வைத்திருந்தேன். ஆனால் இப்போது அது மிகப்பெரிய பிழை என்று உணர்கிறேன்.
இப்போதாவது உணர்ந்தீரே... நல்லது.


புலவர்களே, இந்த அருமையான பாடலைப் பாடிய புலவர் யார் என்று உங்களில் யாருக்காவது தெரியுமா?


அதுதான் தெரியவில்லை அரசர்க்கரசே!


நாங்களும் அதைக் கண்டுபிடிப்பதற்குத் தான் முயன்று கொண்டிருக்கிறோம். கண்டுபிடித்து, அந்த மாபெரும் புலவருக்கு கவிச் சக்கரவர்த்தி என்று பட்டம் கொடுக்கவும் காத்திருக்கிறோம். ஆனால் அவரைக் கண்டுபிடிக்கத்தான் எங்களால் முடியவில்லை.


அதில் வியப்பு ஒன்றுமில்லையே! நாலுவரியில் இவ்வளவு பெரும் பொய்களை அடக்கக் கூடிய மகா கவிஞர் தமது பெயரை வெளிகாட்டிக்கொள்ள விரும்பமாட்டார், அல்லவா?


அரசர் கூறியதைக் கேட்டுப் புலவர்கள் அனைவரும் அதிர்ச்சியடைகின்றனர்.
எதற்காகச் சக்கரவர்த்தி இவ்வாறு கூறுகிறார்!
சுந்தரசோழர், தமிழ்ப் புலவர்களை இவ்வாறு குறைத்துப் பேசுபவர் இல்லையே...


உடனே வந்தியத்தேவன் எழுந்து நின்று,
பிரபு, அப்படி ஒரே அடியாக இப்பாடலை பொய் என்று சொல்லிவிட முடியாது!


இல்லாத விஷயங்களை சாதாரண மக்கள் கூறினால்தான் அது பொய். ஆனால் இராஜ நிர்வாகத்தில் ஈடுபட்டவர்கள் அவ்விதம் சொன்னால் அது இராஜதந்திரம். அதுவே கவிஞர்களும் புலவர்களும் கூறினால் அது கற்பனை, *அணி அலங்காரம், இல்பொருள் உவமை!
புலவர்கள் அனைவரும் வந்தியத்தேவனைப் பார்த்து,
யார் இவன்?
இவன் நம்மோடு வந்தவன் இல்லையே!
பலே! இந்த பிள்ளை தமிழ் இலக்கணங்களையும் கற்றறிந்து வைத்துள்ளானே!!
*தமிழ் இலக்கணம்


ஓ..! நீ காஞ்சியிலிருந்து ஓலை கொண்டு வந்தவன் தானே? கெட்டிக்காரப்பிள்ளை! நன்றாக என்னை மடக்கிவிட்டாய்.
புலவர்களே அந்த புலவனை தேடி தாங்கள் எங்கும் செல்ல வேண்டியதில்லை, அவனுக்கு கவியரசு என்ற பட்டமும் தேவையில்லை.
ஏற்கனவே அவன் தலையில் சுமக்க முடியாமல், பெரிய கிரீடத்தைச் சுமந்து கொண்டு இருக்கிறான்.


அவன் வேறு யாருமில்லை,
!?
!?
அடியேன்தான் அத்தகைய பாவத்தைச் சுமந்து கொண்டிருப்பவன்.


சுந்தரசோழர், தான் எதற்காக அப்பாடலைப் பாடினேன் என்று கூறத் தொடங்கினார்.
ஒரு சமயம் பழையாறையில் புலவர்களும், கவிஞர்களும் என்னைப் பார்ப்பதற்காக வந்தார்கள். அவர்கள் சோழ குலத்தின் வள்ளல் தன்மைப் பற்றிப் பல பாடல்கள் பாடினார்கள். அப்பொழுது "நான் அவருக்கு அதைக் கொடுத்தேன், இவருக்கு இதைக் கொடுத்தேன்!" என்றெல்லாம் என்னைப் பற்றிப் பாடினார்கள்.
அச்சமயம் இளைய பிராட்டி குந்தவையும் என் அருகில் இருந்தாள். புலவர்கள் பரிசு பெற்றுச் சென்ற பிறகு அவர்கள் பாடிய பாடல்களைக் குந்தவை புகழ்ந்து பாராட்டினாள். அப்போது நான் அவளிடம், "இந்தப் புலவர்களைவிட என்னால் நன்றாகப் பாடமுடியும்!" என்று சபதம் செய்தேன்.
சக்கரவர்த்தியின் கருத்ததைப் புலவர்கள் ஆமோதிக்கிறார்கள்.
நிச்சயமாக!
நிச்சயமாக!
குந்தவை


நான் பிறகு வேடிக்கையாக இப்பாடலைப் பாடினேன். "பாடியதற்காக எனக்குப் பரிசு கொடு" என்று குந்தவையிடம் கேட்டேன். அவள் கன்னத்திற்கு இரண்டு அறை பரிசாகக் கொடுத்தாள். குந்தவை அப்போது சிறிய குழந்தை... அது நேற்று நடந்தது போல் உள்ளது!
அற்புதம்!
அற்புதம்!
சக்கரவர்த்தி கூறியதைக் கேட்டுச் சின்ன பழுவேட்டரையரும், மகாராணி -யும் மகிழ்ச்சி அடைகிறார்கள்.
முன்னதாகவே புலவர்களை அழைத்திருக்க வேண்டும்.
சோழர் குலத்தில் பிறந்த இணையில்லாப் பெண்ணரசி அல்லவா இளவரசி குந்தவை! எந்த நாட்டு இராஜகுமாரனுக்கு அடிக்குமோ இளவரசியை மணந்து கொள்ளும் அதிர்ஷ்டம்!
ம்.....


இவ்வாறு நினைத்துக் கொண்டே தன் இடுப்பில் கை வைத்துத் தடவிப் பார்க்கிறான். இடுப்பில் இருந்த ஓலையைக் காணவில்லை.
அய்யோ! என்ன இது? இளவரசிக்காகக் கொண்டு வந்த ஓலை எங்கே போயிற்று! ஓலையில்லாமல் எப்படி இளவரசியைச் சந்திப்பது? கரிகாலரிடமிருந்துதான் நாம் வந்தோம் என்பதை எப்படி நிரூபிப்பது!
அப்போது எதிரில் நிற்கும் சின்ன பழுவேட்டரையரின் இடுப்பில் ஒரு ஓலை இருக்கிறது. அதைப் பார்க்கிறான் வந்தியத்தேவன்.
ஆ! நாம் இளவரசிக்காகக் கொண்டு வந்த ஓலை...!
ஆஹா, நன்றாக சிக்கிக் கொண்டோம்! அவருக்குத் தெரியாமல் அந்த ஓலையை எப்படியாவது எடுத்துவிட வேண்டும்.
சக்கரவர்த்தி தானே எழுதிப் பாடியதாகக் கூறியதைக் கேட்ட நல்லன் சாத்தனார் எழுந்து,
தாங்களே பாடியிருந்தால் என்ன? இந்தப் பாடல் அற்புதமான பாடல்தான்! சந்தேகமேயில்லை தாங்கள் இப்பாடலை எழுதியதன் மூலம் புவிச்சக்கரவர்த்தியாய் இருப்பதோடு கவிச்சக்கரவர்த்தியும் ஆனீர்கள்!
உண்மை!
நன்று!
நன்று!


இப்போது இந்தப் பாடலைப் பாடினால், மேலும் இரண்டு வரியையும் சேர்த்துக் கொள்வேன். இந்திரனுக்கு யானையும், சூரியனுக்குக் குதிரையும், சிவனுக்குப் பல்லக்கும் கொடுத்ததோடு நிறுத்திருக்க மாட்டேன்.
மார்க்கண்டேயனுக்காக மறலியைச் சிவபெருமான் உதைத்தார் அல்லவா? அந்த உதைக்கு எமன் தப்பித்துக் கொண்டான், ஆனால் அவனுடைய எருமைக் கிடா சிவனின் உதை தாங்காமல் செத்து விட்டது! எமன் வாகனம் இல்லாமல் திண்டாடிக் கொண்டிருப்பான். அவனுக்கு நான் எருமைக் கிடாவைப் பரிசளிப்பேன்,
அவனும் என்னைத் தேடிக்கொண்டு, ஜாம்ஜாமென்று வருவான். நமது கோட்டைத் தளபதி சின்ன பழுவேட்டரையரால் கூட அவனைத் தடுத்து நிறுத்த முடியாது!
ஹா ஹா ஹா ஹா.....
நான் என்ன பாவம் செய்தேன்... ஏன் என்னை வைத்துக் கொண்டே இவ்வாறெல்லாம் பேசுகிறார்!


சக்கரவர்த்தி கூறியதைக் கேட்ட சின்ன பழுவேட்டரையர்,
பிரபு! தங்களுடைய சேவையில் எமனுடன் போர் தொடுக்கவும் நான் சித்தமாயிருப்பேன். (என்று கர்ஜித்தார்)
அதற்கு ஐயமில்லை, தளபதி! ஆயினும் எமனுடன் போர் தொடுக்கும் சக்தி மானிடர் யாருக்கும் இல்லை. எமனைக் கண்டு அஞ்சாமலிருக்கத்தான் நாம் இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும்.
சக்கரவர்த்தியின் மனநிலையை மாற்றும் எண்ணத்தில் சின்ன பழுவேட்டரையர்,
பிரபு! தாங்கள் சங்கப் பாடல் ஒன்றைக் கேட்க வேண்டும் என்று கேட்டிருந்தீர்கள். அதைப் புலவர்களைப் பாடச் சொல்லலாம் அல்லவா!


ஆம், ஆம் மறந்துவிட்டேன்! என்னுடைய உடல் மட்டுமல்ல, உள்ளமும் சுவாதீனம் இழந்திருக்கிறது. தளபதி, எங்கே அந்த சங்கப் பாடலைப் பாடச் சொல்லுங்கள்.
கோட்டைத் தளபதி சின்ன பழுவேட்டரையர், நல்லன் சாத்தனாரைப் பார்த்துக் குறிப்பிட்ட ஒரு பாடலைப் பாடச்சொல்லி சமிக்ஞை செய்கிறார்.
ம்
*வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்து உணவும் காழகத் தாக்கமும்....
*கவிதை
பாடலைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த சுந்தரசோழர் சட்டென்று,
போதும், போதும் நல்லன் சாத்தனாரே...! தளபதி! கரிகால் வளவர் காலத்தில் ஈழ நாட்டிலிருந்து உணவுப் பொருட்கள் வந்துகொண்டிருந்தன என்று இப்பாடல் சொல்கிறது. அதை நான் அறிவதற்காகத் தானே இந்த புலவர்களை அழைத்து வந்தீர்?



சரி, புலவர் பெருமக்கள் அனைவருக்கும் பரிசுகள் கொடுத்து அனுப்பிவிடலாம் அல்லவா?
ஆகட்டும் அரசே!
என்று கூறியவுடன் புலவர்கள் அனைவரும் எழுந்து வாழ்த்து கூறிச் செல்கின்றனர்.
சுந்தரசோழச் சக்கரவர்த்தி வாழ்க!
புலவர்களைக் காக்கும் பெருமான் வாழ்க!
நில்!
தம்பி, "அபயம், அபயம்" என்று ஏதோ சொன்னாயே! அதை முழுவதுமாகச் சக்கரவர்த்தியிடம் கூறிவிட்டுச் செல்.
ஆகா! எப்படியாவது இந்தப் புலவர்கள் கூட்டத்தோடு கூட்டமாக நாமும் தப்பிவிடலாம் என்றால், இந்த எமகிராதகர் சின்ன பழுவேட்டரையரிடம் இருந்து தப்பிக்க முடியாது போலிருக்கிறதே! எப்படியும் சமாளித்துத்தான் ஆக வேண்டும்..!


அரசே! பழைய வாணர் குலத்தில் நான் ஒருவன் தான் பிரதிநிதியாக மிஞ்சி இருக்கிறேன்.
தங்கள் திருப்புதல்வர் மனம் மகிழும்படி சோழப் பேரரசுக்கு தொண்டும் புரிந்து வருகிறேன்.
எங்கள் பூர்வீக ராஜ்யத்தில் ஒரு சிறு பகுதியாவது அடியேனுக்கு திருப்பி தருவதற்கு தாங்கள் அருள் புரிய வேண்டும் அரசர்க்கரசே!
அபயம்! அபயம்!
என்று சாமர்த்தியமாகப் பதிலளித்தான் வந்தியத்தேவன்.
அச்சமயம் அரண்மனை மருத்துவர், சக்கரவர்த்திக்கு மருந்து கொண்டு வருகிறார்.
சக்கரவர்த்திக்கும், மகாராணிக்கும் அடியேனின் வணக்கம்!
வாருங்கள் வைத்தியரே.
தாயே! இது விசேஷமான மூலிகை, மலைநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டது. தினமும் மூன்று வேளை உணவுக்கு முன் இதைக் கொடுக்க வேண்டும்.


பிரபு! மருந்தினால் ஏதாவது பலன் தெரிகிறதா?
பலன் தெரிவதாக மருத்துவரும் சொல்லுகிறார், தேவியும் சொல்லுகிறார். ஆனால் எனக்குத்தான் என்னமோ நம்பிக்கை உண்டாகவில்லை. உண்மையைச் சொன்னால் தளபதி, இதெல்லாம் வீண் முயற்சி.
ஏதோ என் மனம் சொல்கிறது, நான் அதிக காலம் இந்தப் பூவுலகில் இருக்க மாட்டேன் என்று!
பிரபு! தாங்கள் இவ்வாறு மனமுடைந்து பேசக் கூடாது. தாங்கள் குல முன்னோர்கள்...
போதும் தளபதி! போதும்! என் குல முன்னோர்கள் யமனைக் கண்டு அஞ்சியது இல்லை என்று சொல்லுகிறீர்கள்.
எனக்கும், எனது குல முன்னோர்களைப் போல போர்க்களத்தில் முன்னணியில் நின்று போர்செய்து உயிர்விடும் பாக்கியம் கிடைக்குமானால், அத்தகைய மரணத்துக்கு நான் சிறிதும் அஞ்ச மாட்டேன்.


சக்கரவர்த்தி, தாங்கள் அஞ்சுவதாக நாங்கள் கருதவில்லை. அரண்மனை வைத்தியர் கூட தங்களுக்கு அபாயம் ஏதும் இல்லை என்று கூறுகிறார். ஜோதிடர்களும் அபாயம் இல்லை என்றே சொல்கிறார்கள்.
ஆனால் இந்தப் பிள்ளைதான் தங்களிடம் ஏதோ அபாயம் என்று கூறிக் கொண்டிருந்தான்.
வந்தியத்தேவன், தளபதியைப் பார்த்து விட்டு, மகாராணியைக் கருணை செய்யும்படிப் பார்க்கிறான். மகாராணியும் அவனைத் தாயுள்ளத்துடன் பார்க்கிறார்.
தாயே! பக்தனுக்காகப் பரிந்து, பார்வதிதேவி பரமசிவனாரிடமும், லஷ்மிதேவி மஹாவிஷ்ணு விடமும் பேசுவது போல் தாங்கள் எனக்காகச் சக்கரவர்த்தியிடம் பேச வேண்டும்.


இந்தப் பிள்ளை பிறந்தவுடனே சரஸ்வதி தேவி இவனுடைய நாவில் எழுதி விட்டாள் போலும்! இவனுடைய வாக்குவன்மை மிகவும் அதிசயமாய் இருக்கிறது.
மகாராணி கூறியதைக் கேட்ட சக்கரவர்த்தி,
தளபதி இந்த இளைஞனை எனக்கு மிகவும் பிடித்து விட்டது. தேவியின் முகத்தைப் பார்த்தால் இவனை மூன்றாவது பிள்ளையாகவே சுவீகாரம் எடுத்துக் கொண்டு விடலாமா என்று யோசிப்பது போல் தெரிகிறது.
இவனுடைய கோரிக்கையை நிறைவேற்றி வைக்கலாம் அல்லவா? அதில் ஒன்றும் கஷ்டம் இராதே? உமது அபிப்ராயம் என்ன?
அடடே! எனது பூர்வீக ராஜ்யம் கூடிய விரைவில் கிடைத்துவிடும் போல் இருக்கிறதே! (வந்தியத்தேவன்)


இதில் அடியேனின் அபிப்பிராயத்துக்கு என்ன இடமிருக்கிறது? இதைப் பற்றி இளவரசர் கரிகாலரிடம் அல்லவா கேட்க வேண்டும்.
பிரபு! இளவரசரைக் கேட்டால், பழுவூர் தேவரைக் கேட்க வேண்டும் என்று சொல்லுகிறார். பழுவூர் தேவரோ இளவரசரைக் கேட்க வேண்டும் என்று சொல்லுகிறார்! இரண்டு பேருக்கும் நடுவில் என் கோரிக்கை.....


பிள்ளாய்! நீ கவலைப்படாதே! இரண்டு பேரையும் சேர்த்து வைத்துக் கொண்டே கேட்டுவிடலாம்.
தளபதி! என்னைக் காஞ்சிக்கு வரும்படி கரிகாலன் ஓலை எழுதியிருக்கிறான். ஆனால், என்னால் அங்கு செல்ல இயலாது. அவனைத் தஞ்சைக்கு வரும்படி மறு ஓலை எழுத வேண்டும்.
பிரபு!


இளவரசர் இச்சமயம் காஞ்சியை விட்டு இங்கு வரலாமா? வடதிசையில் நம் பகைவர்கள் தக்க சமயம் எதிர் பார்த்து அல்லவா காத்திருக்கிறார்கள்!


அதை மலையமானும், பார்த்திபேந்திரனும் அங்கிருந்து பார்த்துக் கொள்ளட்டும். இச்சமயம் கரிகாலன் இங்கே என் பக்கத்தில் இருக்க வேண்டும். அப்படியே அருள்மொழியையும் உடனே இங்கு வந்து சேரும்படி அழைப்பு அனுப்ப வேண்டும். இரண்டு பேரையும் வைத்துக் கொண்டு ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசி முடிவு செய்ய விரும்புகிறேன்.
ஆகட்டும் அரசே! உடனே ஏற்பாடு செய்கிறேன்.
அருள்மொழி இங்கு வரும் போது ஈழத்துக்கு உணவு அனுப்புவது பற்றி உங்கள் ஆட்சேபத்தையும் அவனிடம் தெரிவிக்கலாம்.
சக்கரவர்த்தி! மன்னிக்க வேண்டும். ஈழத்துக்கு உணவு அனுப்புவதை நான் ஆட்சேபிக்கவில்லை, தனாதிகாரியும் ஆட்சேபிக்கவில்லை.


அப்போது யார்தான் ஆட்சேபிக்கிறார்கள்?
மக்கள் ஆட்சேபிக்கிறார்கள்! சோழ நாட்டுக் குடிமக்கள் ஆட்சேபிக்கிறார்கள்!
குடிமக்கள் ஆட்சேபிக்கும் காரியங்களை, அருள்மொழி ஒரு நாளும் செய்யமாட்டான்! எல்லாவற்றுக்கும் அவன் ஒரு தடவை இங்கு வந்துவிட்டுப் போகட்டும். பெரிய பழுவேட்டரையர் இங்கு வந்த பிறகு, இலங்கைக்கு ஆள் அனுப்புவதைப் பற்றி முடிவு செய்யலாம்.
(வந்தியத்தேவனைப் பார்த்து) இந்தப் பிள்ளை காஞ்சியில் இருந்து ஒரே மூச்சில் வந்திருக்கிறான். இளவரசர்கள் இருவரும் இங்கு வந்து சேரும்வரை, இவன் இங்கேயே தங்கி இளைப்பாறட்டும். மறு ஓலையை வேறு ஒரு நபரிடம் கொடுத்து, காஞ்சிக்கு அனுப்புங்கள்.
தங்கள் உத்தரவு அரசே!


தளபதி இந்த பிள்ளை நமது பிரதம விருந்தாளி! இவனை நன்றாகக் கவனிக்கும் படிச் சொல்லுங்கள்.


இந்தப் பிள்ளையை நானே நன்றாகக் கவனித்துக் கொள்கிறேன் அரசே!
சக்கரவர்த்தி, நம்மைப் பாதாளச் சிறையில் அடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யாமல் விடமாட்டார் போலிருக்கிறதே!
அய்யோ! பெரிய பழுவேட்டரையர் வருவதற்குள் கோட்டையை விட்டு எப்படியாவது தப்பித்தாக வேண்டும்!


சித்திர மண்டபம்.
சின்ன பழுவேட்டரையர் மாளிகை
எப்போதும் கலைக்கு முக்கியத்துவம் அளிக்கும் சோழர்கள், தங்கள் வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகளைச் சித்திர மண்டபத்தில் ஓவியமாக வரைந்து வைத்திருக்கிறார்கள்.
சின்ன பழுவேட்டரையர் தன் மாளிகையின் நடையில் பதட்டத்துடன் காணப்படுகிறார்.
ஆதித்த கரிகாலரிடமிருந்து வந்திருக்கிறான்.
குந்தவையிடம் தருவதற்காக இரகசிய ஓலை வேறு எடுத்து வந்திருக்கிறான்.


அவன் முழியைப் பார்த்தாலும் சந்தேகமாக இருக்கிறது. ஆனால் தமையனாரோ அவனுக்கு முத்திரை மோதிரம் அளித்துள்ளார். இதுதான் ஒரே குழப்பமாக உள்ளது. சரி, பெரியவர் வந்தால் விஷயம் வெளிப்பட்டு விடப்போகிறது. அதுவரை நாம் சந்தேகிப்பதை அவனிடம் வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவனைக் கண்காணிக்க வேண்டும்.
அதே சமயத்தில் நமது நாயகன், சித்திர மண்டபத்தில் இருக்கும் ஓவியங்களை ஒவ்வொன்றாகப் பார்த்தும், ரசித்தும் வருகிறான். விஜயாலய சோழன் திருபுறம்பியப் போரில் செய்த வீர சாகசத்தை இங்கு ஓவியமாக வரைந்திருக்கிறார்கள்.
ஆஹா, ஒரு ஓவியனின் கை வண்ணத்திலே இவ்வளவு வீரம் தெரிகிறது என்றால், உண்மையில் விஜயாலய சோழரின் வீரத்தை நேரடியாக கண்டவர்கள் அவரைப் பற்றிப் பேசி எப்படி எல்லாம் சிலாகித்து இருப்பார்கள். இவர் அல்லவா வீரர்!


பழுவேட்டரையர் ஒருவர், முதலாம் ஆதித்தனுக்கு அரசனாக முடிசூட்டும் காட்சியை ஓவியமாக வரைந்திருக்கிறார்கள்.
பழுவேட்டரையர்களுக்கும், சோழ குலத்தவர்களுக்கும், நெருங்காலமாகவே உறவு இருந்திருக்க வேண்டும்!
தக்கோலத்தில் ராஷ்ட்டிரகூடப் படையினருடன் நடந்த போரில், இராஜாதித்தன் வீர சொர்க்கம் அடைந்த போது, "ராஷ்ட்டிரகூடப் படைகள் தோற்று ஓடுகின்றன" என்று முழக்கமிட்டு வீரர்களை மனந்தளரவிடாமல் போரிடச் செய்தார் ஒரு பழுவேட்டரையர். அதை அப்படியே தத்ரூபமாக ஓவியமாக வரைந்திருக்கிறார்கள்.


பராந்தகச் சக்கரவர்த்தி நடத்திய பல போர்களில் முன்னணியில் புலிக்கொடி எடுத்துச் சென்றவர்கள் பழுவேட்டரையர்கள்.
எங்கும் பழுவேட்டரையர்கள்! எதிலும் பழுவேட்டரையர்கள்! பழுவேட்டரையர்கள், சோழ குலத்திற்கு மிகவும் முக்கியமானவர்களாக இருந்தி-ருப்பதை அல்லவா இந்த ஓவியங்கள் கூறுகின்றன!
என்ன தம்பி, சித்திரங்களை எல்லாம் பார்த்தாயா? எப்படி இருக்கிறது?
தளபதி, சித்திரங்கள் அனைத்தும் அற்புதம்! அதைவிட சோழ நாட்டிற்குப் பழுவேட்டரையர்களின் சேவை, அளவிட முடியாதது என்பதை இந்தச் சித்திரங்கள் மூலம் நான் தெரிந்து கொண்டேன்.
மகாராணி கூறியது உண்மைதான்! நீ நல்ல கெட்டிக்காரப்பிள்ளை. உன் நாவில் சரஸ்வதி நடனமாடுகிறாள்.


தனது மறுமொழியால் தளபதி மகிழ்ச்சியுற்றார் என்பதை உணர்ந்த வந்தியத்தேவன், உடனே,
தளபதி, நான் தஞ்சைபுரியைச் சுற்றிப் பார்க்க வேண்டும்.
என்ற தன் கோரிக்கையைத் தளபதியிடம் வைக்கிறான்.
இவனைச் சுற்றிப் பார்க்க அனுமதிக்கலாமா? அல்லது ஏதாவது அறையில் அடைத்து வைத்திருந்து, பின் தமையனார் வந்ததும் விசாரித்துவிட்டு இவனை அனுப்பலாமா?
ம்... நம் கட்டுக்காவலை மீறி இவனால் எங்கு சென்று விட முடியும்.
நான் புறப்படலாம் அல்லவா?
தாராளமாக, ஆனால் உன்னுடன் என் காவலர்களையும் அனுப்பி வைக்கிறேன். அவர்கள் உனக்குத் தலைநகரை நன்றாகச் சுற்றிக் காட்டுவார்கள்.



ம்... யார் அங்கே!
சின்ன பழுவேட்டரையரின் ஆணைக்கிணங்கி, இரு காவலர்கள் பூமியே அதிரும்படி வந்தியத்தேவன் அருகில் வந்து நிற்கிறார்கள்.
காவலன் தனது கரகரப்பான குரலில்,
அடேங்கப்பா! இந்த எமகிராதகர்களிடம் இருந்து நாம் எப்படித் தப்பிப்பது, ம்...
என்ன தம்பி, போகலாமா?
காவலர்கள் இருவரும் வந்தியத்தேவனுக்குத் தஞ்சை கோட்டையின் பல இடங்களைச் சுற்றிக்காட்டி வருகிறார்கள். அப்போது வந்தியத்தேவன்,
உங்கள் இருவரில் யார் நன்றாக ஓடுவீர்கள்?
நாங்கள் இருவருமே நன்றாக ஓட மாட்டோம்.



அப்படியென்றால் எப்படிக் காவல் தொழிலுக்குச் சரியாக வரும்?
எங்களால் ஓட முடியாது. ஆனால் எங்களிடம் இருந்து தப்பிக்க முயன்றால், அவர்களைக் கசக்கி பிழிந்து விடுவோம்.
ஹா... ஹா...
அப்படியா! பலே பலே, தளபதி சரியான ஆட்களைத் தான் என்னுடன் துணைக்கு அனுப்பியிருக்கிறார்.


நல்ல கெட்டிக்காரப்பிள்ளை.
ஐயா!
என்ன தம்பி?
மதிய விருந்தின் போது, சோழ நாட்டின் குடிநீர் மிக ருசியாக இருந்ததால், சற்று அதிகமாகக் குடித்து விட்டேன்.
புரிகிறது தம்பி, சற்று அந்தப் பக்கம் ஒதுங்கிவிட்டு வா.
தப்பிக்கலாம் என்று கனவிலும் எண்ணாதே,
கசக்கிப் பிழிந்து விடுவோம்!


எனக்குத் தெரியாதா, தங்களின் வீரத்தைப் பற்றி! இதோ வந்து விடுகிறேன்.
இப்படியே இந்த புதருக்குள் புகுந்து, பழுவேட்டரையரின் ஆட்களிடமிருந்து தப்பிவிட வேண்டியதுதான்.
ஆஹா!
முட்டுச் சந்தில் வந்து அகப்பட்டு விட்டோமே. என்ன செய்வது?
தப்பிக்க வழி இல்லையே!


ஏதாவது வழி இல்லாமலா போய்விடும்...
ஆங்...! நல்ல யோசனை!
ஆஆஆ...
என்ன ஆயிற்று அவனுக்கு? ஏதாவது விஷ ஜந்துக்கள் கடித்துவிட்டதா?
இப்ப என்ன செய்வது?
என்று காவலர்கள் பதறுகிறார்கள்.






என்று கத்திக்கொண்டே புதருக்குள்ளிருந்து வெளியே ஓடி வருகிறான் வந்தியத்தேவன்.




அப்போது காவலர்கள் சற்றும் எதிர்பாராத நேரத்தில், வந்தியத்தேவன் ஆகாசத்தில் தாவி குதித்து, "பங்க் பங்க்" என்று முகத்தில் குத்துவிடுகிறான்.
மாட்டினால் தானே கசக்கிப் பிழிவீங்க.
இந்தா வாங்கிக்கோ.
..பாஞ்...


கசக்கிப் பிழிஞ்சிருவியா...!
இந்தா நீயும் வாங்கிக்கோ.
பளீச்
வந்தியத்தேவனின் தாக்குதலைத் தாங்கமுடியாமல் காவலர்கள் நிலைத் தடுமாறிக் கீழே விழுகிறார்கள்.
அய்யோ..
அய்யோ
காவலர்களைத் தாக்கிவிட்டு வந்தியத்தேவன் ஓடுகிறான்.


அவன் தப்பி ஓடுவதைக் கண்ட காவலன் ஒருவன்,
ஒற்றன் தப்பிவிட்டான்...! பிடியுங்கள்...!
தஞ்சை கோட்டைக்குள் ஒற்றனா...!
கோட்டைக்குள் ஒற்றனா...!
பிடியுங்கள் அவனை...! விடாதீர்கள்...!
அடே! ஓடாதே நில்லு...
முடிந்தால் பிடியுங்கள்.


என்று கூறிக்கொண்டே ஓடுகிறான் வந்தியத்தேவன்.
ஏய்... நில்லு...
ஓடாதே...
பிடியுங்கள்...
காவலர்களும் அவனை விடாமல் துரத்தி ஓடுகிறார்கள்.
நீயாக நின்றுவிடு..!
நாங்களே பிடித்தால், உன் கதை முடிந்தது!
வழி விடுங்கள்! வழி விடுங்கள்!
ஆகா! வேளக்காரப்படை குறுக்கே வந்து விட்டதே. வந்தியத்தேவன் அவ்வளவுதான்!


யார் இவன்?
பார்த்தால் இராஜகுமாரனைப் போல் அல்லவா தெரிகிறான்?
வேளக்காரப்படையின் உள்ளேயே நுழைந்து ஓடுகிறானே... என்ன துணிவு இவனுக்கு! யார் இவன்?
வெற்றிவேல் வீரவேல்!
வெற்றிவேல் வீரவேல்!




வந்தியத்தேவன் வேளக்காரப்படையினுள் நுழைந்து ஓடிவிடுகிறான். ஆனால் அவனை துரத்திக்கொண்டு வந்த காவலர்கள் அதற்குள்ளே நுழையத் தயங்கி நின்று விடுகிறார்கள்.


இனி என்ன செய்வது! வேளக்காரப்படைக்குள் நுழைந்தால் பெரிய வம்பா போயிடுமே...!
சட்டென்று சாலையின் மறுபக்கத்தில் இருக்கும் காவலர்களிடம்,
அந்த வாலிபனை பிடியுங்கள்....
உடனே எதிர்திசையில் இருந்த காவலர்கள் வந்தியத்தேவனைப் பிடிக்கத் துரத்துகிறார்கள்.
ஏய்!
நில்லு!
இன்னும் எவ்வளவு தூரம் இவர்கள் துரத்துவார்கள் என்று தெரியலையே!


சட்டென்று தாவி அருகில் இருந்த மதில் சுவற்றின் உச்சியை அடைந்துவிட்டான் வந்தியத்தேவன்.
என்ன நேர்ந்தாலும் சரி! இவர்களிடம் மட்டும் அகப்பட்டு விடக்கூடாது!
அடே! மரியாதையாகச் சொல்கிறேன், கீழே இறங்கிவிடு...
புறமுதுகில் அடிபட்டுக் கொள்ளாதே...!
நீ எங்கு ஓடினாலும் இந்தக் கோட்டையைவிட்டுத் தப்பவே முடியாது!
ஈட்டியை அவன் மீது பாய்ச்சுங்கள்!
வந்தியத்தேவனை நோக்கிப் பல ஈட்டிகள் சடசடவென்று பாய்கின்றன,
கொஞ்சம் பிசகினாலும் மரணம்தான்.


ஆனால் நம் வீரனுக்கோ இதெல்லாம் சர்வ சாதாரணம்.
அடேயப்பா! எங்கிருந்து எங்கு தாவுகிறான்! அவனுக்கு வாலு ஏதாவது இருக்கிறதா என்று பாருங்கள்.
இதற்கு மேல் நீ ஓடுவற்கு வழியே இல்லை! எங்களிடம் வசமாக மாட்டிக்கொண்டாய்.
அடப்பாவி குதித்துவிட்டாயா!


விடாதீர்கள் அவனை!
ம்! அவன் எங்கு சென்று விடுவான் இந்தக் கோட்டையை விட்டு?
ஈட்டியை அவன் மேலே எரியுங்கள்.
சரியான வீரனைத்தான் கரிகாலர் தேர்வு செய்து அனுப்பி இருக்கிறார், இவ்வளவு உயரமான கட்டடத்திலிருந்து குதிக்கும் தைரியம் வேறு யாருக்கு வரும். நமது வந்தியத்தேவன் உண்மையிலேயே பெரிய வீரன்தான்!


தஞ்சை கோட்டை
வந்தியத்தேவனை தேடி பழுவேட்டரையர்களின் ஆட்கள்.
வேகமா வாங்கடா! இன்றைக்கே அவனைப் பிடிச்சாகணும். இது நம்ம சின்ன எஜமான் உத்தரவு.
அவன் இல்லாமல் போனால், நாம் தொலைந்தோம்!
அங்கப் பாரு... அந்தப் பக்கம்...


நல்லா தேடுங்கடா!
அவன் எங்கப் போய் விடப் போறான்!
கோட்டைக் கதவுகள் அனைத்தும் மூடி இருக்கிறது, கோட்டையைச் சுற்றி அகழி இருக்கிறது! அப்புறம் எப்படி அவனால் தப்பிக்க முடியும்?


இவ்வாறாக சின்ன பழுவேட்டரையரின் ஆட்கள் வந்தியத்தேவனைத் தஞ்சை கோட்டை முழுவதும் சல்லடை போட்டு தேடிக் கொண்டிருக்க,
நமது நாயகன் வந்தியத்தேவனோ நிம்மதியாக மரத்தின் மேல் தூங்கிக் கொண்டிருக்கிறான்.
இவன் யார்? இவன்தான் காஞ்சியில் இருந்து வந்த ஒற்றனாக இருக்க வேண்டும். இந்த நேரத்தில் இங்கு வந்து பதுங்கிக் கொண்டிருக்கிறான் என்றால், ம்...
காவலர்களின் கண்ணில் அகப்படாத வந்தியத்தேவன், மந்திரவாதி ரவிதாசனின் கண்ணில் அகப்பட்டுவிட்டான்.
காஞ்சியில் இருந்து வந்த வாலிபன் நம்ம எஜமான் கண்ணுலேயே மண்ணைத் தூவிட்டு தப்பி விட்டானே! பெரிய ஆள்தான் அவன்.


இவர்கள் யாரைத் தேடிக்கொண்டு வருகிறார்கள்? அய்யோ! நெருங்கி வந்துவிட்டார்களே, சின்ன பழுவேட்டரையரின் ஆட்களிடம் சிக்கினால் அவ்வளவுதான்.
நன்றாகத் தேடுங்கள்.


அடப்பாவி, இவர்கள் உன்னைத் தேடி வந்தவர்களா? அல்லது என்னைத் தேடி வந்தவர்களா..? தெரியவில்லையே!


நாம் வருவதைக் கண்டு தான் எவனோ குளத்தில் குதிச்சிருக்கான்!
யார் அது?
குதிக்கட்டும் குதிக்கட்டும், அதில் பயங்கரமான விஷப் பாம்புகளும், முதலைகளும் இருக்கின்றன. அது அவனைத் தீர்த்து விடும்.
அட விடுப்பா, மனிதன் யாரும் இந்த பாழடைந்த குளத்தில் குதித்திருக்க மாட்டான். ஏதாவது காட்டுப் பன்றியாக இருக்கும்.
எதுக்கும் நல்ல பெரிய கல்லாப் பாத்து ஆளுக்கொரு கல்லைக் குளத்தில் தூக்கிப் போடுங்கள். அவன் சாகட்டும்...
இன்னும் எத்தனைக் காலம் நாம் ஒளிந்து வாழ்வதென்று தெரியவில்லையே!


ஒருவேளை வேளக்காரப் படையோடு கலந்து தப்பி இருப்பானோ!
பெரிய ஜகஜாலப் பிரதாபனாய் இருக்கிறானே!
இப்படி நம்மை இராவெல்லாம் அலைய வைத்துவிட்டானே!
அவன் மட்டும் நம் கையில் சிக்கட்டும்... நசுக்கிவிடுவோம்!
இவ்வாறு பேசிக்கொண்டே காவலர்கள் படை திரும்பிச் செல்கிறது.


லதா மண்டபம்.
வெளியே காவலர்கள் பங்கா வீசுகிறார்கள்.
இளையராணிக்குக் காற்று போதவில்லையாம்!
இன்னும் கொஞ்சம் வேகமாகக் கயிற்றை இழுப்பாயாம்.
பங்கா என்பது அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட ஒருவித விசிறி. இது அறையின் உச்சியில் கட்டப்பட்டிருக்கும், வெளியிலிருந்து ஒருவர் கயிற்றைப் பிடித்து இழுத்தால், விதானத்தில் தொங்கவிடப்பட்டிருக்கும் விசிறி அசையும். அதிலிருந்து காற்று வரும்.


லதா மண்டபத்தின் உள்ளே பழுவூர் இளையராணி நந்தினி பஞ்சணையில் ஒய்யாரமாக வீற்றிருக்கிறாள். யாருக்காகவோ காத்திருப்பதாகத் தோன்றுகிறது.
மந்திரவாதி ஏன் இன்னும் வரவில்லை!



அதே சமயத்தில் நமது நாயகன்,
சின்ன பழுவேட்டரையரின் ஆட்களிடமிருந்து தப்பிவிட்டோம். ஆனால் இந்தக் கோட்டையை விட்டு எப்படி தப்புவது? யார் நமக்கு உதவி செய்யக் கூடும்? ம்...!
ஒருவேளை! பழுவூர் இளையராணி உதவி செய்தால்தான் உண்டு... அந்த மாய மோகினியை எப்படிச் சந்திப்பது? இந்தக் கோட்டைக்குள் அவள் எங்கிருப்பாளோ!
என்று அரைத் தூக்கத்தில் சிந்தித்துக் கொண்டிருந்தான்.
அப்போது எங்கிருந்தோ ஒரு பெண்ணின் குரல் கேட்கிறது,
மந்திரவாதி! மந்திரவாதி!
யார் இவள்? யாரை அழைக்கிறாள்? அதுவும் இந்த அர்த்த ராத்திரியில்!
ஏய்... நான் கூப்பிடுவது உன் காதில் விழவில்லையா?
உனக்காக இளையராணி காத்திருக்கிறார்கள்,
விரைவாக வா.


ஏந்த இளையராணி? ம்... பழுவூர் இளையராணி நந்தினிதேவியா? அல்லது மதுராந்தகத் தேவரை மணந்து கொண்ட சின்ன பழுவேட்டரையரின் மகளாகவும் இருக்கலாம்...
யாராக இருந்தால் என்ன? நமக்கும் வேறு வழியில்லை, கிடைக்கும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியதுதான்!
துணிவு ஒன்றையே துணையாகப் பெற்ற நம் வந்தியத்தேவன் அந்த மரத்திலிருந்து தாவிக் குதித்து, மதில் சுவற்றின் மேல் காத்திருக்கும் பெண்ணை நோக்கிச் செல்கிறான்.
ஒருவேளை... யாரோ நமது சுபாவத்தை அறிந்து, ஒரு பெண்ணைக் கொண்டு நம்மைப் பிடிப்பதற்காகச் சதிவலை விரிக்கிறார்களோ!
இருவரும் மரங்கள் சூழ்ந்த இருட்டுப் பகுதியில் நடந்து செல்கிறார்கள். அப்போது கொஞ்சம் நிலா வெளிச்சம் அவன் முகத்தில் படுகிறது. அந்தப் பெண் இவனை வியப்புடன் பார்க்கிறாள்.
இவள் என்ன நம்மை இப்படி உற்று உற்றுப் பார்க்கிறாளே! என்ன செய்வது... வேறு வழி இல்லை, சமாளித்துத்தான் ஆக வேண்டும்.


என்னை ஏன் அப்படி பார்க்கிறாய்?
நீ... நீதானா?
நான், நான் இல்லாவிட்டால் வேறு யாராயிருப்பேன்?
சென்ற முறை நீ வந்திருந்த போது பெரிய மீசை வைத்திருந்தாயே?
நாம் மந்திரவாதி இல்லை என்பதை இந்தப் பெண் கண்டுபிடித்து விடுவாளோ! சரி சமாளிப்போம்.


நல்ல கேள்வி கேட்டாய்! என்னைப் போல் இரவில் சுவர் ஏறி குதித்து வருகிறவன் அடிக்கடி வேஷத்தை மாற்றிக் கொள்ளாவிட்டால் எப்படி?
முன்பைவிட இப்போது இளமையாக தோன்றுகிறாயே?
உற்சாகம் இருக்கும் போது இளமை தானே வருகிறது.
அப்படி உனக்கு என்ன உற்சாகம் வந்தது?
உங்கள் இளையராணியின் தயவு இருக்கும்போது உற்சாகத்துக்கு எனக்கு என்ன குறை?
பரிகாசம் செய்ய வேண்டாம், இன்றைக்கு எங்கள் எஜமானி இளையராணிதான். ஆனால் நிச்சயம் ஒரு நாள் மகாராணி ஆவார்கள்!
அதைத்தான் நானும் சொன்னேன்.
இவள் வேறு கேள்வி மேல் கேள்வி கேட்டுக்கொண்டே வருகிறாளே...


என்று நினைத்துக்கொண்டே வர, எதிரே அழகிய லதா மண்டபம் தெரிகிறது.
ஆகா! இது யாருடைய மண்டபம்! இவ்வளவு அழகாக இருக்கிறதே!
வந்தியத்தேவனும் வாசுகியும் லதா மண்டபத்திற்கு வருகிறார்கள்.
அங்கிருக்கும் காவலர்கள் வழக்கம் போல் வந்தியத்தேவனைத் தடுக்கிறார்கள்.
நில்லுங்கள்!


உரத்த குரலில் வாசுகி,
ராணி... மந்திரவாதி வந்திருக்கிறார்.
உள்ளே வரச்சொல்! அவனுக்காக எவ்வளவு நேரம் காத்திருப்பது.
இளையராணி குரலைக் கேட்டதும் காவலர்கள் வழிவிடுகிறார்கள்.
ராணி அழைக்கிறார்கள் உள்ளே வா...
ரவிதாசனை எதிர்பார்த்துக் கொண்டிருந்த நந்தினிக்கு, வந்தியத்தேவனை அந்நேரத்தில் அங்கு கண்டதும் அதிர்ச்சி. ஆனால், அவள் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.


இவன் இந்நேரத்தில் எப்படி இங்கு வந்தான்!
மந்திரவாதிக்காகப் போட்டு வைத்திருந்த ஏணியில், இவன் ஏறி வந்திருக்கிறான்.


உண்மையிலேயே நீ பெரிய மந்திரவாதி தான்!
நந்தினியை பஞ்சணையில் கண்டதும் அப்படியே திகைத்துப் போய் நின்றுவிட்டான் வந்தியத்தேவன்.
யார்தான் திகைத்துப் போகமாட்டார்கள்!


வந்தியத்தேவனிடம் அந்தரங்கமாகப் பேச எண்ணிய இளையராணி, பணிப் பெண்ணைப் பார்த்து,
வாசுகி! ஏன் இங்கேயே மரம் போல் நிற்கிறாய், உன் இடத்துக்குப் போ. யாராவது வரும் காலடிச் சத்தம் கேட்டால் கதவைப் படார் என்று சாத்து!
இதோ நான் போகிறேன்.
அப்பெண்ணை என்ன மாயமந்திரம் செய்து ஏமாற்றினாய்?


நிலா வெளிச்சத்தில் ஒரு புன்னகை புரிந்தேன். அவ்வளவுதான்.
அதற்கு அவள் சரிப்பட்டு வராவிட்டால், தாங்கள் எனக்கு அளித்த முத்திரை மோதிரத்தைக் காட்ட எண்ணியிருந்தேன்.


என்னை நீ பார்க்க வேண்டுமென்று எண்ணி இருந்தால், அந்த மோதிரம் இருக்கும் போது பட்டப்பகலில் பகிரங்கமாக வந்திருக்கலாமே?
இவளுடைய குரல், கள்ளின் போதையைக் காட்டிலும் அதிக போதையாக இருக்கிறதே!
பேசுவதற்கு நா ஏன் எழவில்லை? இவள் குரல் கேட்டு நம் மதி ஏன் இப்படி மயங்குகிறது!
எனினும் சுதாரித்துக் கொண்டு,


ஆங்... வந்திருக்கலாம். ஆனால் உங்கள் மைத்துனர் சின்ன பழுவேட்டரையரின் ஆட்கள் என்னை எங்கே வரவிட்டார்கள்? என்னை பின் தொடர்ந்து கொண்டே அல்லவா இருந்தார்கள்.
அவர்களிடமிருந்து தப்பி வருவதற்குள் போதும், போதும் என்றாகிவிட்டது.
நாம் இவனிடம் முத்திரை மோதிரத்தை அளித்தது சரிதானா?
ஆமாம்... சின்ன பழுவேட்டரையரின் ஆட்கள் எதற்காக உம்மைத் தேடுகிறார்கள்?
பனைமரம் இலட்சினை உள்ள முத்திரை மோதிரம் என்னிடம் எப்படி வந்தது என்று....
அய்யோ! இவன் உண்மையை சொல்லி இருப்பானோ?


நீர் என்ன சொன்னீர்..?
நான் தாங்களின் பெயரைச் சொல்லவில்லை, பெரிய பழுவேட்டரையர் கொடுத்தார் என்றுதான் சொன்னேன்.
இதைக் கேட்டு நந்தினி பெரு மூச்சுவிட்டாள்.
இவன் ஏதோ தகாத வேலை செய்திருப்பான், அதைச் சின்னவர் கண்டுபிடித்திருப்பார்.
நந்தினி ஏதோ யோசிப்பதைக் கண்ட வந்தியத்தேவன்,
மன்னிக்க வேண்டும். தாங்கள் மந்திர-வாதிக்காக வைத்திருந்த ஏணியில், நான் ஏறி வந்துவிட்டேன்.


நேற்று உன்னைப் பார்த்தது முதல் எனக்கு உன்னுடைய ஞாபகமாகவே இருந்தது. நீ ஏன் இன்னும் என்னை பார்க்க வரவில்லை என்பதை தெரிந்துக் கொள்ள விரும்பியே நான் மந்திரவாதியை கூப்பிட்டு அனுப்பினேன்.
(என்று மோக வலை விரித்தாள்.)
எனக்கும் நேற்று உங்களைப் பார்த்தது முதல் உங்கள் ஞாபகமாகவே இருந்தது.
வந்தியத்தேவனைத் தன் வலையில் வீழ்த்தும் நோக்கத்தில்,
தங்களுக்குப் பூர்வ ஜென்மம் என்பதில் நம்பிக்கை உண்டா?
நீங்கள் சொல்வது...


பூர்வ ஜென்மத்தில் இரண்டு பேருக்கு நட்போ, உறவோ, இருந்தால் இந்த ஜென்மத்திலும் அத்தகைய சொந்தம் ஏற்படும் என்கிறார்கள், அதைத்தான் சொல்கிறேன்.
தங்களுக்கும் எனக்கும் என்ன உறவு என்றுதான் தெரியவில்லை. ஆனால், நிச்சயம் நெருங்கிய உறவாகத்தான் இருக்கவேண்டும்!
இல்லையென்றால் ,தங்களின் குதிரை ஏன் வந்து என்னுடைய பல்லக்கில் மோத வேண்டும்?
மதுவின் போதையைக் காட்டிலும் சக்தி வாய்ந்ததாக இருக்கிறதே இவளின் பேச்சு...!
அவள் பேச்சின் மயக்கத்தில் மாட்டி சிக்கித் தவிக்கிறான் வந்தியத்தேவன்.


வந்தியத்தேவா! உன் அறிவை இழந்து விடாதே!
நான் கூறுவது உங்களுக்கு நன்றாக புரிந்திருக்கும் என்று எண்ணுகிறேன்... (நந்தினி)
இருபத்திநான்கு போர்களில் அறுபத்தி நான்கு விழுப்புண்களைப் பெற்ற திருமே-னியர் தான்ய பண்டார நாயகர், மாவீரர் பெரிய பழுவேட்டரையர் பராக்! பராக்!
தடும்
தடும்
தடும்
தடும்
தடும்
தடும்
அப்போது தூரத்தில் பேரிகைகள் முழங்குகிறது. அதனைத் தொடர்ந்து கட்டியம் கூறும் சத்தம் கேட்கிறது!


அவர் வந்துவிட்டாரே! அவர் வருவதற்குள் இவனை அப்புறப்படுத்த வேண்டும். ஆனால், மந்திரவாதி இன்னும் வரவில்லையே!?
இளைய ராணியிடம் உதவி பெற்று இந்தக் கோட்டையைவிட்டுத் தப்பிவிடலாம் என்று எண்ணி இருந்தால் அதற்குள் இவர் வந்துவிட்டாரே!
தனாதிகாரி கோட்டைக்குள் வந்துவிட்டார். அவர் வருவதற்குள் நீர் வந்த விஷயத்தைக் கூறிவிட்டுச் சென்று விட வேண்டும்.


ஆழ்வார்க்கடியான் கூறிய செய்தி என்ன?
அம்மணி! அந்த வீரவைஷ்ணவர் தங்களை அவருடையச் சகோதரி என்று சொல்லிக் கொண்டார். அது உண்மைதானா?
அதைப் பற்றி நீர் ஏன் சந்தேகப்படுகிறீர்?
இல்லை... பச்சைக் கிளியும், கருவன் குரங்கும் ஒரு தாயின் குழந்தைகள் என்றால் எளிதில் நம்ப முடியுமா?
அதைக் கேட்டு நந்தினி,
ஹாஹா... ஹாஹா...


அவர் கூறியது ஒரு விதத்தில் உண்மைதான். நாங்கள் ஒரே வீட்டில், ஒன்றாக வளர்ந்தோம்.
ஆமாம்.... நீர் அவரை எங்கு கண்டீர்?
வீரநாராயணபுரத்துக்கு அருகில், தனாதிகாரியின் பரிவாரங்களுடன் தங்களின் பல்லக்கும் அங்கு வந்தது. அப்போது அந்த வீரவைஷ்ணவன்.....
போதும் ஐயா!
மேலும் விவரங்களைக் கேட்க விரும்பாத நந்தினி,


அவர் என்ன செய்தி எனக்கு கூறி அனுப்பினார். அதை முதலில் கூறுங்கள்.
கிருஷ்ண பகவான் தங்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார் என்பதுதான். தாங்கள் கண்ணனை மணந்துகொள்ளும் கல்யாணக் காட்சியைப் பார்க்க ஸ்ரீவைஷ்ணவ பக்த கோடிகளும் காத்துக் கொண்டிருக்கிறார்களாம்.
ஆஹா! இன்னும் அந்த சபலம் நீங்கவில்லையா அவருக்கு? நீ அவரைப் பார்த்தால் எனக்காக இதைச் சொல்லிவிடு, என்னை அடியோடு மறந்துவிடச் சொல்லு! ஆண்டாளைப் போல் பரமபக்தையாக நான் கொஞ்சமும் தகுதியற்றவள் என்று சொல்லு!
நான் அதை ஒப்புக் கொள்ளவில்லை, ராணி!
எதை ஒப்புக் கொள்ளவில்லை...


ஆண்டாள் பக்தி செய்து, பாட்டுப் பாடி, கண்ணீர்விட்டு அழுது, பூமாலைகள் தொடுத்து அதைச் சூட்டி, கண்ணனை மணந்துகொள்ள வேண்டி இருந்தது. ஆனால் தாங்களுக்கு அத்தகைய கஷ்டம் தேவையே இல்லை, தாங்களை கிருஷ்ண பகவான் பார்த்துவிட வேண்டியதுதான். கோபிகா ஸ்திரீகளை உடனே கைவிட்டு அவர்கள் வீற்றிருந்த சிம்மாசனத்தில் தாங்களை ஏற்றி உட்கார வைத்து விடுவார்!
ஐயா! நீர் முகஸ்துதி செய்வதில் சமர்த்தராயிருக்கிறீர்! அது எனக்குப் பிடிப்பதில்லை.
முகஸ்துதி என்றால் என்ன?
முகஸ்துதி என்றால் முகத்துக்கு நேரே ஒருவரைப் புகழ்வது தான்.
அப்படியானால் சற்றே நீங்கள் திரும்பி முதுகைக் காட்டிக் கொண்டு உட்காருங்கள்.
நீர் பேச்சில் மிகக் கெட்டிக் காரராயிருக்கிறீர்.
இப்போது தாங்கள் அல்லவா முகஸ்துதி செய்கிறீர்கள்?
நீரும் உமது முகத்தைத் திருப்பிக்கொண்டு, முதுகைக் காட்டுவது தானே?


மகாராணி! போர்க்களத்திலாகட்டும், பெண்களிடமாகட்டும், நான் முதுகு காட்டுவது என்பது எப்போதுமே கிடையாது. தாங்கள் தாராளமாய் என்னை முகஸ்துதி செய்யலாம்!
ஹாஹா... ஹாஹா...
பழுவூர் இளையராணி நந்தினிக்கு இன்று என்னவாயிற்று? அவள் வாய்விட்டுச் சிரித்து இதுவரை யாரும் பார்த்ததில்லை ஆனால் இன்று இத்தனை மகிழ்ச்சியாக இருக்கக் காரணம்! நம் நாயகனிடம் ஏதோ ஈர்ப்பு இருக்கத்தான் செய்கிறது.
ஆமாம், உன் பெயர் என்னவென்று சொன்னீர்?
வந்தியத்தேவன், பட்டப் பெயர் வல்லவரையன்.
அரச குலத்தினரா?
ஆமாம், பழைய புகழ் பெற்ற வாணாதி ராஜர் குலத்தில் பிறந்தவன்.


உம்முடைய பூர்வீக இராஜ்யத்தை
நீர் திரும்பவும் பெற முடியும்.
அது எப்படி சாத்தியம்? புலியின் வயிற்றுக்
குள்ளே போனது திரும்பவும் வருமா?
அவன் எண்ண ஓட்டத்தைப் புரிந்துக்
கொண்ட நந்தினி...
நீர் நினைப்பது போல்
அதுவொன்றும் நடவாத
காரியமில்லை! உன்
இராஜ்யம் கிடைக்கும்படி
என்னால் செய்ய முடியும்.
இவளைப் பரிபூரணமாக
நம்பலாமா?


ஐயா! வல்லவரையரே! நான் ஒன்று சொல்லுவேன் ஒப்புக் கொள்வீரா?
சொல்லுங்கள் தேவி!
நீரும் நானும் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளலாம். நீர் எமக்கு உதவி செய்ய வேண்டியது, நான் உமக்கு உதவி செய்ய வேண்டியது...!
என்ன சொல்கிறீர்?


தேவி! தாங்கள் சோழ சாம்ராஜ்யத்தின் சர்வ சக்தி வாய்ந்த ராணி. நானோ... ஒருவிதச் செல்வாக்கும் இல்லாதவன். தங்களுக்கு நான் எந்த விதத்தில் உதவி செய்ய முடியும்.
இவன் உள்ளத்திலிருந்துதான் பேசுகிறானா அல்லது உதட்டில் இருந்து பேசுகிறானா?
எனக்கு அந்தரங்கமான பணி ஆள் ஒருவர் தேவை, இந்த அரண்மனையில் உமக்கு வேலை வாங்கிக் கொடுத்தால் ஒப்புக் கொள்வீரா?
ஒரு இராஜகுமாரன் என்றும் பாராமல் நம்மைப் பணி ஆளாக அழைக்கிறாளே! எல்லாம் நம்முடைய நேரம்...


இந்த மாதிரி சேவையை இன்னொரு மாதரசிக்குச் செய்வதாக ஏற்கனவே ஒப்புக் கொண்டு விட்டேன்.
அவள் யார், என்னோடு போட்டிக்கு வருகிறவள்?
வந்தியத்தேவன் தன்னிடமிருந்த ஒரு ஓலையை நந்தினியிடம் கொடுக்கிறான்.
ஆ...! எனக்கே தெரியாமல் சின்ன பழுவேட்டரையரிடமிருந்து இந்த ஓலையை இவன் எப்போது எடுத்தான்? இவன் சரியான ஜகஜாலபிரதாபனாய் தான் இருக்கிறான்!



இளைய பிராட்டி குந்தவைக்குக் கரிகாலர் கொடுத்திருக்கிறார்.
இளைய பிராட்டி குந்தவை தேவிதான்.
மீன்சின்னம் பொறிக்கப்பட்ட வாளை தன்னுடன் எப்போதும் வைத்திருக்கும் நந்தினி, அதை எடுத்து....
நீர் இந்தக் கோட்டையை விட்டு உயிரோடு தப்பிச் செல்ல எண்ணுகிறீர் அல்லவா?


ஆம் தேவி! அதற்குத்தான் தங்கள் உதவியை நாடி வந்தேன்.
ஒரு நிபந்தனையின் பேரில்தான் உம்மைத் தப்பித்துவிட நான் உதவி செய்ய முடியும்.
நிபந்தனையைச் சொல்லுங்கள்.
இந்த ஓலைக்குக் குந்தவை என்ன மறு ஓலை கொடுக்கிறாளோ, அதை மறுபடியும் என்னிடம் கொண்டு வந்து காட்ட வேண்டும்.
சம்மதமா?


மிக அபாயகரமான நிபந்தனை போடுகிறீர்கள்.
உம்மைப் பார்த்தால் அபாயத்துக்கு அஞ்சுபவராகத் தெரியவில்லையே?
நான் அபாயத்தைக் கண்டு அஞ்சுபவன் இல்லைதான், இருந்தாலும் அபாயத்துக்குத் தகுந்தப் பரிசு கிடைக்க வேண்டும் அல்லவா?
நந்தினி பஞ்சணையில் ஒய்யாரமாகச் சாய்ந்து...
பரிசா! பரிசா வேண்டும்? நீர் கனவிலும் அடையக் கருதாத பரிசு உமக்கு கிடைக்கும். பெரிய பழுவேட்டரையர் எந்தப் பரிசுக்காக வருஷக் கணக்காகத் தவம் கிடக்கிறாரோ, அத்தகைய பரிசு உமக்குக் கிடைக்கும்! (என்று கூறிவிட்டு வசியப் பார்வை பார்த்தாள்)


அதைக் கேட்ட வந்தியத்தேவன்,
(தலை கிறு கிறுக்கிறது!!)
வந்தியத்தேவா! உன் அறிவை இழந்து விடாதே, உன் குலப் பெருமையை அழித்து விடாதே!
க்ஊஊ...
க்ஊஊ....
அப்போது ஆந்தையின் குரல் கேட்கிறது.
ஆந்தையின் குரல் மூன்று முறை கேட்கிறது.
நிஜ மந்திரவாதியே வந்து விட்டான் சற்று நேரம் அதோ அந்தப் பக்கம் போய் இருட்டில் மறைந்து நில்லும்..


அதைக் கேட்டு வந்தியத்தேவன் அங்கிருந்து சென்று, ஒரு தூணில் மறைந்து கொள்கிறான்.
தனக்கு முன்னால் வந்தியத்தேவன் இங்கு வந்திருக்கிறான் என்பதை அறிந்து கோபத்துடன் வருகிறான் ரவிதாசன்.
ஓம், ஹ்ரீம், பகவதி சக்தி சண்டிகேஷ்வரி!


ஓம், ஹ்ரீம், பகவதி சக்தி சண்டிகேஷ்வரி!
போதும்! போதும்! நிறுத்து!
சொல்ல வேண்டியதைச் சீக்கிரம் சொல்! அவர் கோட்டைக்குள் வந்து விட்டார்!
அடி பாதகி!
யாரைச் சொன்னாய்?
நன்றி கெட்ட உன்னைத்தான், பழுவூர் இளையராணியைத்தான் சொன்னேன்! ஏன் இவ்வளவு நேரம்? யாருடன் சல்லாபம் செய்து கொண்டிருந்தாய்? அவன் எதற்காக இங்கு வந்தான்?


யாரைக் கேட்கிறாய்?
ஒன்றும் தெரியாதவள் போல் பேசுகிறாய்! அதான் காஞ்சியில் இருந்து ஒரு வாலிபன் வந்து இருந்தானே அவன்தான்? அவன் எப்படி இங்கு வந்தான்?
உனக்காக வைத்திருந்த ஏணியில் அவன் ஏறி வந்துவிட்டான்.
அது சரி, அவனிடம் முத்திரை மோதிரம் எப்படி வந்தது?
நான்தான் அவனிடம் கொடுத்தேன்.
எதற்காக? என்னிடம் கூட கொடுக்காத அந்த முத்திரை மோதிரத்தை அவனிடம் ஏன் கொடுத்தாய்?


அவனை இவ்விடம் வரவழைத்து முக்கிய விஷயத்தை அறிய விரும்பினேன்.
அடி பாதகி! கடைசியில் உன் பெண் புத்தியைக் காட்டிவிட்டாயே! யாரோ முன்பின் தெரியாத ஒரு வாலிபனிடம் நமது இரகசியத்தை...
வீணாய் ஏன் பதறுகிறாய்? நான் எதையும் அவனிடம் சொல்லவில்லை. மாறாக அவனிடமிருந்துதான் இரகசியத்தைக் கிரஹித்துக் கொண்டேன். அவன் காஞ்சியிலிருந்து பழையாறைக்கு ஓலை கொண்டு போகிறான், அதில் என்ன செய்தி செல்கிறது என்பதை அறிந்து கொள்ளவே அவனை இங்கு வர வைத்தேன். அதுமட்டுமில்லை, அந்த ஓலைக்கு அந்தப் பெண் புலி என்ன மறு ஓலை எழுதுகிறாளோ அதை என்னிடம் வந்து காட்டும் படியும் கேட்டிருக்கிறேன்.
நீயும் ஆயிற்று, உன் ஓலையும் ஆயிற்று. இதனால் எல்லாம் நமக்கு என்ன உபயோகம்?


உன்னுடைய அறிவின் ஓட்டம் அவ்வளவுதான். புலிக் குலத்தை அடியோடு அழிப்போம் என்று நாம் விரதம் கொண்டிருக்கிறோம். ஆனால் நீங்கள் ஆண் புலிகளை மட்டுமே எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். பெண் புலியினாலும் குலம் வளரும் என்பதை மறந்துவிட்டீர்கள். அது மட்டுமல்ல இப்போது இந்த சோழ நாட்டை ஆளுவது யார்???? பலமிழந்து கிடக்கும் கிழவனா? காஞ்சியில் உள்ள இளவரசனா? இல்லை இலங்கையில் இருக்கும் அருள்மொழியா? இல்லை என்னை ராணியாகப் பெறும் பாக்கியம் பெற்ற பழுவேட்டரையரா?


அது உலகம் அறிந்ததுதான். இந்த சோழ நாட்டை ஆளுவது உன் பதி* தனாதிகாரி பெரிய பழுவேட்டரையர்தான்.
அதுதான் தவறு!
*கணவர்


உலகம் அப்படித்தான் எண்ணிக் கொண்டிருக்கிறது! இந்த கிழவரும், அப்படி எண்ணித்தான் ஏமாந்து போகிறார். உண்மையில் பழையாறையில் உள்ள பெண் புலிக்குட்டிதான் இந்த இராஜ்யத்தை ஆளுகிறது! அரண்மனையில் இருந்த படியே சூத்திரக் கயிற்றை இழுத்து எல்லாரையும் ஆட்டி வைக்கிறாள். அவளுடைய கொட்டத்தை நான் அடக்குவேன். அதற்காகவே இந்த வாலிபனை உபயோகப்படுத்திக் கொள்ளப்போகிறேன்.
நீ பெரிய கைகாரிதான். சந்தேகம் இல்லை ஆனால் இதெல்லாம் உண்மை என்பது என்ன நிச்சயம்? உன்னை நான் எப்படி நம்புவது?


அதற்கு நந்தினி,
இந்த வாலிபனை உன்னிடமே ஒப்புவிக்கிறேன். அவனை கண்ணைக் கட்டி, சுரங்க வழியில் அழைத்துப் போ. பழையாறைக்குச் சென்று காத்திரு. குந்தவை கொடுக்கும் மறு ஓலையுடன் இங்கே அவனை மீண்டும் அழைத்துக் கொண்டு வா. அவன் தப்பிக்க பார்த்தாலும், உன்னை ஏமாற்றப் பார்த்தாலும் உடனே அவனை கொன்று விடு!
அடிப்பாவி!
வேண்டாம்! வேண்டாம்! நீயும் அவனும் எப்படி யாவது போங்கள். சின்ன பழுவேட்டரையரின் ஆட்கள் வேறு அவனைத் தேடுகிறார்கள். அவனோடு சேர்ந்து போனால் எனக்கும் ஆபத்து வரும்.


சரி மந்திரவாதி, நீ வந்த காரியத்தைக் கூறு?
இனியும் நாம் தாமதிக்கக் கூடாது!
காஞ்சிக்கும், இலங்கைக்கும் ஆட்கள் போக ஏற்பாடாகி விட்டது. இலங்கைக்குப் போகிறவர்கள் பாடு ரொம்பவும் கஷ்டம்.
அதற்கு என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? இன்னும் பொன் வேண்டுமா? உங்களுடைய பொன் ஆசைக்கு எல்லையே கிடையாதா?
பொன் எங்களுடைய சொந்த உபயோகத்துக்கு அல்ல, எடுத்த காரியத்தை முடிப்பதற்காகத்தான். பின் எதற்காக உன்னை இங்கு விட்டு வைத்திருக்கிறோம்? (என்று மிரட்டுகிறான்!)


அப்படி ரவிதாசன் கூறியவுடன், அவனை கோபமாக ஒரு பார்வைப் பார்த்து விட்டு கட்டிலின் கீழ் தயாராக வைத்திருந்த பண முடிப்பை எடுத்துக் கொடுக்கிறாள்.
அவர் வந்துவிட்டார்.
இதை வாங்கிக் கொண்டு இங்கிருந்து விரைவாகப் போ.
பணமுடிப்பை பெற்றுக்கொண்ட ரவிதாசன்,
ராணி கேள்! நினைவில் வைத்திருக்க வேண்டிய சில சம்பவங்களை நீ மறந்து விட்டாய் போல் இருக்கிறது. அவற்றை உனக்கு ஞாபகப்படுத்துகிறேன்.
மூன்று வருடத்திற்கு முன்னால்... எங்கள் மன்னர் வீரபாண்டியரின் மரணத்திற்கு நீயும் ஒரு காரணம் என்று நானும் என்னைச் சார்ந்தவர்களும் எண்ணினோம்.


ஆகையால், அவரை எரிக்கும் சிதையில் போட உன்னை கை கால்களைக் கட்டித் தூக்கி வந்தோம்.
முதலில் எங்கள் மன்னனின் ஈமச்சடங்கை நடத்தி, எரியும் நெருப்பின் மீது நாங்கள் எல்லோரும் சோழ குலத்தை வேரோடு அழிப்போம் என்று சபதம் ஏற்றோம்.
எரியும் சிதையில் உன்னைப் போட எண்ணிய போது உன் அசைவுகளின் மூலம் ஏதோ சொல்ல வந்தாய், ஆனால் என் உடன் இருந்தவர்கள் யாரும் அதைப் பொருட்படுத்துவதாக இல்லை. உன்னைத் தூக்கிச் சிதையில் போடத் தயாரானார்கள், அவர்களைத் தடுத்து, நான் உன்னைக் காப்பாற்றினேன்.


அப்போது, எங்களை விட உனக்கே அவர்களைப் பழிவாங்கக் காரணம் அதிகமிருப்பதாக கூறினாய், சோழகுலத்தை வேரோடு அழிப்பதாகச் சபதம் செய்தாய். ஆனால் எங்கள் நண்பர்கள் அதை ஏற்க மறுத்தனர். ஆனால் நான் உன்னை நம்பினேன். அதனாலயே நீ இன்றும் உயிருடன் இருக்கிறாய்.
அப்போது அந்தப் பெரிய பழுவேட்டரையர் ஒரு படையுடன் நம்மை நோக்கி வந்தார்.


அப்போது நாங்கள் அனைவரும் மனச் சோர்வில் இருந்தபடியால், அவர்களை எதிர்த்துப் போரிடாமல் அங்கிருந்த புதர்களில் பதுங்கிக் கொண்டோம்.


ஆனால், நீ அவருக்கு முன்னால் தைரியமாகச் சென்று நின்றாய்.
யார் இவள்? ஒரு வேளை வன தேவதையா!!


இல்லை கந்தர்வக் கன்னியா?
நம் திட்டம் வீண் போகவில்லை...
ஆகா! என்ன அழகு!!
அந்தக் கிழட்டுப் பழுவேட்டரையர் உன் அழகில் மயங்கி உன்னைத் தூக்கிச் சென்று விட்டான். அன்று மட்டும் நான்...
என்று கூறிக்கொண்டிருக்கும்போதே,


சூராதி சூரர், வீரப் பிரதாபர், மாறபாண்டியன் தலையை வேரோடு அறுத்த வெற்றிவேல் உடையார்...
பழுவேட்டரையரின் பிரதாபங்களைக் கேட்டு, ரவிதாசனின் கண்கள் கோபத்தில் சிவக்கின்றன.
மந்திரவாதி அவர் வந்து விட்டார்! நீ உடனே பின் வாசல் வழியாகப் புறப்படு.
அந்த காஞ்சி வாலிபனிடமிருந்து எப்படியாவது முத்திரை மோதிரத்தை வாங்கிவிட வேண்டும்.
என்று நினைத்தபடி, ரவிதாசன் அங்கிருந்து ஓடி அடர்ந்த புதரில் மறைகிறான்.


பெரிய பழுவேட்டரையர் தன் பரிவாரங்களுடன் கோட்டைக்குள் நுழைகிறார்.
இருபத்தி நான்கு போர்களில் அறுபத்தி நான்கு விழுப்புண்களைப் பெற்றவர், சோழ நாட்டின் தனாதிகாரி, பராக்! பராக்!
காலாந்தகன் இன்றைக்கு ஏன் கோட்டை வாசலுக்கு வரவில்லை? ம்.....!
ஒரு வேளை சக்கரவர்த்தியின் உடல்நிலை ரொம்ப மோசமாகி விட்டதோ!


இவ்வாறு நினைத்துக் கொண்டே சின்ன பழுவேட்டரையரின் மாளிகைக்கு வந்து சேர்கிறார் பெரிய பழுவேட்டரையர்.
அண்ணனை வாசல்வரை வந்து வரவேற்கிறார் கோட்டைத் தளபதி சின்ன பழுவேட்டரையர்.
அண்ணா
தம்பி
பழுவூர் சகோதரர்கள் மீது தஞ்சைபுரி வாசிகள் தனிப்பட்ட அபிமானம் வைத்து இருந்தார்கள். அந்த பழைய நகருக்குப் புதிய பெருமையையும், செல்வாக்கையும் அளித்தவர்கள் பழுவேட்டரையர்கள்!
பழுவூர் சகோதரர்களைக் காணும் சிலர் இரணியனுக்கும் இரண்யாட்சனுக்கும் ஒப்பிட்டுப் பேசுவார்கள். இன்னும் சிலர் இராமரையும், பரதரையும் ஒத்த அருமை சகோதரர்கள் என்றும், சிலர் பீமனையும், அர்ஜுனனையும் ஒத்த வீரச் சகோதரர்கள் என்றும் பேசுவார்கள்.
தம்பி காலாந்தகா! என்ன ஒரு மாதிரி இருக்கிறாய்?



ஏதாவது விஷேசம் உண்டா? சக்கரவர்த்தி சுகமா?
சக்கரவர்த்தி எப்போதும் போல் இருக்கிறார். அவரது சுகத்தில் அபிவிருத்தியும் இல்லை, சீர்கேடும் இல்லை!
பின் ஏன் உன் முகம் வாட்டம் அடைந்து இருக்கிறது?
அண்ணா! பிரமாதம் ஒன்றும் இல்லை. ஒரு சிறு சம்பவம் நடந்துவிட்டது. அதைப் பற்றி பிற்பாடு சொல்கிறேன். தாங்கள் போன காரியம் வெற்றிதானே?
எல்லோரும் ஒரு முகமாக உன் மருமகன் மதுராந்தகனையே அடுத்து பட்டத்துக்கு உரியவன் என்று ஒப்புக் கொண்டார்கள். நியாயத்துக்குக் கட்டுப்படவில்லை என்றால் கத்தி எடுத்துப் போர் செய்து உரிமையை நிலைநாட்டவும் சித்தமாயிருக்கிறார்கள்.


கொல்லி மழவனும், வணங்காமுடி முனையதரையனும் கூட ஒப்புக் கொண்டார்கள் என்றால், நம்முடைய நோக்கம் நிறைவேறுவதற்குத் தடை என்ன இருக்கிறது?
இவர்கள் ஒப்புக்கொண்டால் மட்டும் போதுமா?
ஒரு வேளை திருக்கோவலூர் மலையமான், பல்லவன் பார்த்தி பேந்திரன், கொடும்பாளூர் பெரிய வேளான்! இந்த மூன்று பேருந்தான் எதிர்க்கக்கூடும்.
அவர்களில் கொடும்பாளூரான் இங்கு இல்லை, இலங்கையில் இருக்கிறான்.
மற்ற இருவராலும் என்ன புரட்டிவிட முடியும்!
தலைவர்கள் பற்றித் தாங்கள் சொல்வதெல்லாம் சரி!
ஜனங்கள் ஆட்சேபித்தால்!


ஆகா! ஜனங்களை யார் கேட்கப் போகிறார்கள். ஜனங்கள் ஆட்சேபிக்க துணிந்தால், மறுபடியும் அவர்கள் இம்மாதிரி காரியங்களில் பிரவேசிக் காதுபடி செய்துவிட வேண்டியதுதான்.
அப்படி ஒன்றும் நேருவதற்கு வாய்ப்பில்லை.


சக்கரவர்த்தியின் விருப்பம் என்றால் அடங்கிவிடுவார்கள்.
நல்ல வேளையாக அருள்மொழி இங்கு இல்லை! அவன் ஒரு வேளை இங்கு இருந்தாலும் ஜனங்கள் தங்கள் குருட்டு அபிமானத்தை காட்ட முயல்வார்கள். ஆதித்த கரிகாலன் மீது ஜனங்களும் அவ்வளவு பிரேமம் கொண்டிருக்கவில்லை, அதனால் மதுராந்தகன் மீது மக்களுடைய அபிமானத்தை திருப்புவது சுலபம்.
மதுராந்தகன் ஒரு சிவ பக்தன், உத்தம குணம் படைத்தவன் என்று ஏற்கனவே பெயர் வாங்கி இருக்கிறான்.
எப்படி இருந்தாலும் நான் ஒருவன் இருக்கும் போது உனக்கு என்ன கவலை?


ஆனால் வேளக்காரப்படை இருக்கிறதே! அவர்களை எப்படிச் சமாளிப்பது?
வேளக்காரப்படை சுந்தர சோழருக்கு தான் உயிர்ப் பலி விரதம் எடுத்திருக் கிறார்கள். அவருடைய பிள்ளைகளுக்கு இல்லை. அப்படியே எதிர்த்தால் என்ன? உன்னுடைய கோட்டைக் காவல் படை எங்கே போயிற்று? அவ்வளவு பேரையும் பிடித்து பாதாளச் சிறையில் தள்ள வேண்டியதுதான்.
அது பெரிய காரியமல்ல, நீங்கள் கூறுவது போலவே அதைச் செய்துவிடலாம். ஆனால் முக்கியமான எதிர்ப்பு பழையாறையிலிருந்து தான் வரும். அவரின் செல்வ புதல்வியும், அந்த கிழவியும் சேர்ந்து என்ன சூழ்ச்சி செய்வார்களோ! (செம்பியன் மாதேவியையும், இளையபிராட்டி குந்தவையையும் குறிப்பிடுகிறார்.)



தம்பி காலாந்தகா! போயும்போயும் இரண்டு பெண் பிள்ளைகளுக்கா என்னை பயப்படச் சொல்கிறாய்? அவர்களுடைய மந்திர, தந்திரங்களுக்கு எல்லாம் மாற்று என்னிடம் இருக்கிறது. (நந்தினியை மனத்தில் கொண்டு இவ்வாறு கூறுகிறார்.)
அண்ணா! சக்கரவர்த்தி தனது இரண்டு பூதல்வர்களையும் தஞ்சக்கு வர அழைப்பு அனும்பும்படிக் கட்டளை இட்டிருக்கிறார்.
அப்படியா! எப்படியும் ஆதித்த கரிகாலன் வரமாட்டான்...
ஒரு வேளை அருள்மொழி தன் தந்தையின் கட்டளைப் படி புறப்பட்டு வருவான். அவனைத் தடுக்க வேண் டியதுதான்.
அப்படியே வந்தாலும், மதுராந்த கனுக்கு இளவரசுப் பட்டம் கட்டிச் சிம்மாசனத்தில் சகல அதிகாரங்களுடன் ஏற்றிய பிறகுதான் அவர்கள் இருவரும் வரலாம்.
அதற்கு முன் வரக்கூடாது! இதை என்னிடம் விட்டுவிடு. கூடிய சீக்கிரத்தில் சக்கர வர்த்தியிடம் சொல்லி உடனே மதுராந்தகனுக்குப் பட்டம் கட்ட ஏற்பாடு செய்து விட வேண்யதுதான். மேற்கொண்டு ஆக வேண்டியதைப் பார்.


சரி, நீ என்னவோ... சிறிய விஷயம் இங்கே நடந்ததாகச் சொன்னாயே அது என்ன?
அண்ணா, காஞ்சியிலிருந்து வாலிபன் ஒருவன் வந்தான். சக்கரவர்த்திக்கு ஒரு ஓலையும், குந்தவைக்கு ஒரு ஓலையும் கொண்டு வந்தான்.
அவனை என்ன செய்தாய்? ஓலையை பிடுங்கிக் கொண்டு சிறைப்பிடித்து இருக்கிறாய் அல்லவா?
இல்லை,
கடம்பூரில் அவன் தங்களைப் பார்த்ததாகவும், தாங்கள் நேரில் சந்தித்து ஓலையைச் சக்கரவர்த்தியிடம் கொடுக்கச் சொன்னதாகவும் கூறினான். அது உண்மையா?


அப்படி யாரிடமும் நான் கூறவில்லை... கடம்பூரில் அழையா விருந்தாளியாக ஒரு வாலிபன் வந்தான்... கந்தமாறனின் சிநேகிதன் என்று சொல்லிக் கொண்டான்! ஆனால் ஓலை கொண்டு வந்திருப்பதாக அவன் என்னிடம் சொல்லவில்லையே!
அவன் முழியைப் பார்த்ததுமே நான் சந்தேகப்பட்டேன்.
அவனிடம் நீ ஏமாந்து விட்டாயா என்ன?
ஆமாம்! ஏமாந்துதான் போய் விட்டேன். அவன் தங்கள் பெயரைச் சொன்னதால் ஏமாந்தேன்.


அட மூடா? ஏமாந்து என்ன செய்தாய்?
அவன் சக்கரவர்த்தியிடம் ஓலையை கொடுத்து விட்டானா? நீ அதைப் படித்துக் கூட பார்க்கவில்லையா?
பார்த்தேன், அதில் ஒன்றுமில்லை...
இப்போது எங்கிருக்கிறான் அவன்?


அவன் ஊர் சுற்றிப் பார்க்க வேண்டும் என்றான். பார்த்துவிட்டு வரட்டும் என்று இரண்டு காவலர்களையும் அவனோடு அனுப்பினேன்.
ஆனால் அவன் அவர்களையும் ஏமாற்றிவிட்டுத் தப்பிவிட்டான். அவனைப் பிடிக்க நம் ஆட்களை அனுப்பிருக்கிறேன்.
அடச்சீ! நீயும் ஒரு மனிதனா? அந்தப் பொடியனிடமா ஏமாந்து போனாய்? உனக்குப் போய் காலாந்தக கண்டர் என்று பெயர் வைத்தேனே?
அப்படியென்றால் தங்களின் முத்திரை மோதிரம் அவனிடம் எப்படி வந்தது? அதை அவனுக்கு யார் கொடுத்தது?
அது எப்படி அவனிடம் வரும்? வாய்ப்பே இல்லை!
அவனிடம் முத்திரை மோதிரம் இருந்தது உண்மை.


என்னிடமும் அதைக் காட்டினான். கோட்டை வாசல் காவலர்களிடமும் அதைக் காட்டி விட்டுத்தான் உள்ளே நுழைந்தான்.
அது அவனிடம் எப்படி வந்தது? நான் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை!
நீங்கள் அதை அவனுக்குக் கொடுக்காவிட்டால், இன்னும் ஒரே ஒரு இடத்திலிருந்துதான் அதை அவன் பெற்றிருக்க முடியும்.
யாரைச் சொல்லுகிறாய்?
தங்களால் ஊகிக்க முடியவில்லையா?
இளையராணியைத் தான் சொல்லுகிறேன்!
ச்ச்சீ..!
ஜாக்கிரதை! நாக்கை அறுத்து விடுவேன்!


நாக்கை அறுத்தாலும் அறுங்கள், தலையைக் கொய்தாலும் கொய்யுங்கள்,
தூமகேது தன் வேலையைத் தொடங்கிவிட்டது!


வெகு நாளாய் நான் சொல்ல விரும்பியதை இப்போது சொல்லி விடுகிறேன். விஷ நாகத்தை அழகாயிருக்கிறது என்று எண்ணி வீட்டில் வைத்து வளர்க்காதீர்கள். அது ஒரு நாள் கடிக்கத்தான் போகிறது, நம் எல்லோரையும் நாசம் செய்யப் போகிறது. வேண்டாம்! அவளைத் துரத்தி விட்டு மறு காரியம் பாருங்கள்.


காலாந்தக கண்டா! நானும் உனக்கு ஒன்று சொல்லி விடுகிறேன். வேறு எந்தக் காரியத்தில் வேண்டுமானாலும் உன் அபிப்பிராயத்தைக் கூறு.
ஆனால் நான் கைப்பிடித்து மணந்து கொண்டவளைப் பற்றிக் குறைவாக இனி ஒரு வார்த்தை சொன்னாலும், உன்னை வளர்த்த அதே கையால் உன்னை வெட்டிக் கொன்று விடுவேன்! ஜாக்கிரதை!


என்று கூறி, சின்ன பழுவேட்டரையரின் அரண்மனையில் இருந்து கோபமாக வெளியே செல்கிறார் பெரிய பழுவேட்டரையர்.
ம்ர்ர்ர்...
பளீச்
கிளாங்
ஒற்றுமைக்கு உதாரணமாக இருந்த சகோதரர்களின் நிலையைப் பாருங்கள்! இதற்கெல்லாம் யார் காரணம்? ஒரு பெண்ணா! இல்லை, பெரிய பழுவேட்டரையரின் பெண் மோகமா..?



எதற்காக அநாவசியமாக நந்தினியைப் பற்றிக் குறை கூற வேண்டும்? மனித சுபாவமே அப்படித்தான் போலும்! தான் செய்த தவறுக்குப் பிறர் மீது குற்றம் சொல்லித் தப்பித்துக் கொள்வது.




அது சாதாரண மக்களின் செயல். ஆனால் இவன் எதற்காக இந்த இழிவான செயலைச் செய்ய வேண்டும்!
கைவசம் சிக்கி இருந்த அந்த மோசக்கார வாலிபனை விட்டு விட்டு, ஒரு பெண்ணின் பேரில், அதுவும் அண்ணியின் பேரில் குற்றம் சொல்வது இவனுடைய வீரத்துக்கும், ஆண்மைக்கும் அழகாகுமா?


இருந்தாலும் இவன் கூறியதில் அணுவளவேனும் உண்மை இருக்கக் கூடுமோ? ம்...!
ஒரு வேளை... இந்த முதிய பிராயத்தில் நமக்குதான் பெண் பித்து பிடித்திருக்குமோ?
எங்கிருந்தோ காட்டிலிருந்து பிடித்து வந்த பெண்ணுக்காக, கூடப் பிறந்த சகோதரனை, பல போர்களங்களில் நமக்குப் பக்கபலமாயிருந்து போரிட்டவனை, பலமுறை தனது உயிரையும் பொருட்படுத்தாமல் நமக்கு வந்த அபாயத்தைத் தடுத்துக் காத்தவனை நாம் கடிந்து கொண்டது சரிதானா? அப்படி என்ன இவள் உயர்த்தி?
நந்தினி அடிக்கடி முத்திரை மோதிரம் வாங்குவதும், மந்திரவாதியை அடிக்கடி அழைப்பதும் ஏன்? எதற்காக தன்னந் தனியாக லதா மண்டபத்தில் போய் உட்கார்ந்து கொள்கிறாள்?
இன்று எப்படியும் அவளிடம் நேரடியாகக் கேட்டு விட வேண்டியதுதான்.
என்று நினைத்துக் கொண்டே நந்தினி இருப்பிடம் நோக்கிச் செல்கிறார்.


பழுவேட்டரையர் அவருடைய மாளிகை வாசலுக்கு வந்த போது அரண்மனைப் பெண்களும், ஊழியர்களும், காத்திருந்து அவரை வரவேற்றார்கள்.
இருபத்திநான்கு போர்களில் அறுபத்தி நான்கு விழுப்புண்களை பெற்ற திருமேனியர் தான்ய பண்டார நாயகர், மாவீரர் பெரிய பழுவேட்டரையர் பராக்! பராக்!


ம்ம்ம்ம்ம்ம்ம்............
இளையராணி எங்கே?
லதா மண்டபத்தில் உள்ளார்கள் அரசே.
அப்படியா?
இன்று என்ன நடக்க போகிறதோ...!


என்று கேட்டுவிட்டு வேகமாகப் படி இறங்கி லதா மண்டபத்தை நோக்கிக் கோபமாகச் செல்கிறார் பெரிய பழுவேட்டரையர்.
இன்று முடிவாக அவளிடம் பேசிவிட வேண்டியதுதான்!


நள்ளிரவு ஆன பின்னும் அவளுக்கு அங்கு என்ன வேலை?


பழுவேட்டரையர் வருவதை கண்டு,
ராணி! அரசர் கோபமாக வருகிறார் என்று தோன்றுகிறது...
அப்படியா! அப்படி என்றால், கோபத்திற்குக் கோபம்தான் மருந்து!
என்று தோழிப்பெண்ணிடம் கூறிவிட்டு, பழுவேட்டரையரைக் கண்டும், காணாதது போல வேண்டுமென்றே வேறு பக்கம் திரும்பிச் செல்கிறாள்.


இவள் ஏன் நம்மைப் பார்த்தும் பார்க்கதது போல் செல்கிறாள்!


நம்மீது அவளுக்கு என்ன கோபம்?
அன்பே!!
நந்தினியைக் கடிந்து கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டு வந்ததற்கு மாறாக, பழுவேட்டரையர் அவளுடைய கோபத்தைத் தணிக்க முயல வேண்டியதாயிற்று!
என் கண்மணி! என்ன கோபம்! ஏன் இந்தப் பாராமுகம்?


என்று கேட்டவாறே நந்தினியின் தோள் மீது கை வைக்கிறார்.
ஆசையாகத் தொட்ட பழுவேட்டரையரின் கையைச் சட்டென்று தள்ளி விடுகிறாள் நந்தினி.
அம்மம்மா! இந்த மென்மையான கைகளுக்கு இத்தனை பலம் உண்டா? திரிகோணமலையிலிருந்து விந்திய மலை வரையில் உள்ள வீராதிவீரர் யாரும் செய்ய முடியாத செயலை நீ செய்துவிட்டாயே! அது என் அதிர்ஷ்டந் தான் என்றாலும்...
எதற்குக் கோபம் என்று சொல்ல வேண்டாமா? உன் தேன் மதுரக் குரலைக் கேட்க என் காதுகள் தாபம் அடைந்து தவிக்கின்றன!
தாங்கள் என்னைப் பிரிந்து சென்று எத்தனை நாட்கள் ஆயிற்று?


இதற்குத் தானா இவ்வளவு கோபம்? நாலு நாள் பிரிவையே உன்னால் தாங்க முடியவில்லையே! அப்படியானால் நான் போர்க்களத்துக்குப் போக நேர்ந்தால் என்ன செய்வாய்? மாதக் கணக்கில் என்னைப் பிரிந்திருக்க நேரிடுமே!
தாங்கள் போர்க்களத்துக்குப் போனால் மாதக்கணக்கில் தங்களை நான் பிரிந்திருப்பேன் என்றா எண்ணுகிறீர்கள்? அந்த எண்ணத்தை அடியோடு மாற்றிக் கொள்ளுங்கள். தங்களுடைய நிழலைப் போல் தொடர்ந்து, நானும் போர்க்களத்துக்கு வருவேன்!


அழகாயிருக்கிறது! உன்னைப் போர்க் களத்துக்கு அழைத்துப் போனால் நான் யுத்தம் செய்தாற் போலத்தான்.
நீ இத்தனை நேரம் இந்த கருங்கல் தரையில் நின்று கொண்டிருப்பதே எனக்கு வேதனையாக இருக்கிறது.
தனது அன்பை வெளிப்படுத்திய பின்பும் நந்தினி அவரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. மேலும் சமாதானப் படுத்த,
நாலு நாள் பிரிவு உனக்கு மட்டும்தான் வேதனை அளித்தது என்று எண்ணாதே!
உன்னைக் காணாத ஒவ்வொரு கணமும் எனக்கும் ஒரு யுக-மாக இருந்தது.
அடடா! என்ன பாசம்! இந்தப் பாசம் ஏன் அவருடைய மற்ற மனைவிகளிடம் இல்லை? ம்...


சின்ன பழுவேட்டரையரைவிட, தான் முக்கியம் என்று பழுவேட்டரையருக்கு உணர்த்துத் தன் தாலியை தொட்டுப் பார்த்துக் கொண்டே பழுவேட்டரையரிடம் பேசுகிறாள் நந்தினி.
நாலு நாள் வெளியூரில் இருந்துவிட்டு வந்தீர்கள்? திரும்பி வந்தவுடன் நேராக ஏன் இங்கு வரவில்லை? என்னை விடத் தங்களுக்குத் தங்கள் தம்பி தானே முக்கியமாக போய்விட்டார்?


அப்படியில்லை என் கண்மணி! வில்லிலிருந்து புறப்பட்ட பாணத்தைப் போல், உன்னிடம் வருவதற்குத்தான் என் மனம் ஆசைப்பட்டது. ஆனால் அந்த அசட்டுப்பிள்ளை மதுராந்தகன் சுரங்க வழியின் மூலமாகப் பத்திரமாகத் திரும்பி வந்து சேர்ந்தானா, என்று தெரிந்து கொள்வதற்காகவே தம்பியின் வீட்டிற்குப் போக வேண்டியதாயிற்று.


ஐயா! தாங்கள் எடுத்த காரியங்களில் எல்லாம் எனக்கு சிரத்தையுண்டு. ஆனால் நான் ஏற வேண்டிய மூடு பல்லக்கில் ஓர் ஆண் பிள்ளையைத் தாங்கள் ஏற்றிக் கொண்டு போவதை நினைத்தால்....
அது எனக்கு மட்டும் சந்தோஷமாய் இருக்கிறது என்றா நினைத்தாய்? இல்லவே இல்லை! ஆனால் எடுத்த காரியம் பெரிய காரியம்.
மேலும் இந்த யோசனையைக் கூறியதே நீதான் என்பதை மறந்து விட்டாயா?
உன்னுடைய மூடு பல்லக்கில் மதுராந்தகனை அழைத்துப் போகும்படியும், அதே போல அவன் திரும்பி வரும்பொழுது சுரங்க வழியில் வர வேண்டும் என்ற யுக்தியையும் நீதானே கூறினாய்.
என்னுடைய கடமையைத்தான் நான் செய்தேன். கணவன் எண்ணத்திற்கும் காரியத்துக்கும் உதவி செய்வது மனைவியின் கடமை அல்லவா?


நான் உன்னை ஒன்று கேட்கிறேன், நாங்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் முடியாத காரியத்தை, நீ எப்படிச் செய்தாய்? உடம்பெல்லாம் விபூதியைப் பூசிக் கொண்டு, கோயில் குளம் என்று சுற்றிக் கொண்டிருந்தவனை,
இப்போது சோழ சிம்மாசனத்தில் அமர்த்தது நான்தான் ஏறுவேன் என்று எப்படிக் கூற வைத்தாய்?
என்ன மாய மந்திரம் செய்தாய்? இதில் நீ மந்திரவாதியை வேறு எதற்காக அடிக்கடி அழைக்கிறாய்?
அதைப் பற்றி அநாவசியமாக ஜனங்கள்....
நாதா! அதைப் பற்றி அநாவசியமாக யாரேனும் பேசினால், அவர்களின் நாக்கைத் துண்டித்துப் புத்தி கற்பிப்பது தங்களது பொறுப்பல்லவா?
நான் அதற்காக சொல்லவில்லை கண்மணி.....


நாதா! நான் எனக்காக எதையும் செய்யவில்லை, தாங்கள் மறந்திருந்தால் இன்னொரு தடவையும் சொல்லுகிறேன். பழையாறையிலுள்ள அந்தப் பெண் பாம்பின் விஷத்தை இறக்கத்தான் மந்திரவாதியை அழைக்கிறேன்.
நாதா! நூறு ஆண் பிள்ளைகளைக் காட்டிலும் ஒரு பெண் பிள்ளை அதிகமான தீங்கு செய்யக் கூடியவள். பாம்பின் கால் பாம்பு அறியும். அந்தக் குந்தவையின் வஞ்சனையெல்லாம் உங்களுக்குத் தெரியாது.
என்ன அப்படி செய்து விட முடியும்!
நூறு பெண்களுக்கு மத்தியில் என்னைப் பார்த்து அவள் என்ன சொன்னாள் என்பது மட்டும் தங்களுக்குத் தெரிந்தால்...
என்று பழுவேட்டரையரின் கோபத்தைத் தூண்டும் விதமாக, வேண்டுமென்றே வேறு பக்கம் திரும்பி அழுவது போல் பாவனை செய்கிறாள்.



நந்தினியின் விசும்பல் ஒலி கேட்டுப் பழுவேட்டரையர்,
என் கண்ணே! அப்படி அந்தப் பாதகி என்ன கூறினாள்?
தாங்கள் கோபம் கொள்ள மாட்டீர்கள் என்றால் கூறுகிறேன்.
இல்லை இல்லை! நான் கோபம் கொள்ள மாட்டேன்!
கண்ணைத் துடைத்துக் கொண்டே பழுவேட்டரையரின் பக்கம் திரும்பி,
அந்த கிழவருக்குத்தான் சாகப்போகிற சமயத்தில் பெண் மோகம் பிடித்து அலைகிறார் என்றால், உன் அறிவு எங்கடி போயிற்று?....


அப்படியா சொன்னாள்?
அது மட்டுமா சொன்னாள், நீ தேவலோக மோகினியைப் போல் ஜொலிக்கிறாயே? எந்த ராஜகுமாரனும் உன்னை விரும்பி மாலையிட்டு பட்ட மகிஷியாக வைத்திருப்பானே!
நந்தினி கூறுவது சரிதான்! அவள் சரியான விஷப்பாம்பு தான்!


மேலும் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றும் விதமாக,
போயும் போயும் அந்த கிழ எருமை மாட்டைப் போய் கலியாணம் செய்துக் கொண்டாயே.....!
என் கண்ணே! அந்த சண்டாளப் பாதகி அப்படியா சொன்னாள்? என்னைக் கிழ எருமை மாடு என்றா சொன்னாள்?
அவள் கேட்டதை என்னால் மறக்க முடியுமா?
பழுவேட்டரையருக்குக் கோபம் தலைக்கேறியது.


அவளை, அவளை.... என்ன செய்கிறேன் என்று பார்?
எருமைமாடு அல்லிக் கொடியை நசுக்குவது போல் நசுக்கி எறிகிறேன் பார். (என்று கர்ஜித்தார்).
நாதா, எனக்கு நேர்ந்த அவமானத்தைத் தாங்கள் பொறுத்துக்கொள்ள மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் மத்தகஜத்தின் மண்டையைப் பிளந்து இரத்தத்தைக் குடிக்கும் வலிமையுள்ள சிங்கம் கேவலம் ஒரு பூனை மீது பாய முடியுமா?
அவள் மாய மந்திரம் மூலம்தான் சோழ சாம்ராஜ்யத்தையே ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறாள்.


அவளுடைய மந்திரத்தை மாற்று மந்திரத்தினால் தான் வெல்ல வேண்டும்.
............ம்
தான் மந்திரவாதியை அழைப்பது பழுவேட்டரையர்-க்கு பிடிக்கவில்லை என்பதை அறிந்து,
தங்களுக்கு விருப்பமில்லாவிட்டால் சொல்லிவிடுங்கள். இன்றைக்கே நான் இந்த மாளிகையை விட்டுச் சென்று விடுகிறேன்...
வேண்டாம், வேண்டாம்! இன்னும் ஆயிரம் மந்திரவாதிகளை வேண்டுமானாலும் அழைத்து வைத்துக்கொள். நீ போக வேண்டாம். என் உயிரே நீதான்...
நீ என்னை விலக்கி வைத்திருப்பதே, என்னை உயிரோடு வைத்து வதைப்பது போல் இருக்கிறது! நீ போக வேண்டாம், ஆனால் எனக்கு ஒரே ஒரு மந்திரமாவது சொல்லித் தரக் கூடாதா?



நாதா! தாங்கள் கையில் வாளும் வேலும் இருக்கும் போது மந்திரம் எதற்கு?
என் கண்ணே! எனக்கு மந்திரம் எதற்கு என்றா கேட்கிறாய்! என் உடலையும் உயிரையும் ஓயாமல் எரித்துக் கொண்டிருக்கிறதே அந்த தீயைத் தணிப்பதற்காகத்தான்.
பிள்ளை இல்லாத வீட்டில் கிழவன் துள்ளிக் குதித்தானாம்...! அந்தக் கதையா இல்ல இருக்கு.
இல்லையென்றால், உன் பூ மேனியைத் தொட்டு மகிழும் பாக்கியத்தையாவது எனக்குக் கொடு.
சோழநாட்டை போற்றும் மாவீரர் இப்படி மோகத்தீயில் அகப்பட்டுக் கொண்டாரே!


நாதா! என்றைக்கு நாம் கைப்பிடித்து மணந்து கொண்டோமோ, அன்றைக்கே நாம் ஈருடலும் ஓருயிரும் ஆகிவிட்டோம், கேவலம் இந்த உடலைப் பற்றிய சிந்தனை எதற்கு? மண்ணினாலான உடம்பு இது. ஒருநாள் எரிந்துச் சாம்பலாகி மண்ணோடு மண் ஆகப் போகிறது.
நிறுத்து! நிறுத்து! உன் கொடுமையான வார்த்தைகளைக் கேட்டு என் காதுகள் கொப்பளிக்கிறது. தேன் மணம் கமழும் உன்கனி வாயினால் அத்தகைய பெரும் பொய்யைச் சொல்லாதே!


நாதா! எனது கண்களுக்கு தாங்கள்தான் மன்மதன். ஆண் பிள்ளைகளுக்கு அழகு, வீரம். தங்களைப் போன்ற வீராதி வீரர் இந்த தென்னாட்டில் யார் இருக்கிறார்கள்? ஆண்மை படைத்தவர்களுக்கு அழகு தருவது அபலைகளிடம் இரக்கம், அந்த இரக்கம் தங்களிடம் இருப்பதற்கு நானே அத்தாட்சி.


அப்படிப்பட்ட தங்களை நான் வெகு காலம் காத்திருக்கும்படிச் செய்ய மாட்டேன் என்னுடைய விரதமும் நோன்பும் முடியும் காலம் நெருங்கி விட்டது.
கண்மணி! என்ன விரதம், என்ன நோன்பு என்பதை மட்டும் தெளிவாகச் சொல்லிவிடு. எவ்வளவு சீக்கிரம் முடித்துத் தரலாமோ, அவ்வளவு சீக்கிரத்தில் நான் முடித்துத் தருவேன்.
சுந்தர சோழருடைய சந்ததிகள் தஞ்சை சிம்மாசனத்தில் ஏறக் கூடாது, தற்பெருமை கொண்ட அந்தக் குந்தவையின் கர்வத்தை ஒடுக்க வேண்டும்.


இந்த இரண்டு காரியங்களும் நிறைவேறி விட்டதாகவே நீ வைத்துக்கொள். ஆதித்தனுக்கும், அருள்மொழிக்கும் பட்டம் கிடையாது. மதுராந்தக தேவருக்கே பட்டம் கட்டச் சிற்றரசர்கள் எல்லோரும் சம்மதித்து விட்டார்கள்.
எல்லோரும் சம்மதித்து விட்டார்களா?
உண்மைதானா?
இரண்டு மூன்று பேரைத் தவிர மற்றவர்கள் சம்மதித்து விட்டார்கள்.
மலையமானும், பார்த்திபேந்திரனும் நம்முடன் என்றும் இணங்க மாட்டார்கள். அவர்களைப் பற்றிக் கவலையில்லை.


ஆயினும் காரியம் முடியும் வரையில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமே?
அதற்கு சந்தேகமே இல்லை. எல்லா ஜாக்கிரதையும் நான் செய்து கொண்டுதான் வருகிறேன். மற்றவர்களின் முட்டாள் தனத்தினால் பிசகு நேர்ந்தால்தான் உண்டு.
இன்றைக்குக் கூட அத்தகைய பிசகு ஒன்று நேர்ந்திருக்கிறது. காஞ்சியிலிருந்து வந்த ஒரு வாலிபன் காலாந்தகனை ஏமாற்றி விட்டுச் சக்கரவர்த்தியைச் சந்தித்து ஓலை கொடுத்திருக்கிறான்.
ஆஹா! தங்கள் தம்பியைப் பற்றி ஓயாமல் புகழ்ந்துக் கொண்டே இருப்பீர்கள்.
இந்த விஷயத்தில் அசட்டுத்தனமாகத் தான் போய்விட்டான்.


ஏமாற்றிய அந்த வாலிபனைப் பிடிக்க முயற்சி ஏதும் செய்ய வில்லையா?
முயற்சி செய்யாமல் என்ன? கோட்டைக்கு உள்ளேயும், வெளியேயும் வேட்டை ஆரம் பமாகி விட்டது! எப்படியும் பிடித்து விடுவார்கள்.
இதனாலெல்லாம் நம்முடைய காரியத் திற்கு ஒன்றும் பங்கம் வந்துவிடாது. சக்கரவர்த்தி காலமானதும் மதுராந்தகன் சிம்மாசனம் ஏறுவது நிச்சயம்.
நாதா! என்னுடைய விரதம் என்ன என்பதை தாங்களுக்குத் தெரியப் படுத்தும் காலம் நெருங்கி வந்து விட்டது.


கண்ணே! அதைச் சொல்லும்படிதான் நானும் கேட்கிறேன்.
மதுராந்தகன் அசட்டுப்பிள்ளை! அவன் பட்டத்துக்கு வருவதனால் என்னுடைய விரதம் நிறைவேறி விடாது.
இவள் மனதில் என்ன தான் இருக்கிறது?


அரசே! என் சிறு பிராயத்தில் ஒரு பிரபல ஜோதிடன் என் ஜாதகத்தைப் பார்த்தான். பதினெட்டுப் பிராயம் வரையில் நான் பற்பல இன்னல்களுக்கு உள்ளாவேனாம்.
இன்னும் என்ன சொன்னான்?
பதினெட்டு வயதுக்கு பிறகு திசை மாறும் என்றும், அதன்பின் நான் இணையில்லாத உன்னத பதவியை அடைவேன் என்றும் சொன்னான்.
அவன் சொன்னது உண்மைதான்! அந்த ஜோதிடன் யாரென்று சொல்? அவனுக்கு கனகாபிஷேகம் செய்து வைக்கிறேன்.


நாதா! இன்னும் அந்த ஜோதிடர் கூறியது ஒன்று இருக்கிறது அதைச் சொல்லட்டுமா? (என்று பீடிகை போட்டாள்)
தாராளமாகச் சொல் என் கண்ணே!
என்னைக் கைப்பிடித்து மணந்து கொள்ளும் கணவர், மணிமகுடம் தரித்து ஒரு மகா சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் வந்து அடி பணிந்து ஏத்தும் சக்கரவர்த்தியாக வீற்றிருப்பார் என்று கூறினான். அதை நிறைவேற்றுவீர்களா?
சக்கரவர்த்தியா...! நானா...!
நந்தினியின் வார்த்தையைக் கேட்டு பழுவேட்டரையருக்கு உலகமே சுழன்றது போல் இருந்தது. இவர் நந்தினியின் மோக வலையிலிருந்து விடுபட எத்தனை நேரம் ஆகுமோ!? அதற்குள் நாம் வந்தியத்தேவன் என்ன ஆனான் என்று பார்த்துவிட்டு வருவோம்.


உண்மையான மந்திரவாதி வந்தவுடன் நந்தினி, வந்தியத்தேவனை சற்று மறைவாக இருக்கும்படி கூறியதால் லதா மண்டபத்தை விட்டு வெளியே வந்துவிட்டான். அந்நேரம் பார்த்து காவலர்கள் கையில் தீவட்டியுடன் அவனைத் தேடி வருகிறார்கள்.
ஆஹா! நாம் இங்கிருப்பதை எப்படியோ அறிந்து மோப்பம் பிடித்து வந்துவிட்டார்களே! எப்படியாவது இவர்களிடமிரு-ந்து தப்பித்தாக வேண்டும்.


காவலர்களின் கண்ணில் அகப்படாமல் ஒரு புலியைப் போல் பதுங்கிப் பதுங்கி ஓடுகிறான் வந்தியத்தேவன்.
நல்லவேளை! இருட்டு நமக்கு சாதகமாக இருக்கிறது.
அதோ! அந்த பாழடைந்த மண்டபத்தை அடைந்தால் ஒருவேளை நமக்கு வழி கிடைக்கலாம்!
தன்னை யாராவது பின் தொடர்கிறார்களா என்று பார்த்துக் கொண்டே அந்த பாழடைந்த மாளிகையை நோக்கிச் செல்கிறான்.
எப்பேர்ப்பட்ட கோட்டையாக இருந்தாலும், நிச்சயம் அதில் ஒரு ஓட்டையும் இருக்கும்!
மாளிகையை அடைந்ததும் அதன் கதவைத் திறக்க முயற்சிக்கிறான், ஆனால் கதவு அசைந்து கொடுத்தபாடில்லை.
இந்தக் கதவு வேறு திறக்கமாட்டேங்கிறதே... காவலர்கள் வருவதற்குள் நாம் எப்படியாவது இந்தப் பாழடைந்த மாளிகைக்குள் சென்று விட வேண்டும்.


ஆஹா, இதை நான் கவனிக்கவில்லையே, இதை அடித்து உடைத்து திறப்பது ஒன்றும் பெரிய காரியமில்லை, ஆனால் சத்தம் கேட்காமல் அல்லவா திறக்க வேண்டும்.
உடைக்கும் சத்தம் கேட்டால் எளிதாக காவலர்கள் வந்து நம்மைப் பிடித்துவிடுவார்கள்!
அப்போது ஒரு பெருச்சாளி சடசடவென்று அவன் காலுக்குப் பக்கத்தில் ஓடி வருகிறது.
அட இந்த பெருச்சாளியை யார் துரத்துகிறார்கள். இது ஏன் நமக்குப் பின்னாடி ஓடி வருகிறது.
அட, நமக்கு உதவி செய்யத்தான் இந்த எலி வந்திருக்கிறது.
அவன் சற்றும் எதிர்பாராத வகையில், அந்த மாளிகையின் சிறிய கதவைத் திறந்து கொண்டு எலி உள்ளே செல்கிறது.


எலி சென்ற சிறிய கதவைத் திறந்து அதன் உள்ளே போகிறான்.
என்ன இது ஒரே இருட்டாக இருக்கிறதே, எதுவுமே தெரியவில்லையே!
ஆனால் இதனுள் செல்வதைத் தவிர நமக்கு வேறு வழியுமில்லை! இல்லையென்றால் சூரிய உதயத்தில் சின்ன பழுவேட்டரையரின் ஆட்கள் கண்டிப்பாக நம்மைப் பிடித்து விடுவார்கள். அத்தோடு நம் வாழ்க்கை முழுவதும் பாதாளச் சிறைதான்.
(சற்று தூரம் சென்ற பின்)
பரவாயில்லையே இப்போது கொஞ்சம் கண் தெரிகிறதே.
என்று நினைத்துக் கொண்டே உள்ளே செல்கிறான்.


வந்தியத்தேவன் எதையோ பார்த்து ஆனந்த அதிர்ச்சி அடைகிறான்.
ஆஹா...! இது எந்த இடம் நான் காண்பது என்ன கனவா!!
இது தான் கஜானா போலும்! தனாதிகாரி பழுவேட்டரையரின் மாளிகையையொட்டி உள்ளது. கஜானாவின் பொக்கிஷம் எல்லாம் கரைந்து வருவது போல அல்லவா பெரிய பழுவேட்ட ரையர் பேசினார்... ஆனால் இங்கிருக்கும் பொக்கிஷங்களைக் கொண்டு பல சாம்ராஜ்யங்களை நடத்த முடியுமே!
அங்கிருந்த பொற்காசுகளைக் கண்டு மகிழ்ச்சி அடைந்த வந்தியத்தேவன்,
இங்கிருந்து போவதற்கே மனம் வராது போலிருக்கிறதே!


ஆஹா!
அள்ள அள்ளக் குறையாத பொற்காசுகள்!
ஆ...... அய்யோ...!
என்ன இது...!
சட்டென்று அந்த மண்டை ஓட்டை வீசி விடுகிறான்.
சோழர்கள் பல தேசத்து மன்னர்களை வெற்றி பெற்றுக் கொண்டு வந்து குவித்திருந்த மணிமகுடங்கள் அவன் கண்ணில் படுகிறது, மகுடமென்றால் யாருக்குத்தான் ஆசை வராது.


ஆஹா, இது எந்த நாட்டு மன்னனின் மணிமகுடம் என்று தெரியவில்லையே!
எந்த மகுடம் நம் தலைக்கு பொருந்துகிறது என்று பார்ப்போம்....
இந்த மகுடம் நம் தலைக்குச் சரியாக பொருந்துகிறதே!
என்று அந்த மகுடத்தைத் தலையில் வைத்துப் பார்க்கிறான்.
அப்போது எதிரிலிருக்கும் சிலந்திவலை தற்செயலாக அவன் கண்ணில் படுகிறது.
சிலந்தி வலையை நம் பெரியோர்கள் எதற்கோ ஒப்பிடுவார்களே...!
ஆங்! மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை இவை மூன்றுக்கும் தானே ஒப்பிடுவார்கள்!!! இந்த மணிமகுடம் நமக்கு வேண்டாம்!


சிலந்தி தன் வலையை விரித்து காத்திருப்பது போலத்தான், இந்த பொக்கிஷங்களும்! இதில் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.
அப்போது திடீர் என்று வவ்வால்கள் சடசட என்று சிறகடித்துப் பறக்கத் தொடங்கின.
ஆஹா, என்ன இது! திடீர் என்று ஏன் வவ்வால்கள் பறக்கின்றன?


யாரோ வருவது போல் இருக்கிறதே!


அப்போது அந்தப் பாதாள அறையில் மனிதர்களின் காலடி சத்தம் கேட்கிறது.
சரக்.. சரக்..
இந்த பொக்கிஷ அறையை விட்டு உடனே நாம் சென்றாக வேண்டும்.


அப்போது அவன் எதிரே தூரத்தில் மூன்று பேர் வருகிறார்கள். அதில் ஒருவன் தீவட்டி பிடித்துக் கொண்டு வர இருவர் உடன் வருகிறார்கள். அதில் ஒருவன் அவன் நண்பன் கந்தமாறன், மற்றொருவன்....
நண்பன் கந்தமாறனா?! இந்நேரத்தில் இங்கு ஏன் வருகிறான்! அவனுடன் யாரை அழைத்து வருகிறான்? ம்....
இளையராணியா...?
உடன் வரும் மற்றொரு நபர் இவன் கண்ணுக்கு இளையராணி போல் தெரிகிறது.


அட மதுராந்தகரா! அன்று பல்லக்கில் வந்தவர் இன்று ரகசியமாய் பாதாள வழியாக வருகிறாரே!
இளையராணிக்கும் இவருக்கும் உருவத்தில் என்ன ஒற்றுமை!
அதே சமயத்தில், தனது வலதுபுறத்தில் சற்று தூரத்தில் வெளிச்சம் வருவதைப் பார்க்கிறான் வந்தியத்தேவன்.
இன்று ஏதோ நடக்கப்போகிறது..!


அங்குப் பெரியப் பழுவேட்டரையர் கையில் தீவட்டியுடன் இளையராணி நந்தினியை உடன் அழைத்து வருகிறார்.
இந்த கிழவர் முதுமையில் நந்தினி தேவியை மணந்துகொண்டது, அவரின் அரசியல் சூழ்ச்சிக்கு எவ்வளவு வசதி -யாகப் போய்விட்டது.


அவர்களுக்குள் என்ன பேசிக் கொள்கிறார்கள்? அவர்கள் பேசுவது ஏதும் நம் காதில் விழ வில்லையே, ம்...!
இன்னும் சற்று அருகில் செல்வோமா? வேண்டாம், வேண்டாம்... இதைப் பற்றியெல்லாம், நாம் ஏன் யோசிக்க வேண்டும்? முதலில் இந்தப் பாதாள அறையைவிட்டு வெளியில் சென்றால் போதும்.


கந்தமாறனிடமே நாம் இங்கிருந்து தப்பிக்க உதவி கேட்கலாமா? இல்லை இல்லை, அது சரிப்பட்டுவராது. அவன் எடுத்துக்கொண்ட உறுதி மொழிக்கு, அவனே நம்மைக் கொல்ல வந்தாலும் வரலாம். ஒருவேளை நாம் அவனைக் கொல்ல நேரிட்டாலும் நேரிடலாம். அவர்களைப் பின் தொடர்ந்து சென்று முடிவில் ஏதாவது செய்து தப்பிக்க வேண்டியதுதான்.
கந்தமாறன் விடைபெறும் விதமாக பழுவேட்டரையரை வணங்கிவிட்டு வந்த வழியே காவலனுடன் புறப்படுகிறான்.
மதுராந்தகனும் நந்தினியுடன் அங்கிருந்து புறப்படுகிறான்.
பழுவேட்டரையர், தான் புறப்படும் முன் தொண்டையைக் கனைக்கிறார். அப்போது அவரைக் காவலன் திரும்பி பார்க்கிறான்.


காவலனிடம் கந்தமாறனைத் தீர்த்துக் கட்டிவிடும் படி மர்மமான முறையில் சமிக்ஞை செய்கிறார் பழுவேட்டரையர்.
பழுவேட்டரையர் செய்யும் சமிக்ஞை என்னவென்று புரிந்து கொண்டான் காவலன்.
அதே சமயத்தில் பழுவேட்டரையருக்குப் பின்னாலிருந்து நந்தினி ஏதோ சமிக்ஞை செய்கிறாள் காவலனுக்கு..
கந்தமாறனை பின் தொடர்ந்து செல்கிறான் காவலன், ஏதோ திட்டத்தோடு!


பழுவேட்டரையருக்கும், காவலனுக்கும் இடையில் நடந்த மர்ம பாஷையை தூரத்திலிருந்து பார்த்த வந்தியத்தேவனுக்கு, இருட்டில் அவர் கூறியது தெளிவாக புரியவில்லை என்றாலும் தன் நண்பனுக்கு ஏதோ ஆபத்து என்று தெரிந்து கொண்டான்.
எப்படியாவது நம் நண்பன் கந்தமாறனைக் காப்பாற்றியே ஆக வேண்டும்! நேராகக் காரியத்தில் இறங்கினால் காரியம் கெட்டுப் போய்விடும். தக்கச் சமயம் பார்த்துக் காவலனைத் தாக்கி நண்பனைக் காப்பாற்ற வேண்டும்.


ம்.... இவர்கள் இருவரும் எங்கே செல்கிறார்கள்? அந்தப் படிகளுக்கு மேலே ஏதும் வழி இருப்பதாகத் தெரியவில்லையே. ஒரு சிலைதான் இருக்கிறது!


அப்போது காவலன் அந்த சிலையை பிடித்துத் திருக
ஒரு பெரிய பாறை நகர்ந்து வழி தோன்றியது.
அதில் கந்தமாறன் நுழையும் தருவாயில் பின்னாலிருந்த காவலன் இடுப்பிலிருந்து சட்டென்று தன் குறுவாளை எடுக்கிறான்.
அடப்பாதகா!!!
என்று பதறித் தன் நண்பனைப் பின்னாலிருந்து கொல்ல முற்படும் காவலனைத் தடுக்க ஓடிவருகிறான் வந்தியத்தேவன்.


ஆனால் அதற்குள் கந்தமாறனின் முதுகில் அந்தக் காவலன் குத்தி விடுகிறான்.
ஆஆஆ...
சதக்


ஓடி வந்த வந்தியத்தேவன், காவலனின் கழுத்தை நெரித்து...
அடப்பாவி, நான் உன்னை என்ன செய்கிறேன் பார்.


நண்பா...!
நண்பா....!
அய்யோ...!


என்று பதறி அடித்துக் கொண்டு கந்தமாறனைத் தூக்குகிறான் வந்தியத்தேவன்.
அய்யோ.... நண்பா!!!


ஆஹா, நாம் கொஞ்சம் அசந்திருந்தாலும் இந்த முதலைகளுக்குப் பலியாகியிருப்போம்! நல்ல வேளை!!
நண்பா! நீ ஒன்றும் கவலைப்படாதே. நான் எப்படியும் உன்னைக் காப்பாற்றி விடுகிறேன்.
இருட்டில், அந்த ஆபத்தான பாதையில் தன் நண்பன் கந்தமாறனை சுமந்துகொண்டு செல்கிறான் வந்தியத்தேவன்.
தன் நண்பனைக் காப்பாற்ற பல சவால்களையும் கடந்து வருகிறான் வந்தியத்தேவன். இவன் அல்லவோ நண்பன்!
அன்று கந்தமாறனின் வீட்டில் விருந்து, உபச்சாரங்களில் கலந்து கொண்டுவிட்டு, மாமன் மைத்துனன் என்று பேசிவிட்டு இன்று இப்படிச் செய்துவிட்டாரே இந்தப் பெரிய பழுவேட்டரையர்.


ஒரு மரத்தடியில் தன் நண்பனை உட்கார வைத்து உயிர் இருக்கிறதா என்று பார்க்கிறான்.
கந்தமாறா, கந்தமாறா! என்னைத் தெரிகிறதா?
கந்தமாறன் அரைக் கண்ணைத் திறந்து..
நண்பனைத் தெரியாமலிருக்குமா? மறக்கத்தான் முடியுமா? பின்னால் நின்று முதுகிலே குத்தும் சினேகிதன் அல்லவா நீ....!
ஐயோ! நானா உன்னைப் பின்னால் இருந்து குத்தினேன்?
நீ குத்தவில்லை.... உன் கத்தி என் முதுகைத் தடவிக் கொடுத்தது...


அடப்பாவி! உனக்காக அல்லவா இந்தச் சுரங்க வழியில் அவசரமாகக் கிளம்பினேன். உன்னைத் தேடிப் பிடித்துச் சின்ன பழுவேட்டரையரின் கோட்டைக் காவல் படையில் சேர்த்து விடுவதாகச் சபதம் செய்துவிட்டு வந்தேன். உன்னை யாரும் எந்தவித உபத்திரவமும் செய்யாமல் தடுப்பதற்காகவே ஓடி வந்தேன். உனக்கு நன்மை செய்ய வந்த எனக்கு... அடடா! இனி இந்த உலகத்தில் யாரைத் தான் நம்புவது......
என்று கூறிக் கொண்டே மயக்கம் அடைகிறான்.
கந்தமாறனைத் தூக்கிக் கொண்டு காட்டுப் பாதையில் நடந்து வருகிறான் வந்தியத்தேவன்.
அப்போது மலர்களின் மணம் கமகமவென்று வந்தவுடன்,
சேந்தன் அமுதன் வீடு சமீபத்தில் தான் இருக்கவேண்டும். அவனிடம் கந்தமாறனை ஒப்படைத்துவிட்டால், நாம் எந்த ஒரு கவலையுமின்றி பழையாறைக்குச் செல்ல வேண்டியதுதான்!


சேந்தன் அமுதனின் தோட்டத்துக்குத் தன் நண்பன் கந்தமாறனைச் சுமந்து வருகிறான் வந்தியத்தேவன். அவன் சற்றும் எதிர் பாராத வகையில், அந்தத் தோட்டம் அனுமார் அழித்த அசோக வனம் போல் காட்சி தருகிறது.
ஆஹா! நம்மைத் தேடித்தான் பழுவேட்டரையரின் ஆட்கள் இங்கே வந்திருக்கிறார்கள்.



திரும்பி சுற்றும் முற்றும் பார்க்கிறான். அவனுடைய குதிரை இருப்பதைக் கண்டு,
நல்ல வேளை! நம் குதிரையை இங்கேயே விட்டுச் சென்றிருக்கிறார்கள் ஒரு வேளை நம்மைப் பிடிப்பதற்காகத்தான் குதிரையை விட்டு வைத்திருக்கிறார்களோ!
அப்படியே என்றாலும் அவர்களை ஒரு கை பார்த்துவிட வேண்டியது தான்!
சேந்தன் அமுதன் வீட்டின் அருகில் வந்து...
அமுதா... அமுதா...


அழுதா... அழுதா...
நீங்களா! எப்படி அவர்களிடமிருந்து தப்பித்தீர்கள்?
ஆமாம், யார் இவர்? இவருக்கு என்ன ஆயிற்று?


நீதான் எனக்கு உதவி செய்ய வேண்டும். நான் வந்து கொண்டிருந்த போது வழியில் யாரோ இவனைக் குத்திப் போட்டிருந்தார்கள். நான் எடுத்து வந்தேன்.
சரி, நீங்கள் உடனே புறப்படுங்கள்! பழுவேட்டரையரின் ஆட்கள் மீண்டும் உங்களைத் தேடி வரக் கூடும்.


இவனை எப்படியாவது.......
அதைப் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். இம்மாதிரி காயங்களுக்கு சிகிச்சை அளிக்க என் தாயாருக்கு நன்கு தெரியும் .


சேந்தன் அமுதனின் வீட்டின் உள்ளே கந்தமாறனைப் படுக்க வைக்கிறான் வந்தியத்தேவன். அப்போது தன் தாயிடம் சேந்தன் அமுதன் ஏதோ கூறுகிறான்.


அமுதா, உனக்கும் உன் அன்னைக்கும், மிகவும் சிரமம் கொடுத்து விட்டேன். உங்கள் அழகான பூந்தோட்டத்தைப் பழுவேட்டரையரின் ஆட்கள் பாழாக்கி விட்டார்களே...!
அது போனால் போகட்டும். நீங்கள் தப்பி பிழைத்தீர்கள் அல்லவா அதுவே எனக்கு போதும்.


அப்போது மீண்டும் பழுவேட்டரையர்களின் ஆட்கள் அங்கு வந்தியத்தேவனைத் தேடி வருகிறார்கள்.
டகடக்..டகடக்...
நண்பரே! உடனே இங்கிருந்து புறப்படுங்கள், குதிரைகளின் காலடிச் சத்தம் கேட்கிறது. வருவது பழுவேட்டரையரின் ஆட்களாகத்தான் இருக்கும்.


நீ எனக்கு இன்னும் ஒரு உதவி செய்ய வேண்டும். நான் அவசரமாகப் பழையாறைக்கு முக்கிய செய்தி ஒன்று கொண்டு போக வேண்டும். கொஞ்ச தூரம் நீ வழிகாட்டுவதற்கு வருகிறாயா?


சேந்தன் அமுதன், தன் தாயிடம் கந்தமாறனைப் பார்த்துக் கொள்ளும்படி சில மூலிகைகளை கொடுத்து, அவனுக்கு வைத்தியம் செய்யும்படி ஜாடையாகக் கூறி அங்கிருந்து விடைபெற்றுச் செல்கின்றான்.


அமுதா! நீ என்னை நம்புகிறாய் அல்லவா?
நான் கடவுளை நம்புகிறேன்! உன்னிடம் பிரியம் வைத்து இருக்கிறேன்.


உள்ளே யார் அது? ம்... கதவை திற!



'டப்...'
'டப்...'
'டப்...'
கதவைத் திறக்கப் போகிறாயா இல்லையா?
''டம்''
டம்
டம்
''டம்''
ம்... வழியை விடு!
பே... பே...!


என்னையா தடுக்கிறாய்?
சேந்தன் அமுதனின் தாயைக் காவலன் தள்ளிவிடுகிறான்.
இங்கே பாருங்க ரத்தம் ஒழுகியிருக்கு!
இங்கே பாரு, ஒருத்தன் கட்டில்ல படுத்திருக்கான். இவனைத் தூக்குங்கடா?


சேந்தன் அமுதனின் தாய் அதிர்ச்சி அடைந்து ஏதும் செய்ய முடியாமல் தவிக்கிறாள்...
பே... பே...! பே... பே...!


கந்தமாறனைப் பழுவேட்டரையரின் ஆட்கள் கட்டிலுடன் தூக்கிச் செல்கிறார்கள்.


உடன் வந்த காவலன் வந்தியத்தேவன் தப்பிச் செல்வதைக் கண்டு....
அதோ பாருங்கள்!
அங்கே குதிரையில் இருவர் செல்கிறார்கள்!
டகடக்... டகடக்... டகடக்


சேந்தன் அமுதனை அழைத்துக்கொண்டு, பழையாறை நோக்கி வருகிறான் வந்தியத்தேவன். வந்தியத்தேவனைக் கைது செய்ய, பின் தொடர்ந்து வருகிறார்கள் பழுவேட்டரையரின் ஆட்கள்.
அமுதா! உனக்கு குதிரை ஏற்றம் தெரியும் அல்லவா?
எனக்கு அதெல்லாம் தெரியாது. தேவாரம் பாடவும், பூமாலை தொடுக்கவும்தான் தெரியும்.


வேகமாக வாருங்கள், இன்று அவர்கள் நம்மிடமிருந்து தப்ப முடியாது.
டகடக். டகடக்.. டகடக்..


குதிரையின் காலடிச் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்த வந்தியத்தேவன்...
ஆகா! அவர்கள் நம்மை நெருங்கிவிட்டார்கள்.


அமுதா! நான் கூறுவது போல் நீ செய்ய வேண்டும்.
நான் என்ன செய்ய வேண்டும்?
சலக் சலக்


அக்கரை நாம் சென்றதும், நான் கரையோரம் குதித்து ஏதாவது புதரில் மறைந்து கொள்கிறேன். அவர்கள் உன்னைக் கேட்டால், நான் உன்னை நட்டாற்றில் விட்டு விட்டு ஆற்றில் குதித்துத் தப்பி விட்டதாக நீ கூற வேண்டும்! என்ன சொல்கிறாய்?
நண்பரே! என்ன உதவி வேண்டும் ஆனாலும் கேளுங்கள், உங்களுக்கு நான் செய்கிறேன். ஆனால் பொய் மட்டும் என்னால் சொல்ல முடியாது.


அவர்கள் நம்மை நெருங்கி விட்டார்கள்! ஆபத்துக்குப் பொய் சொல்லுவது ஒன்றும் குற்றமில்லை. என்ன சொல்கிறாய்?
ஒரு போதும் என்னால் பொய் சொல்ல முடியாது.
அதற்குள் காவலர்கள் அருகில் வந்துவிட்டனர்.
இன்று அவனைப் பிடித்தே ஆக வேண்டும்.
மேலும் நேரத்தை வீணடிக்க விரும்பாத வந்தியத்தேவன்,
நண்பா....!
எனக்கு வேறு வழியில்லை!
என்று கூறி ஆற்றில் குதித்து விடுகிறான்.


ஐய்யோ! இது என்ன, ஆழம் குறைவாக இருந்தது என்றல்லவா குதித்துவிட்டேன். இவ்வளவு வேகமாக என்னை அடித்துச் செல்கிறதே!
ஆகா...! நண்பனுக்கு நீந்த தெரியாது போல் இருக்கிறதே!


எந்தக் கனவு பலித்ததோ இல்லையோ, அவன் கடம்பூர் மாளிகையில் தங்கிய அன்று கண்ட கனவு பலித்துவிட்டது.
ஐயோ! நம் விதி இதுதானா! ஜோதிடர் கூறியது எல்லாம் பொய்தானா!
குறிப்பு: ஓடுகின்ற நீர் ஆழம் குறைவாக இருந்தாலும், அதன் வேகம் அதிகமாக இருக்கும்.
குதிரை, சேந்தன் அமுதனின் கட்டுப்பாட்டை மீறித் திமிறி ஓடுகிறது.
ஏய் நில்லு! எங்ககிட்ட இருந்து நீ தப்பிக்க முடியாது.
ஈஸ்வரா! நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்.
குதிரை தறிகெட்டு ஓடி மூங்கில் காட்டுக்குள் செல்கிறது. அப்போது சேந்தன் அமுதனின் குடுமி மூங்கில் கிளையில் மாட்டிக் கொள்ள, அதற்குள் காவலர்கள் அவனை மடக்கிவிடுகிறார்கள்.
ஆஆஆஆ...
எங்கே அவன்?


சேந்தன் அமுதனை பழுவேட்டரையரின் ஆட்கள் ஈட்டி முனையில் கைது செய்கிறார்கள். அதை ஆழ்வார்க்கடியான் ஒரு மறைவான புதரிலிருந்து பார்க்கிறான்.
தம்பி ஒழுங்காக உண்மைய சொல்லிடு.... இல்லன்னா பாதாளச் சிறைதான்!
இவன் தஞ்சை தளிக்குளத்தார் கோயிலுக்கு புஷ்பக் கைங்கரியம் செய்பவன் ஆயிற்றே...
இந்தந் சாதுப்பிள்ளை எப்படி அந்த வீர வாலிபனின் குதிரையில் வந்தான்! ம்......???
இவ்வழியாகத்தான் தஞ்சையிலிருந்து பழையாறைக்குச் செல்ல வேண்டும் என்பதை அறிந்திருந்த ரவிதாசன், வந்தியத்தேவனுக்காக இங்கு வந்து காத்திருக்கிறான்.
நாம் காத்திருந்தது வீண் போகவில்லை,


ஆற்று வெள்ளத்திலிருந்து தப்பிய வந்தியத்தேவன், தன் குளிரைப் போக்கிக் கொள்ளவும், தன் ஆடைகள் காய்வதற்கும், விஷ ஜந்துக்களிடமிருந்து இரவு தன்னைக் காத்துக் கொள்வதற்காகவும் தீ மூட்டி அதன் அருகில் அமர்ந்தபடி இருக்கிறான்.
இனி ஒரு சமயம் இந்த மாதிரி வேலையை ஒத்துக் கொள்ள கூடாது! போர்க்களத்திற்குச் சென்று எதிரியிடம் நேருக்கு நேர் நின்று போர் புரிந்து விடலாம், ஆனால் யாருடனும் சண்டையிடாமல் பதுங்கிப் பதுங்கி ஓலையைக் கொண்டு செல்வது நம்முடைய இயல்புக்கு ஏற்றது அல்ல.
அப்போது திடீரென்று யாரோ ஒருவன் பின்னாலிருந்து வந்து வந்தியத்தேவனின் கழுத்தை நெரிக்கிறான்.
மரியாதையாக அந்த மோதிரத்தைக் கொடு.
யார் நீ? கோழையைப் போல் பின்னால் வந்து தாக்குகிறாய்! ஆண்மகனாய் இருந்தால் நேருக்கு நேர் வா!


என்று கூறி, சட்டென்று லாவகமாக ரவிதாசனைத் தூக்கி தனக்கு முன்பக்கம் வீசுகிறான்.
நடார்
தம்பி! நீ இங்கிருந்து உயிரோடு செல்ல வேண்டும் என்றால்......! மரியாதையாக அந்த முத்திரை மோதிரத்தைக் கொடுத்துவிடு.
இந்த மிரட்டலுக்கு வேற ஆள பாரு!
நீ ஒழுங்கா கேட்டால் கொடுக்க மாட்ட!
என்று கையில் கட்டாரியுடன் தாவி வந்தியத் தேவனைத் தாக்க வந்தான்.


அப்படியா.....! இந்தா வாணர்குலத்தின் ஒரு குத்து! வாங்கிக்கோ.
டிஷ்
என்று ஒரு பலமான குத்து விட்டான் வந்தியத்தேவன்.


"ஆஆஆஆ"


நம்ம வந்தியத்தேவனின் அடியைத் தாங்க முடியாமல், விட்டால் போதும் என்று ஓடுகிறான் ரவிதாசன்.
இன்னொரு சமயம் அவனைப் பார்த்துக் கொள்கிறேன்.
மறுநாள் காலை தஞ்சைக் கோட்டையில் தண்டோரா அடிக்கப்படுகிறது.
தடும்
தடும்
தடும்


இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால், காஞ்சியிலிருந்து வந்த ஒற்றன், தஞ்சை கோட்டைக் காவலை மீறி கோட்டையுள்ளே நுழைந்து, சம்புவரையரின் மகன் கந்தமாறனின் முதுகில் குத்திவிட்டுத் தப்பி விட்டான்!
துடும்
துடும்
துடும்


தண்டோரா எல்லாம் சும்மா நாடகம்! பழுவேட்டரையருக்கு பிடிக்காத யாரோ ஒருத்தன பிடிச்சி பாதாளச் சிறையில போடணும்... அவ்ளோதான்!




சோழநாட்டின் தலைநகரான தஞ்சாவூரில் அடித்த தண்டோராவின் ஒலி, மாமல்லபுரத்தில் இருக்கும் பட்டத்து இளவரசர் ஆதித்த கரிகாலருக்கு எட்டியது.




தாத்தா! இந்தப் பழுவேட்டரையர்களின் அகந்தையை என்னவென்று சொல்வது! நான் அனுப்பிய தூதுவன் பேரில் ஒற்றன் என்று குற்றம் சுமத்தியுள்ளார்களாம்!
அவனைப் பிடித்துத் தருபவர்களுக்கு ஆயிரம் பொன் வெகுமதி என்று பறை அறிவித்திருக்கிறார்களாம்!
அதுமட்டுமல்லாது, சக்கரவர்த்தியைச் சிறையில் வைத்திருப்பது போல் வைத்திருக்கிறார்களாம்!


இதையெல்லாம் நினைத்து என் நெஞ்சம் கொதிக்கிறது! அந்தப் பாவிகள் பழுவேட்டரையர்களின் நோக்கம்தான் என்ன?


என் நெஞ்சமும்தான் கொதிக்கிறது! இரட்டை மண்டலப் படையெடுப்புக்காக, சேகரித்த உணவுப் பண்டங்களை எல்லாம் இலங்கைக்கு அனுப்புவதை நினைத்தாலே...
இலங்கையில் இருக்கும் சோழநாட்டு வீரர்களுக்கான உணவுப் பண்டங்களை மாமல்லபுரத்தில் உள்ள துறைமுகத்தின் வழியாக கப்பலில் ஏற்றி அனுப்புகிறார்கள்.
தஞ்சையில் இருந்து கோடிக்கரை வழியாக ஏற்றி அனுப்புவதுதான் எளிது! எதற்காகத் தொண்டை மண்டலத்தில் இருந்து அனுப்புகிறார்கள்?
அதெல்லாம் நமக்கெதற்கு? வந்த வேலையை மட்டும் பாருங்கள்!
வேறென்ன செய்வது பார்த்திபா? (கரிகாலன்)


என் பாட்டன் பராந்தகனின் கனவை அல்லவா அவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள்!
அதுவும் அல்லாமல், அநுராதபுரத்தையும் கைப்பற்றி வெற்றிமேல் வெற்றி பெற்று வருகிறார்கள். அப்படிப் பட்ட சோழ வீரர்களுக்கு உணவு அனுப்பாமல் பட்டினியால் சாக விட முடியுமா?
உணவுப் பண்டங்களை அனுப்ப வேண்டாம் என்று யார் சொன்னது? சோழ நாட்டிலிருந்தோ அல்லது பாண்டிய நாட்டிலிருந்தோ அனுப்ப வேண்டியது தானே!
தாத்தா, தாங்கள் ஏன் மௌனமாய் இருக்கிறீர்கள்?


இளவரசே! நான் கூறுவதைக் கேளுங்கள், இப்போதே புறப்படுவோம்!
நம் தொண்டை மண்டலத்தின் பாதிப் படை-யை அழைத்துக் கொண்டு இலங்கை செல்வோம். இலங்கைப் போரை முடித்துக் கொண்டு அப்படியே தஞ்சை சென்று...
அந்த பழுவேட்டரையர்களை ஒரு கை பார்த்து விட்டு, சக்கரவர்த்தியை மீட்டுக் காஞ்சிக்கு அழைத்து வருவோம். யோசிக்க வேண்டாம்!


கடலின் அருகில் வந்ததும் மூவரும் ரதத்திலிருந்து இறங்கி ஆளுக்கு ஒரு பாறையைத் தேர்வு செய்து அதில் அமர்ந்துவிடுகிறார்கள்.
தாத்தா! தாங்கள் ஏன் மௌனமாகவே இருக்கிறீர்கள்?
இளவரசே! தாத்தாவைக் கேட்டால் பொறுமை உப - தேசம்தான் செய்வார்.
என்று பரிகாச தொனியில் பேசுகிறான். அதைக் கேட்ட மலையமான் ஏதும் பேசாமல் அவனைக் கோபத்தில் எரித்து விடுவது போல் பார்க்கிறார்.


தாத்தா, வாயைத் திறந்து ஏதாவது பேசுங்கள்.
கரிகாலா! உன் நண்பன் இந்த கடல் அலைகளோடு போட்டிபோட்டுக் கொண்டு கூச்சலிடுகிறான். இதன் இடையில் இந்த வயதானவன் எதைப் பேச?
நண்பா! நீ கொஞ்சம் சும்மாயிரு...


இதோ, நான் வாயை மூடிக் கொண்டேன்.
ஆனால், இந்த சமுத்திர ராஜன் தான் சதா ஆர்ப்பரித்துக் கொண்டே இருக்கிறான். மலை அரசரிடம் கொஞ்சமும் பயம் இல்லை போல் இருக்கிறது. (என்று மீண்டும் பரிகசித்தான்.)
தன் பாட்டனை பரிகசிப்பதைக் கண்ட கரிகாலன், பார்த்திபேந்திரனைப் பார்த்து ஒரு முறை முறைக்கிறான், அவனைக் கண்டிக்கும் விதமாக....


தம்பி! ஒரு காலம் அப்படியும் இருந்தது. இந்தக் காசியில் உள்ள அரசர்கள் எல்லாம் மலையமான் என்ற என் பேரை கேட்டதும் நடு நடுங்கத்தான் செய்தார்கள். இந்த உடம்புக்கு வயதாகி விட்டதல்லவா, அதனால் அனைவரும் துள்ள ஆரம்பித்து விட்டார்கள். மேற்கே இருந்து வந்த பழுவேட்டரையர்கள் எங்களை அழித்துவிடப் பார்க்கிறார்கள்.
அது ஒரு நாளும் நடக்காது தாத்தா!
குறிப்பு: மேற்கே இருந்து வந்தவர்கள் என்று மலையமான் குறிப்பிடுவது, பழுவேட்டரையர்கள் கேரளாவிலிருந்து வந்தவர்கள் என்பதைத்தான்.


கரிகாலா! அவர்களின் நோக்கம் என்னதென்று கேட்டாய் அல்லவா, நான் கூறுகிறேன் கேள், உன்னையும் உன் தம்பியையும் தனித் தனியே பிரித்து பலவீனப்படுத்துவதுதான். அவன் இலங்கை போரில் தோற்க வேண்டும், அதைப் பார்த்து அவன் மேல் நீ கோபம் கொண்டு நீங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்ள வேண்டும்.


அதைக் கண்டு இந்தக் கிழவன் வருத்தப்பட வேண்டும்.
அவர்களின் கனவு ஒரு போதும் நிறைவேறாது. என் தம்பிக்காக நான் உயிரையும் கொடுப்பேன்!
அதை நான் நன்கு அறிவேன்.
கரிகாலா! சில தினங்களுக்கு முன்பு, கடம்பூர் மாளிகையில் ஒரு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றிருக்கிறது.
அதை நானும் அறிவேன்.
அதில் என்னை அழைக்காத போதே எனக்குச் சந்தேகம் எழுந்தது!
தாத்தா! அந்தக் கிழடுகளால் அப்படி என்னத்தைப் புரட்டிவிட முடியும். மொடா மொடாவாக கள்ளைக் குடித்துவிட்டு, நன்றாகச் சாப்பிட்டு உறங்கியிருப்பார்கள்.


கிழருகளைப் பற்றிய உன் எண்ணம் இதுதானா! அப்போ நான் என்னத்த சொல்வது? (என்று முகத்தைக் கோபத்துடன் வேறுபக்கம் திருப்பி கொள்கிறார்)
தாத்தா! தாங்களையும் அவர்களையும் ஒன்றாகச் சேர்க்க முடியுமா?
அந்த கிழவன் சில தினங்களுக்கு முன்னால், ஒரு இளம் பெண்ணை மணந்துள்ளான்! இளம் பெண்ணை மணந்த கிழவனைப் போல் உலகில் அபாயகரமான இளைஞன் யாரும் இல்லை என்பதைத் தெரிந்து கொள்.
அவளைச் சற்று நேரமாவது மறந்திருக்கலாம் என்றால்...


கரிகாலனின் முகத்தைக் கண்ட பார்த்திபேந்திரன்,
பழுவேட்டரையரின் திருமணத்தைப் பற்றிப் பேசினாலே ஏன் இளவரசரின் முகம் இவ்வாறு வாடுகிறது!
உடனே பேச்சின் போக்கை மாற்றும் எண்ணத்துடன் பார்த்திபேந்திரன்,
தாத்தா! அந்தக் கல்யாணத்தைப் பற்றி பேச்சு இப்போது எதுக்கு? மேற்கொண்டு கூறுங்கள் ஆலோசனைக் கூட்டத்தில் என்ன முடிவெடுத்தார்கள்?
அவளை மறப்பது ஏது! ஒன்று அவள் சாக வேண்டும், அல்லது நான் சாக வேண்டும்...
மதுராந்தகனுக்கு அரசுரிமை வழங்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது!


பாட்டன் மலையமான் கூறியது கேட்டுத் தன்னிலைக்கு வந்த கரிகாலன்,
தாத்தா! அது வதந்தி என்றல்லவா இதுவரை நான் நினைத்திருந்தேன். என் சிற்றப்பன் மதுராந்தகத் தேவனுக்கு இவ்வாறெல்லாம் தோன்றியிருக்குமா என்ன!?
ஏன் தோன்ற கூடாது? உன் பாட்டனாருக்கு முன்னால், உன் பெரிய பாட்டனார் கண்டராதித்த தேவன்தானே இந்தச் சோழ நாட்டை ஆண்டார். அவருடைய குமாரனுக்கு உங்களைக் காட்டிலும் அதிக உரிமை உள்ளதல்லவா...
மலையமான் இவ்வாறு கூறியதைக் கேட்டு உணர்ச்சிவசப்பட்ட பார்த்திபேந்திரன்,
தாத்தா! வீராதிவீரர் கரிகாலர் எங்கே? அந்த வாள் பிடிக்கத் தெரியாத கோழை எங்கே? அந்தப் பேடி மதுராந்தகனால் என்ன செய்து விட முடியும்?


சில காலம் முன்பு வரை... துறவியாகப் போகிறேன், சிவ கைங்கர்யம் செய்யப் போகிறேன் என்று சொல்லிக் கொண்டு இருந்தவன், ஒன்றுக்கு மூன்று திருமணம் செய்து கொண்டு போகிறான்.
செய்து கொள்ளட்டும், அதனால் என்ன?



பேரா! நீ நினைப்பது போல் அது சாதாரணத் திருமணங்கள் அல்ல, அது இராஜகாரியமான திருமணங்கள்!
இதன் பின்னால் அரசியல் சூழ்ச்சி அடங்கி இருக்கிறது.


சட்டென்று ஆவேசத்துடன் எழுந்த கரிகாலன்,
தாத்தா! எனக்கு இந்த இராஜ்யம் ஒரு பொருட்டு அல்ல. வேண்டுமானால் என் வாளின் துணை கொண்டு இதைப்போன்று பத்து இராஜ்யத்தை ஸ்தாபித்துக் கொள்வேன். ஆனால் அதில் நியாயம் என்ன? முதலிலேயே மதுராந்தகனுக்குத்தான் இராஜ்யம் என்று சொல்லியிருந்தால் நான் குறுக்கே நின்றிருக்க மாட்டேன். நாடு நகரம் அறிய எனக்கு இளவரசுப் பட்டாபிஷேகம் செய்து விட்டு, இப்போது எப்படி மாறலாம்? இதில் உங்களுக்குச் சம்மதமா? (என்று கர்ஜித்தான்.)


நான் ஒரு நாளும் சம்மதிக்கப் போவதில்லை. நீ சம்மதித்து இராஜ்யத்தை மதுராந்தகதேவனுக்குக் கொடுப்பதாகச் சொன்னால், முதலில் இந்த வாளால் கண்டதுண்டமாக உன்னை வெட்டிப் போடுவேன். பிறகு உன்னைப் பெற்ற உன் தாயை வெட்டிப் போடுவேன். பிறகு உன் தாயைப் பெற்றவனாகிய நானும் என் கையினாலேயே வெட்டி கொண்டு சாவேன்! என் உடம்பில் உயிர் இருக்கும் வரை இந்த சோழராஜ்யம் உன்னை விட்டுப் போக விட மாட்டேன்.
என்று மலையமான் பொங்கி எழுந்தார்.


அப்படிச் சொல்லுங்கள் தாத்தா! அப்படிச் சொல்லுங்கள்!
தாத்தா! தாங்களுடைய எண்ணம் அதுவானால் தயக்கம் ஏன்? உடனே படையைத் திரட்டிக் கொண்டு தஞ்சைக்குப் புறப்படுவோம், பழுவேட்டரையர்களையும் மற்றும் அவர்களுடன் சேர்ந்தவர்களையும் ஒழித்துவிட்டு தஞ்சை கோட்டையைப் பிடிப்போம்! சக்கரவர்த்தியை விடுதலை செய்வோம், தாங்களுடைய ஆசி மட்டும் எங்களுக்கு இருந்தால் போதும்! நானும் பார்த்திபேந்திரனும் சேர்ந்தால் எங்களை வெல்லக் கூடியவன் இந்த உலகில் யார்? (என்று கர்ஜித்தான்.)


உங்களைப் போரில் வெல்ல முடியாது, உண்மைதான்! ஆனால் படையுடன் நீங்கள் தஞ்சையை நெருங்கும்போதே பெற்ற தகப்பனிடமே மகன் யுத்தம் செய்ய வருவதாகக் கதைகட்டி விடுவார்-கள்! அந்த அவமானம் தாங்காமல் சக்கரவர்த்தி உயிரை விட்டுவிட்டார் என்றும் சொல்லி விடுவார்கள்.
அதை நம்புகிற ஜனங்களும் இருக்கக் கூடும் அல்லவா?
"பெற்ற தகப்பனோடு யுத்தம் செய்ய வந்தவன்" எனும் பழிச் சொல்லை உன்னால் தாங்க முடியுமா?
சிவ சிவா! கேட்கவே சகிக்கவில்லை!
அதனால்தான் முதலிலேயே சொன்னேன், பெரிய அபாயம் நம்மைச் சூழ்ந்து இருக்கிறது என்று!
உபாயம் என்ன தாத்தா?
உபாயம் என்ன?
இலங்கையிலிருந்து அருள்மொழியை இங்கு அழைத்து வரச் செய்ய வேண்டும். அவன் போர்க்களத்தை விட்டு எளிதில் வரச் சம்மதிக்க மாட்டான்.


அவன் மனத்தை மாற்றி அழைத்து வரக்கூடிய ஆற்றல் உள்ள ஒருவனை அனுப்ப வேண்டும். போகிறவன் வந்தியத்தேவனைப் போல தனக்கு சம்மந்தமில்லாத காரியங்களில் தலையிடக் கூடாது.
கிடைத்த சந்தர்ப்பத்தை விடுவானா பார்த்திபேந்திரன்,
பார்த்தீர்களா...! நான் அப்போதே சொன்னேனே.
என்று வந்தியத்தேவன் மீது குற்றம் சாட்டுகிறான்.
பார்த்திபேந்திரன் கூறியதைப் பொருட்படுத்தாமல் கரிகாலன், தாத்தா மலையமானிடம்,
வந்தியத்தேவனைப் பற்றித் தங்களுக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா?


அவனைப் பற்றி முதலில் சந்தேகமாக கூட இருந்தது. சம்புவரையர் மாளிகையில் கூட்டம் நடந்த அன்று அவனும் அங்கிருந்திருக்கிறான்! ஆனால், சதியில் அவனுக்குச் சம்பந்தமில்லையென்று பிறகு தெரிந்து கொண்டேன்.
தாத்தா! இதெல்லாம் தங்களுக்கு எப்படி தெரிந்தது?
கடம்பூரில் நடந்த விருந்துக்கு என்னை அழைக்காத போதே எனக்குக் கொஞ்சம் சந்தேகம் உண்டாயிற்று.
பிறகு அங்கு சென்றுவிட்டுத் திரும்பிய குன்றத்தூர் கிழாரை வழியிலேயே சிறைப் பிடித்து என் மலைக் கோட்டைச் சிறைக்குக் கொண்டு சென்று அவரிடமிருந்து அங்கு நடந்ததை எல்லாம் தெரிந்து கொண்டேன்.


நீர் சொல்லுவது அனைத்தும் உண்மைதானே?
நடுநிசிக் கூட்டத்தில் நடைபெற்ற அனைத்து விஷயங்களையும் ஒன்று விடாமல் கூறிவிடுகிறார் குன்றத்தூர் கிழார்.
நான் சொல்லுவது உண்மைதான் மலையரசரே, இதுதான் நடந்தது!


வந்தியத்தேவன், சம்புவரையரின் மகன் கந்தமாறனுடைய சிநேகிதனாமே!
ஆமாம் தாத்தா! நம்முடைய படையில் வடபெண்ணைக் கரையில் இருவரும் ஒன்றாகக் காவல் புரிந்தார்கள். அதிலிருந்து அவர்களுக்கு நட்பு ஏற்பட்டிருந்தது என்பது எனக்கும் தெரியும்....
ம்...! பிறகு ஒருவழியாக அவன் சதியில் சம்பந்தப்பட்டானா...? இல்லையா...? என்பதை நான் தெரிந்து கொள்ள முடிந்தது.
எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?
தஞ்சைக் கோட்டைக்குள், கந்தமாறனுடைய முதுகில் குத்திவிட்டு வந்தியத்தேவன் தப்பிச் சென்று விட்டான் என்று தெரிந்ததும்.
தாத்தா! இதை ஒரு நாளும் நான் நம்ப மாட்டேன்! வந்தியத்தேவன் வேறு எது செய்தாலும், செய்யாவிட்டாலும் ஒருவனுடைய முதுகில் குத்தக்கூடிய சண்டாளன் இல்லை! அதுவும் நண்பனுடைய முதுகில்...


அப்படி அவன் நம் எதிரிகளுடன் சேர்வது என்றால் அப்போது இந்த பூமியே தலைகீழாகி விடும். அலை கடல் வறண்டு விடும், வானம் இடிந்து விழும், சூரியன் ராத்திரியில் உதிப்பான், சோழர் குலம் சர்வ நாசத்தை அடையும்.
இளவரசர் சொல்வதை நானும் ஒத்துக் கொள்வேன்.
உங்க சிநேகிதரிடம், உங்களுக்கு உள்ள நம்பிக்கையைக் கண்டு வியக்கிறேன்!
நான் அவனிடம் சொல்லும் குற்றம் ஒன்றே ஒன்றுதான்! அழகான பெண் முகத்தைக் கண்டால் அவனுடைய மதி மயங்கி விடும், அவன் தலை கிறுகிறுத்து விடும்!


அது தெரிந்தபடியால்தான் சக்கரவர்த்திக்கு ஒரு ஓலையும், அப்படியே இளைய பிராட்டி குந்தவைக்கு ஒரு ஓலையும் கொடுத்து அனுப்பினேன். இளவரசியை ஒரு தடவை அவன் பார்த்து விட்டால், அப்புறம் தப்புவது ஏது? அவளுக்கு அடிமையாக இருக்க வேண்டியதுதான்.
இளையபிராட்டிக்கு ஓலை கொடுத்தனுப்பி -யதைப் பற்றி, இளவரசர் நம்மிடம் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லையே!
ஓகோ! அப்படியா! வந்தியத் தேவனிடம் இருந்து ஏதாவது செய்தி வந்ததா?
இதுவரை ஒன்றும் வரவில்லை.


கரிகாலா! அருள்மொழி இவ்விடம் வந்த பிறகு உன் சகோதரியையும் இங்கு தருவித்துவிட வேண்டியதுதான். அப்புறம் நமக்கு ஒரு கவலை-யும் இல்லை. இளைய பிராட்டியிடம் யோசனை கேட்டு அதன்படி நடந்து வந்தாலே போதும்!
தாத்தா! இந்த விஷயத்தில் வந்தியத்தேவனைக் காட்டிலும் தாங்கள் மோசமாய் இருக்கிறீர்கள்.
ஹாஹாஹா...!
கரிகாலா! இளைய பிராட்டி குந்தவைப் போன்ற அறிவு செல்வத்தைப் படைத்தவர் ஆண்களிலோ, பெண்களி-லோ இது வரையில் நான் பார்த்ததில்லை. நமது முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் எப்படிப்பட்டவர்....? அவரே இளைய பிராட்டியிடம் யோசனை கேட்பார் என்றால், வேறு என்ன வேண்டும்!
அதெல்லாம் சரிதான், ஒரு வேளை வந்தியத்தேவன் *இளைய பிராட்டியைப் பார்ப்பதற்கு முன்னால் வேறு ஒரு பெண்ணைப் பார்த்து மயங்கியிருந்-தால் என்ன செய்வது?
* இளவரசி


உதாரணமாக... அந்தப் பழுவூர் இளையராணியைப் பார்த்திருந்தால்?
வந்தியத்தேவன் மீது கொண்ட காழ்ப்புணர்ச்சியினால், இவ்வாறு பேசுகிறான் பார்த்திபேந்திரன்.
வந்தியத்தேவனைக் குறை சொல்லவில்லை என்றால் இவனுக்குத் தூக்கமே வராது!
அது இருக்கட்டும்.
பார்த்திபேந்திரா! நான் சொல்வதைக் கேள். நீ நாளைக்கே இலங்கைக்குப் புறப்பட வேண்டும்.


பார்த்திபேந்திரனை இலங்கைக்கு அனுப்புவதென்று முடிவு செய்துவிட்டுக் கடற்கரையிலிருந்து புறப்படுகிறார்கள்.
நான் அரவான் களபலிக் கூத்து முடிந்ததும் விரைவாக வந்து விடுகிறேன். நீங்கள் சென்று ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.
ஆகட்டும் தாத்தா!
மலையமானின் ரதம் புறப்பட்டதும் கரிகாலனும் பார்த்திபேந்திரனும் மாமல்லபுரத்தில் உள்ள பல்லவர்களின் பழைய அரண்மனைக்குச் செல்கின்றனர்.


பார்த்தாயா! இந்த வயதிலும் என் பாட்டனார் கூத்து பார்க்கப் போய்விட்டார். என்ன இருந்தாலும் பழைய காலத்து மனிதர்களே மனிதர்கள்தான்!
அவர்களுடைய உடல் வலிமையும், மனோதிடமும் இந்தக் காலத்தில் யாருக்கு வரும்?
அரசே! பழைய கால மனிதர்கள் சாதித்த எந்தக் காரியத்தை நாம் நம் காலத்தில் சாதிக்கவில்லை?
தங்களைப் போல் இளம் பருவத்திலேயே போர்க்களத்தில் வீரச்செயல் புரிந்தவர்களைப் பற்றிக் கதைகளிலும், காவியங்களிலும் கூட இதுவரையில் நான் கேட்டதில்லையே!
பார்த்திபேந்திரா! நீ உண்மை பேசுபவன் என்பதை நான் நன்கு அறிவேன். இருப்பினும் நான் ஒன்றைச் சொல்கிறேன்.
முகஸ்துதியைப் போல் ஒருவனைப் பாதாளப் படுகுழியில் தள்ளக் கூடியது வேறொன்றுமில்லை!


பார்த்திபா! நாலு புறமும் நன்றாகப் பார்! இந்த மாமல்லபுரத்தைப் போன்ற ஒரு சொப்பனபுரியை நம்முடைய காலத்திலோ, அல்லது அதன் பின் வரும் காலத்திலோ யாராவது இதை மாதிரி உருவாக்க முடியுமா? நானும், நீயும் இதுவரை என்ன செய்திருக்கிறோம்?
போர்க்களத்திலே பல்லாயிரக் கணக்கானோரைக் கொன்று குவித்து இருக்கிறோம்! இரத்த வெள்ளம் ஓடச் செய்திருக்கிறோம்!
உலகில் நம் பெயரை நிலை நிறுத்த வேறு என்ன செய்திருக்கிறோம்? (கரிகாலர்)


நம்மை யார் நினைப்பார்கள்? நாம் தான் யாரையாவது நினைத்துக் கொண்டிருக்க வேண்டும்.


என்று கரிகாலர் கூறியவுடன் பார்த்திபேந்திரனுக்கு ஒன்று தோன்றியது.
கரிகாலரின் மனதில் ஏதோ ஒரு பாரம் அவரை அழுத்திக் கொண்டி-ருக்கிறது. அதை இன்று நாம் அவரிடம் நேரடியாகவே கேட்டுவிட வேண்டியதுதான்.


இளவரசே! தங்கள் மனத்தில் ஏதோ ஒன்று உங்களை வாட்டி வதைக்கிறது. அது என்னது என்பதைச் சிறிது தங்களுடைய நெஞ்சத்தைத் திறந்து காட்டக் கூடாதா?


பார்த்திபா! எனது நெஞ்சத்தைப் பிளந்து காட்டினால் அதற்குள்ளே என்ன இருக்கும்?
யார் இருப்பார் என்று நினைக்கிறாய்?


அதைத்தான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்!


நீ நினைப்பது போல் அதில் என்னைப் பெற்ற தாயும் தந்தையும் இருக்கமாட்டார்கள். என் உயிரினும் இனிய தங்கையும் தம்பியும் இருக்க மாட்டார்கள். என் உயிருக்குயிரான நண்பர்களாகிய நீயும் வந்தியத்தேவனும் கூட இருக்கமாட்டீர்கள். வஞ்சகமே உருவான ஒரு பெண் அதில் இருப்பாள்!
பாவமே உருவான பழுவூர் இளையராணிதான் அதில் இருப்பாள்!


அதைக் கேட்டு பார்த்திபேந்திரன் அதிர்ந்து போனான்.
நாம் நினைத்தது சரியாகப் போயிற்று! இளையராணி நந்தினியின் பெயரைக் கேட்கும்போது எல்லாம் இளவரசரின் முகம் மாறியதற்கான காரணம் இப்போதுதான் எனக்குப் புரிகிறது.


நஞ்சிலும் கொடியவளான நந்தினி என் நெஞ்சுக்குள்ளே இருந்து என்னைப் பாடாய்ப் படுத்துவதை, இன்றுவரை நான் யாரிடமும் சொன்னதில்லை.
அரசே! அதை நான் ஒருவாறு ஊகித்தேன். பழுவூர் இளையராணியின் பேச்சு வரும் போதெல்லாம், தாங்கள் முகம் தாங்க முடியாத வேதனையை வெளியிட்டதை வைத்துத் தெரிந்து கொண்டேன்...
இந்தத் தகுதியில்லாத மோகம் தாங்கள் நெஞ்சில் எப்படி இடம் பெற்றது?


அன்னியப் பெண்களையெல்லாம் அன்னையெனக் கருதும் மரபில் தாங்கள் வந்தவராயிற்றே?
அது எனக்குத் தெரியாது என்றா நினைக்கிறாய்?
தெரிந்திருப்பதனாலேதான் இந்த மனவேதனை! அவள் பழுவேட்டரையரை மணந்த பிறகு என் நெஞ்சில் இடம் பெறவில்லை...
அதற்கு வெகுகாலம் முன்பே என் உள்ளத்தில், அவளுடைய மோக விஷம் ஏறிவிட்டது
என்று கூறுகிறான் கரிகாலன்.


அரசே! நந்தினி பழுவூர் இளையராணி ஆவதற்கு முன்னால் தாங்கள் அவளைச் சந்தித்ததுண்டா? எங்கே! எப்போது?
அது ஒரு பெரிய கதை. இன்றைக்கு அதைக் கேட்க விரும்புகிறாயா?
கட்டாயம் கேட்க விரும்புகிறேன்.
எப்பேர்ப்பட்டவர்களாயினும் ரகசியங்களைத் தங்களுக்குள்ளே வெகுகாலம் பூட்டி வைக்க முடியாது, யாராவது ஒருவரிடம் சொல்லித்தானே ஆக வேண்டும். ஆகையால் தன் நண்பன் பார்த்திபேந்திரனிடம் கூறுகிறார் கரிகாலர்.
பார்த்திபேந்திரா, என்னுடைய பன்னிரண்டாவது வயதில், அவளை நான் முதன் முறையாகச் சந்தித்தேன்!


அன்று பழையாறை அரண்மனையின் பின்னால் உள்ள நீரோடையில், நாங்கள் மூவரும் ஓடம்விட்டு விளையாடிக் கொண்டிருந்தோம்.
அண்ணா! படகை இந்தப் பக்கமாகச் செலுத்துங்கள், நான் அந்த மலரைப் பறிக்க வேண்டும்.
குந்தவை... பார்த்து, ஓடையில் விழுந்து விடாதே!
நான் பறித்துவிட்டேன்.


குந்தவை! நீ அருள்மொழியைக் கவனித்துக் கொள், முன்பு ஒருமுறை பொன்னி நதியில் விழுந்தது போல மீண்டும் விழுந்து விடப் போகிறான்.
நான் அவனை பத்திரமாகப் பார்த்து கொள்கிறேன் அண்ணா.
அண்ணா! நாம் பாட்டியிடம் சென்று, ஓடையில் ஓடம் விட்டதைச் சொல்வோமா?
சரி சொல்வோம்.


ஹே...ஹே...
ஹே...ஹே...
ஹே...ஹே...
சலக்.சலக்..
பழையாறையில், எங்கள் பாட்டி செம்பியன் மாதேவியிடம் நாங்கள் மூவரும் செல்லமாக வளர்ந்தோம்.
நான்தான் முதலில்!
நான்தான் முதலில்!
ஓடம் விட்டதைப் பற்றி, பாட்டி செம்பியன் மாதேவியிடம் சொல்ல மூவரும் ஓடினோம்.


அங்கு அரண்மனையில் பலர் இருந்தார்கள். அனைவரின் பார்வையும் எங்களின் மேலே விழுந்தது.
பாட்டி.....
பாட்டி.....
என் செல்வங்களே! ஓடி வாங்க!
என் செல்லம்!
உம்மாாா...
என் வைரம்! என் மாணிக்கம்! இப்படி அமருங்கள்.


இவ்வளவு நேரம் எங்கே சென்றீர்கள்? ஆடையெல்லாம் நனைந்திருக்கிறதே.
பாட்டி! நாங்கள் மூவரும் நீரோடையில் ஓடம் விட்டு விளையாடினோம்.
பொதுமக்கள்.
இளவரசியைப் பாரேன், எவ்வளவு அழகாக இருக்கிறார்கள்!
கரிகாலரைப் பார்க்கும் போது, ராஜாதித்தரைப் பார்ப்பது போல் அல்லவா இருக்கிறது!
இந்தப் பெண்ணிடம் இருக்கும் ஆபரணம் என்னிடம் இருந்தால் இவளைவிட நான் அழகாக இருப்பேன்!
அந்தக் கூட்டத்தில் ஒரு அர்ச்சகரின் குடும்பமும் வந்திருந்தது, எங்கள் வயதுக்கு இணையான ஒரு பெண்ணும் அவர்களுடன் வந்திருந்தாள். அந்தக் குடும்பம் எங்கள் பாட்டியிடம் ஏதோ முறை-யிட்டு கொண்டிருந்தார்கள்.


அந்தப் பெண் எங்களையே
வைத்த கண் வாங்காமல் பார்
-த்துக் கொண்டிருந்தாள். நான்
அவளைப் பார்த்துச் சிரித்தேன்,
பதிலுக்கு அவளும் சிரித்தாள்.
இவர்தான் இளவரசர்
கரிகாலரோ!
ஆஹா! இந்தப் பெண்ணின்
முகம் எவ்வளவு அழகாக
இருக்கிறது!
குழந்தாய் இங்கே
அருகில் வா!



அப்போது பாட்டி எங்களிடம்,
இந்தப் பெண் சில காலம் இங்குதான் தங்கப் போகிறாள்.
என் செல்வங்களே! உங்களின் விளையாட்டுகளில் இவளையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.
நாங்கள் விளையாட செல்லட்டுமா பாட்டி?
நாங்கள் பாட்டியிடம் விடை பெற்றுக் கொண்டு சென்றோம்.


செல்லும் வழியில் என் சகோதரி,
அண்ணா! அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்தாயா...?
அவள் முகத்தைப் பார்த்தால் என்னால் சிரிக்காமல் இருக்க முடியாதே! என்ன செய்வது?
அவளின் முகம், ஏன் அப்படிக் கோட்டான் முகம் மாதிரி இருக்கிறது? அவளுடன் சேர்ந்து நாம் விளையாட வேண்டுமாம்!
குந்தவைக்கு அவளைப் பிடிக்கவில்லை என்பதை நான் தெரிந்து கொண்டேன். எங்கள் குலத்தில் பிறந்த பெண்களி-லேயே, என் சகோதரி குந்தவைதான் அதிக சௌந்தர்யம் மிக்கவள் என்பது நாடறிந்தது!


பார்த்திபா! அன்றுதான் நான் ஒன்றைத் தெரிந்து கொண்டேன். அதாவது, பெண்கள் பிறக்கும்போதே பொறாமையுடன் பிறக்கிறார் கள் என்பதை! ஆனாலும் என் சகோதரியை நான் எளிதில் விடவில்லை, அவளுக்குக் கோபம் உண்டாக்குவதற்காகவே....
ஏன்? அந்தப் பெண்ணும் அழகாகத்தான் இருக்கிறாள். நீ அவள் கண்ணைப் பார்த்தாயா, எவ்வளவு அழகாக இருந்தது! அவளின் முடி கூட சுருள் சுருளாக அழகாய் இருந்ததே!
எனக்கு ஒன்றும் அவளின் முகம் அழகாகத் தெரியவில்லை...
இப்படி அடிக்கடி நானும் என் தங்கையும் சண்டை பிடிப்போம். அருள்மொழி அப் -போது சிறிய குழந்தை. சண்டையின் காரணத்தை அறியாமல் திகைப்பான்.


பிறகு சில நாளைக்கெல்லாம் பாண்டிய நாட்டு யுத்தத்துக்கு என் தந்தையுடன் நானும் சென்றுவிட்டேன்.
வெற்றிவேல்!
வீர வேல்!
சுந்தரசோழச் சக்கரவர்த்திக்கு வெற்றி உண்டாகட்டும்!
தாக்குங்கள்! வெற்றி நமதே!
வீர பாண்டியன் வாழ்க!
வெற்றி அல்லது வீர மரணம்!
வாழ்க!
வாழ்க!


பாண்டியர்களைத் தாக்குங்கள்! போர்......!! போர்......!!
சோழர்களைத் தாக்குங்கள்! போர்....!! போர்....!!
பாண்டிய சைன்யத்தையும், பாண்டியனுக்கு உதவியாக இலங்கை அரசன் அனுப்பிய சைன்யத்தையும் பல இடங்களில் நாங்கள் முறியடித்தோம்.


இளவரசர் கரிகாலர் நம்மையெல்லாம் பின்னுக்குத்தள்ளி எவ்வளவு துணிச்சலாக முன்னேறிச் செல்கிறார்!!
இராஜாதித்தருக்கு இணையாக ஆதித்த கரிகாலரும் வரலாற்றில் பெயர் எடுப்பார் என்றல்லவா தோன்றுகிறது!


இராஜாதித்தருக்கு இணை ஆதித்த கரிகாலர்தான்!
ஸ்விங்ங்
இவன் என்ன அபிமன்யுவின் மறுபிறவியா?
இந்தச் சிறுவனை நம்மால் நெருங்கக் கூட முடியவில்லையே!


டிங்...
டாங்...
டிங்
டிங்
டிங்...
டாங்...


ஸ்விங் ஸ்விங்


கடைசியில், வீர பாண்டியன் ஓடி ஒளிந்து கொண்டான். பாண்டிய சைன்ய-
த்திற்கு உதவியாக வந்த இலங்கை வீரர்கள் பின் வாங்கி ஓடினார்கள்.
ஸ்விங்


அவர்களைத் துரத்திக் கொண்டு நாங்கள் சேதுக்கரை வரையில் சென்றோம்,
புறமுதுகிட்டு ஓடாதீர்கள்!
எங்களுடன் போர் செய்யுங்கள்!
எங்கு சென்றாலும் உங்களை நாங்கள் விட மாட்டோம்!
இறந்தவர்கள் போக மற்றவர்கள் கப்பல் ஏறித் தப்பித்துச் சென்றார்கள்.


வெற்றி....! வெற்றி!!
சுந்தரசோழச் சக்கரவர்த்திக்கு வெற்றி....!


அடிக்கடி பாண்டியர்களுக்கு உதவியாகப் படைகள் அனுப்பித் தொல்லை கொடுத்த இலங்கை மன்னர்களுக்கு, என் தந்தை புத்தி கற்பிக்க விரும்பினார்.


பாண்டியனை விட, இலங்கை மன்னன் மகிந்தன்தான் நமக்கு முதல் எதிரி.
முதலில் நாம் அவனை ஒழித்தாக வேண்டும்.


சிறிய வேளாளரின் தலைமையில் ஒரு பெரிய படையை இலங்கைக்கு அனுப்புவதென்று தீர்மானித்தோம்.
வெற்றியுடன் திரும்பி வாருங்கள்.


சோழர்படை கப்பலில் இலங்கைக்குப் புறப்பட்டது.


கப்பல்களில் படைகளை ஏற்றி அனுப்பி விட்டு, மீண்டும் நான் பழையாறைக்கு வந்து சேர்வதற்குள் இரண்டு வருஷத்துக்கு மேலாகி விட்டது.
சுந்தரசோழச் சக்கரவர்த்தி வாழ்க!
இலங்கைப் படையை புறமுதுகிட்டு ஓடச் செய்த இளவரசர் கரிகாலர் வாழ்க!
வாழ்க!
வாழ்க!
வாழ்க!
வாழ்க!


வாழ்க!
வாழ்க!
மூவுலகையும் ஆளும் சக்கரவர்த்தி வாழ்க!
வாழ்க!
வாழ்க!
நான் மீண்டும் பழையாறைக்கு வருவதற்குள் நந்தினி வளர்ந்திருந்தாள்.


யாரோ நம்மை மலரினால் அடிப்பது போல் அல்லவா இருக்கிறது!
!!?
ஓஹோ! நீதானா?
!!?
மணந்தால் இப்படிப்பட்ட மாவீரனைத்தான் மணக்க வேண்டும்!
நந்தினி வளர்ந்திருந்தது மட்டுமல்ல, ஆடை ஆபரணங்-களினாலும் ஜொலித்துக் கொண்டிருந்தாள். அது என் சகோதரியின் கைங்கரியம் என்று நான் அறிந்தேன்.


இங்கேதான் விளையாடிக் கொண்டிருக்கிறீர்களா! நல்லதாய் போயிற்று!
என்னையும் உங்கள் விளையாட்டில் சேர்த்துக் கொள்வீர்களா?
இதுவெல்லாம் ஒரு விளையாட்டாகுமா! தங்களைப் போன்ற வீரர்களுக்கு வாளெடுத்துப் போர்க்களத்தில் எதிரிகளின் தலையைப் பந்தாடுவதுதானே விளையாட்டு!
இவள் வாய் திறந்து ஒரு வார்த்தை கூட நம்மிடம் பேசமாட்டேன் என்கிறாளே!
முன் போலில்லாமல் நந்தினி இப்போது என்னைப் பார்க்கவும் பேசவும் கூச்சப் பட்டாள்.


இவர் நம்மைச் சந்திக்கத்தான் வந்திருக்கிறாரா....? அல்லது தம் ஆசைத் தங்கையைச் சந்திக்க வந்திருக்கிறாரா?
இன்னும் நம்மை இவர் மறந்துவிட வில்லை.
என்னால் இவரைப் பார்த்து ஒரு வார்த்தை கூட பேச முடியவில்லையே! எனக்கு ஏன் இந்த வெட்கம்!
அவள் கூச்சத்தையும், வெட்கத்தையும் போக்குவதற்கு நான் என்னவெல்லாமோ செய்தேன்.
அன்பே...
வேறு எதிலும் காணாத இன்பம் அவளுடன் பேசிப் பழகுவதில் நான் அடைந்தேன்.


அது என் வாழ்வின் வசந்த காலம்!
இப்பவெல்லாம் நீ அதிகம் மாறிவிட்டாய்
அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை, நானோ அர்ச்சகர் வீட்டுப் பெண், தாங்களோ சோழப் பேரரசின் வருங்காலச் சக்கரவர்த்தி...
இங்கு ஏதோ குரல் கேட்கிறதே!
அண்ணன் கரிகாலர் குரல் அல்லவா இது! உடன் ஒரு பெண்ணின் குரல்!! யார் அந்தப் பெண்?
இது நந்தினியின் குரல்!
ஆனால், நந்தினியுடன் நான் பழகுவது என்னைச் சேர்ந்தவர்கள் யாருக்கும் பிடிக்கவில்லை என்பதை விரைவிலேயே கண்டுகொண்டேன்.


ஒருநாள் எங்கள் பாட்டியார் என்னை அழைத்து,
நந்தினி அர்ச்சகர் வீட்டுப் பெண். நீயோ சக்கரவர்த்தியின் குமாரன். உங்கள் இருவருக்கும் இப்போது பிராயமும் ஆகி விட்டது.
ஆகையால் நந்தினியுடன் நீ பழகுவது உசிதமல்ல
என்று புத்திமதி கூறினார்.
அதுவரை பாட்டியைத் தெய்வமென மதித்து வந்த நான், அவருடைய புத்திமதியை மீறி நந்தினியைத் தேடிப் பிடித்துப் பேசிப் பழகினேன். அதுவும் நெடுங்காலம் நிலைத்திருக்கவில்லை.
திடீரென்று ஒருநாள் நந்தினியும் அவளுடைய பெற்றோரும் பாண்டிய நாட்டில் உள்ள அவர்களுடைய ஊருக்குச் சென்று விட்டார்கள் என்று தெரிந்தது.
அதைக் கேட்ட எனக்குத் துக்கம் பொங்கி வந்தது...


என்னுடைய கோபத்தையெல்லாம் என் சகோதரியின் பேரில் காட்டினேன்.
டடக்க்
அண்ணா!
ஏன் இப்படிச் செய்கிறாய்?


நீ செய்தது மட்டும் சரியா?
அருள்மொழி ஒன்றும் புரியாமல் இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருப்பான்.
பிறகு சில நாளைக்கெல்லாம், காஞ்சியிலிருக்கும் என் பாட்டன் மலையமானிடமிருந்து அவசர ஓலை ஒன்று வந்தது.
இராஷ்டிரகூடர் படைகள் காஞ்சியை ஆக்கிரமித்து விட்டன. சோழர் படை உடனே காஞ்சிக்குப் புறப்பட்டு வர வேண்டும்!
திருக்கோவலூர் மலையமான்


எனது பாட்டன் மலையமானின் அவசர அழைப்பை ஏற்றுச் சில நாளைக் கெல்லாம் நான் இங்கு வந்தேன்.


திருமுனைப்பாடியையும், தொண்டை மண்டலத்தையும் ஆக்கிரமித்திருந்த இராஷ்டிரகூடப் படைகளை விரட்டுவதற்காகச் சோழ சைன்யத்துடன் நானும் புறப்பட்டு வந்தேன்.
அப்போதுதான் நீயும் நானும் சந்தித்தோம். இணைபிரியாச் சிநேகிதர்களானோம்.


சோழர் படை
இராஷ்டிரகூடப் படை
போர்...! போர்...!
போர்...! போர்...!
என் பாட்டனார் மலையமான் உதவியுடன் நீயும் நானும் இராஷ்டிரகூடப் படைகளைப் பாலாற்றுக்கு வடக்கே துரத்தி அடித்துக் காஞ்சி நகரையும் கைப்பற்றினோம்.
வெற்றி...! வெற்றி...!
வெற்றி...! வெற்றி...!
வெற்றி...! வெற்றி...!
வெற்றி...! வெற்றி...!


கரிகாலா! உனது பாட்டன் ராஜாதித்தரின் லட்சியத்தை நீ நிறைவேற்றிவிட்டாய்.
பார்த்திபா! உன் துணையின்றி இது சாத்தியமாகியிருக்காது.
அச்சமயத்தில் இலங்கையிலிருந்து கெட்ட செய்தி வந்தது, நமது சோழர் படை அங்கே முறியடிக்கப்பட்டதென்று.
கொடும்பாளூர் சிறிய வேளார் ஈழப் போரில் செயற்கரிய காரியம் செய்து, பின் வஞ்சகன் மகிந்தனின் சூழ்ச்சி -யினால் வீர மரணம் அடைந்தார்.
இதையெல்லாம் கேட்டபோது, உனக்கும் எனக்கும் எப்படிப்பட்ட வீராவேசம் உண்டாயிற்று என்பது ஞாபகம் இருக்கிறதா?


இலங்கையில் நம் படை தோற்றுப் பின்வாங்கிய செய்தியறிந்து, அது வரையில் பாலை வனத்தில் ஒளிந்திருந்த வீர பாண்டியன், மீண்டும் சைன்யத்தை திரட்டிக்கொண்டு வந்து மதுரையைக் கைப்பற்றி மீன் கொடியை ஏற்றினான்.
உடனே, நாம் பழையாறை விரைந்தோம்.
பாண்டிய சைன்யத்தை முறியடித்து, மதுரையை மீண்டும் கைப்பற்றி,
வீர பாண்டியனுடைய தலையையும் கொணராமல் நான் சோழ நாட்டுக்குத் திரும்புவதில்லை!
என்று என் தந்தை முன்னால் சபதம் செய்தேன்.


சக்கரவர்த்தி நம்மைப் பாண்டிய நாட்டுப் போர்க்களத்திற்கு அனுப்பினார்.
ஏற்கனவே படைத்தலைமை வகித்து வந்த கொடும்பாளூர் பூதிவிக்கிரம
கேசரியார் தலைமையில் நாம் போர் செய்ய வேண்டும் என்று பணித்தார்.
நம்முடைய போர் ஆவேசத்தைக் கண்டு
சேனாதிபதி பூதிவிக்கிரமகேசரியார்
யுத்தம் நடத்தும் பொறுப்பை நம்மிடமே
ஒப்புவித்து விட்டார்.
நாம் பாண்டிய சைன்யத்தை முறியடித்தோம்.
ஆனால் வீர பாண்டியனைச் சுற்றிலும்
ஆபத்துதவிகள் மதில் சுவரைப்
போல் பாதுகாத்து நின்றார்கள்.


பாண்டிய நாட்டின் பெரும்படையை அழித்தது பெரும் காரியம் அல்ல! இந்தப் பாண்டிய நாட்டின் ஆபத்துதவிகளை முறியடித்தால்தான் வீர பாண்டியனை நெருங்க முடியும்.
சோழ நாட்டு வேளக்காரப் படையைக் காட்டிலும் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகள் ஒரு படி மேலான வீரர்கள்.
முதலில் அவர்களைச் சுற்றி வளைப்போம்.
அதன்பின் பாற்கடலைக் கடைவது போல் இப்படியும், அப்படியுமாக ஆட்டம் காட்டி, அவர்களைக் களைப்படையச் செய்து அவர்களின் தடுப்புச் சுவரை உடைத்து வீர பாண்டினைப் பிடிப்போம்!



விடாதீர்கள் அவர்களை!
அடேய் கரிகாலா! இன்று உன் மரணம் நிச்சயம்!
பார்த்திபா! நீ அவர்களை இடது பக்கமாகச் சுற்றி வளை. நான் வலது பக்கமாகச் சுற்றி வளைக்கிறேன்.
அவனைச் சுற்றி வளையுங்கள்! இன்று அவன் தப்பவே கூடாது!
தாக்துங்கள் அந்தக் கரிகாலனை!


அடேய் பாண்டியா...
உனக்கு யமன் நான்தான்!
ஸ்ங்ங்
க்ரஷ்ஷ்
ஸ்ங்ங்
ஆ ஆ ஆ...
ஆ ஆ ஆ...


அப்படிப்பட்ட ஆபத்துதவிகளை ஒருவர் மிச்சமின்றிக் கொன்று குவித்தோம்.


வீர பாண்டியனின் பாதுகாப்பு வளையத்தை உடைத்து நாம் உள்ளே சென்றோம்.
ஸ்ங்ங்


ஆனால் அந்த வீரர்களின் நடுவில் வீர பாண்டியனை எங்குத் தேடியும் காணவில்லை.
எங்கே அந்த வீர பாண்டியன்?


வீர பாண்டியன் போர்க்களத்திலிருந்து தப்பி ஓடி ஒளிந்து கொள்ளுவதில் சமர்த்தன் அல்லவா?


நண்பா... அந்த யுத்தத்தில் நீயும் நானும் செயற்கரிய வீரச் செயல்களைப் புரிந்தோம் என்று பெருமை கொள்வதில் யாதொரு தவறும் இல்லை!
ஓடி ஒளிந்து கொண்ட வீர பாண்டியனை நாம் விடுவதாக இல்லை. ஆளுக்கு ஒரு பக்கம் அவனைத் தேடினோம்.


நான் வைகை நதிப்பக்கம் அவளைத் தேடிச் சென்றேன்.
அப்போது அங்கு கண்ட காட்சி எனக்கு அளவில்லாத ஆனந்தத்தைக் கொடுத்தது. அவள் வைகை நதியிலிருந்து ஒரு பானையில் நீர் எடுத்துச் சென்றாள்!


அவள் காவி உடை தரித்து ஆண்டாளைப் போல் தன்னை அலங்கரித்திருந்தாள்.
நந்தினி! இது என்ன கோலம்?
நான் கண்ணனிடம் தீவிர பக்தி கொண்டு, கண்ணனை மணக்கப் போகிறேன்.
நந்தினி! இது என்ன பைத்தியக்காரத்தனம்?
நான் கேட்டதற்கு ஏந்தப் பதிலும் கூறாமல் அவள் அங்கிருந்து செல்ல,


அதற்குள் நீங்கள் என்னை தேடிக் கொண்டு வைகைக் கரைக்கு வந்து விட்டீர்கள்.
உங்கள் அனைவருக்கும் நான் ஒரு கட்டளையிடுகிறேன்.
இங்கிருக்கும் பெருமாள் கோயிலு-க்கும், பக்தர்களுக்கும் யாதொரு இடையூறும் இருக்கக் கூடாது! ஆகையால் தாங்கள் யாரும் இந்தப் பகுதியில் பிரவேசிக்கக் கூடாது!
என்று கட்டளையிட்டேன். அப்போதே நானும் உங்களுடன் பாசறைக்கு வந்துவிட்டேன்.


என் மனம் அவளையே எண்ணிக் கொண்டிருந்தது. எனக்கு உறக்கம் வரவில்லை. அதனால் அன்றிரவே அவளைத் தேடி மீண்டும் வைகைக் கரைக்கு சென்றேன்.
அப்போது எனக்கு ஆச்சரியம் தரும்படியான ஒரு விஷயம் தென்பட்டது. நிலா வெளிச்சத்தில் மணல்வெளியில் நன்கு பதிந்திருந்த குதிரையின் காலடி! கூடவே மணல்-பரப்பில் சிந்தியிருந்த இரத்தம்! அது மேலும் எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.
குதிரையின் காலடியும், ரத்தமும் இங்கு எப்படி வந்தன!!!
என்று எண்ணியபடியே அந்த நந்தவனத்தினுள் சென்றேன். அங்கிருக்கும் ஒரு வீட்டின் பக்கத்-தில் குதிரை ஒன்று கட்டப்பட்டிருந்தது. அந்த வீட்டிலிருந்து மெல்லிய பேச்சுக்குரலும் கேட்டது அதைக் கேட்டதும் என் சந்தேகம் வலுத்தது.


அது யாருடைய குரல் என்று சன்னல் வழியாக எட்டிப்பார்த்தேன்.
அந்தக் காட்சியைக் கண்டதும் எனக்கு கோபம் தலைக்கேறியது.
கதவை உடைத்து கொண்டு உள்ளே சென்றேன்.
ஐயா! நீங்கள் என் பேரில் ஒருநாள் வைத்திருந்த அன்பின் மேல் ஆணையிட்டு வேண்டுகிறேன்! இவரை ஒன்றும் செய்யாதீர்கள்!
யார் இவன்?
என்னை மணந்து கொள்ளச் சம்மதித்திருக்கும் தயாளன்.


பருகாயம் பட்டுக் கிடக்கும் இவரை உங்கள் கையால் கொல்ல வேண்டாம்.
இளவரசருக்கு என்ன ஆயிற்று? உள் காயம் ஏற்பட்டிருக்குமோ?
என்னை எப்படிப் பழி வாங்கிவிட்டான்! பாதகன்!
என் இராஜ்யத்தையே கைப்பற்றி இருந்தாலும் பாதகம் இல்லை, என் உள்ளத்தில் குடி கொண்டி -ருந்த பெண்ணரசியை அல்லவா அபகரித்துவிட்டான்! அவனிடம் எப்படி நான் இரக்கம் காட்ட முடியும்...?


எப்படிப் பழி வாங்கி விட்டான் பாதகன்!
என் இராஜ்யத்தையே கைப்பற்றி இருந்தாலும் பாதகம் இல்லை, என் உள்ளத்தில் குடி கொண்டி-ருந்த பெண்ணரசியை அல்லவா அபகரித்துவிட்டான்! அவனிடம் எப்படி என்னால் இரக்கம் காட்ட முடியும்? முடியாது! முடியவே முடியாது!
உடம்பில் ஒன்றும் காயமில்லை, உள்ளத்தில்தான் காயம். வீர பாண்டியனுக்காக, அவள் கை கூப்பி என்னிடம் உயிர்ப் பிச்சை கேட்ட காட்சி, என் மனத்தை விட்டு அகலவில்லை.


அய்யோ...! அவள் கேட்டதைக் கொடுக்காமல் போய்விட்டேனே?
என் உயிரைக் கொடுப்பதின் மூலம் வீர பாண்டியனை உயிர்ப்பித்து அவளிடம் சேர்க்க முடியுமானால்... அப்படியே நான் செய்திருப்பேன்!


இளவரசே! ஒரு பெண்ணின் பேரில் ஏற்பட்ட காதலினால் இப்படிப்பட்ட துன்பம் உண்டாகக் கூடும் என்று நான் கனவிலும் கருதியதில்லை!
அதன் பிறகு நந்தினியை மீண்டும் எப்போது பார்த்தீர்கள்? பழுவூர் இளையராணி ஆன பிறகா, அல்லது அதற்கு முன்பேவா?
அதற்கு முன்பே அவளை நான் பார்த்திருந்தால், அவள் பழுவூர் ராணி ஆகியிருக்கமாட்டாள்.


உண்மையில் ஆதிகாலம் தொட்டு மனிதர்களுக்கு ஒரு விசித்திரமான மனோபாவம் இருந்து வருகிறது. சோகமான கதைகளை கேட்பதில் ஒரு சிலருக்கு இன்பம். இன்னும் அருத்தவர்களின் சோகக் கதைகளை கேட்பதில் அதைவிட இன்பம். அது தொன்று தொட்டு இன்று தொலைகாட்சி தொடர்களாக மக்கள் பார்ப்பதிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். அதுபோல் பார்த்திபனும் கரிகாலனின் கதை கேட்பதில் வியப்பொன்றுமில்லை.
வீரபாண்டியனுக்காக உருகியவள் எப்படி கிழவர் பழுவேட்டரையரை மணந்தாள் என்று தாங்கள் அவளைக் கேட்கவே இல்லையா?
வீரபாண்டியனை கொன்ற இரவில் வெற்றி கோலாகலங்களுக்குப் பிறகு நீங்கள் எல்லோரும் பாசறையில் படுத்து தூங்கினீர்கள்.


எனக்கோ தூக்கம் வரவில்லை, அவளிடம் மன்னிப்பு கேட்க வேண்டும், அவளை மீண்டும் பார்க்க வேண்டும் என்று நள்ளிரவில் உங்களுக்கெல்லாம் தெரியாமல் பாசறையிலிருந்து புறப்பட்டு அவள் இருக்கும் இடம் தேடிச் சென்றேன்.
வைகை நதிக்கரையில் அமைந்திருக்கும் அவள் வீட்டை அடைந்தேன். அப்போது அங்கே இருந்த குடிசைகள் எல்லாம் எரிந்துச் சாம்பலாகிக் கிடந்தன.


அங்கே ஒரு வயோதிகரும், வயோதிக ஸ்திரியும் இருந்தார்கள். அவர்களுக்கு என்னை கண்டதும் அவர்களின் துக்கம் அதிகமாயிற்று.
என்ன நடந்தது?
நாங்கள் வெளியூருக்குச் சென்று இப்போதுதான் திரும்பினோம்.
வழியில் யாரோ சிலர் பலவந்தமாக ஒரு பெண்ணை எரியும் சிதையில் போடப் பார்த்தார்கள். போர்க்களங்களில் இவ்வாறு நடப்பது சகஜம் என்று நாங்கள் பயந்து வந்துவிட்டோம். இங்கு வந்து பார்த்தால் நந்தினியை காணவில்லை...
எங்கள் வீடு எல்லாம் எரிந்துச் சாம்பலாகிவிட்டன...
என்று கதறினார்கள்.
அவள் எரிந்த சிதையில் விழுந்து, நீங்களும் எரிந்து செத்துப்போங்கள்!
என்று அவளின் பெற்றோரை சபித்துவிட்டு வந்தேன்.



அதன்பின் மீண்டும் தாங்கள் நந்தினியை சந்திக்கவே இல்லையா?
சந்தித்தேன். எனது யுவராஜ பட்டாபிஷேகம் நடந்த அன்று.
ஆதித்த கரிகாலர் வாழ்க!
இளவரசர் கரிகாலர் வாழ்க!
வீர பாண்டியன் தலை கொண்ட வீராதி வீரர் வாழ்க!
அன்று நடந்த கோலாகலத்தில் நான் நந்தினியை அடியோடு மறந்திருந்தேன்.


பட்டாபிஷேகம் நடந்து முடிந்த சிறிது நேரத்துக்கெல்லாம், நான் அவளை என்றும் மறக்க முடியாத சம்பவம் ஒன்று நடந்தது. சோழநாட்டின் ராணிமார்களிடம் ஆசிபெற வேண்டும் என்று என்னை அந்தப்புரத்துக்கு அழைத்துச் சென்றார்கள்.


அந்த ராணிமார்களின் கூட்டத்தில் நந்தினியும் ஜொலித்தாள். எனது பட்டாபிஷேக வைபவத்தோடு சேர்த்து அவளை எனது வெற்றியின் பரிசாக கொடுக்க போகிறார் என் தந்தை என்று எண்ணினேன்.
அப்போது திடீரென்று என் தந்தை என்ன காரணத்தினாலோ சுயநினைவிழந்து மயங்கி கீழே விழுந்தார்.


பிறகு நான் குந்தவையை தனிமையில் சந்தித்து,
நந்தினி எப்போது இங்கு வந்தாள்?
அண்ணா அவள் பெரிய பழுவேட்டரையரின் மனைவி. இப்போது அவள் பழுவூர் இளையராணி!
நண்பா! போர்க்களங்களில் எத்தனையோ முறை நான் காயப்பட்டதுண்டு... ஆனால், நந்தினி இப்போது பழுவூர் இளையராணி என்று குந்தவை கூறியபோது என் நெஞ்சில் ஏற்பட்ட காயம் இன்றும் ஆறவில்லை...


சில நாட்களுக்குப் பிறகு அவளே என்னை கூப்பிட்டு ஓலை அனுப்பினாள். போகலாமா? வேண்டாமா? என்று என் மனதில் ஒரு போராட்டம் எழுந்தது.
அந்தப்புரத்தில் என் தந்தை அன்று மூர்ச்சை அடைந்து விழுந்ததற்கும், அங்கே நந்தினியை தற்செயலாக கண்டதற்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்குமோ என்று எண்ணினேன். அதைப் பற்றி அறிந்து கொள்ளவும், அதே சமயத்தில் அவளைப் பார்க்கவும் மனம் எண்ணியது. உடனே புறப்பட்டேன்....


பெரிய பழுவேட்டரையரும் ஊரில் இல்லை! அவருடைய அரண்மனையில் என்னை தடுப்பாரும் இல்லை! இளவரசுப் பட்டம் கட்டிக்கொண்ட ராஜகுமாரன், பழுவூர் அரண்மனை ராணிமார்களிடம் ஆசி பெறுவதற்கு வருவதாக நினைத்தார்கள்.


பட்டத்து இளவரசர் ஆதித்த கரிகாலர் வாழ்க!!
வீர பாண்டியன் தலை கொண்ட ஆதித்த கரிகாலர் வாழ்க!!


அரண்மனையின் உள்ளே செல்வதற்கு என் கால்கள் நடுங்கின, நெஞ்சு படபடத்தது. ஆனால், அவள் எந்தவொரு பதட்டமும் இல்லாமல் இருந்தாள். அவளின் குரல் கேட்டு என் மனம் பதை பதைத்தது.
வாருங்கள்!


சோழ நாட்டின் பட்டத்து இளவரசருக்கு எனது வாழ்த்துகள்.
எனக்கு ஏது இனி வாழ்க்கை!
ஏன் இல்லை?
ஏன் என்றா கேட்கிறாய்? நீதான் இப்படி அநியாயம் செய்துவிட்டாயே?
தங்களுக்கு இந்த சோழ நாடுதான் முக்கியம். அதற்காக அல்லவா அனைத்தையும் செய்தீர்கள்! எனது காதலையும் கொன்றீர்கள்...


பிறகு என்னை காதலித்தவரை என் கண் முன்னே கொன்றீர்கள். என்னையும் கொன்றொழித்தால் அன்றி தாங்கள் மனம் திருப்தி அடையாது போலிருக்கிறது...
என்று கூறி, தன் இடையிலிருந்த குறுவாளை எடுத்து கரிகாலனிடம் நீட்டி,
இந்த குறுவாளினால் என்னையும் குத்திக் கொன்று, தாங்கள் விருப்பத்தை பூர்த்தி செய்து கொள்ளுங்கள் !
நான் ஏன் உன்னைக் கொல்லப்போகிறேன்?


நீ அல்லவா என்னை உயிரோடு வதைத்துக் கொண்டிருக்கிறாய்!
இன்னமும் கூட மோசம் ஒன்றும் நேர்ந்துவிடவில்லை. நீ ஒரு வார்த்தை சொல்லு! இந்த கிழவனை விட்டுவிட்டு வந்து விடுவதாக...
உனக்காக நான் இந்த ராஜ்யத்தையே விட்டு வந்து விடுகிறேன்.
என்று கரிகாலன் கூறியவுடன், அவனை ஒரு கேவலமான பார்வை பார்க்கிறாள் நந்தினி.
இருவரும் கப்பல் ஏறி கடல் கடந்து தூர தேசத்துக்கு போய்விடுவோம்.


கரிகாலன் கூறியதை கேட்ட நந்தினி சிரிக்கிறாள் பயங்கரமாக!
ஹாஹா...! ஹாஹா...!!
கடல் கடந்து தூர தேசத்துக்கு சென்று நாம் என்ன செய்வது?
விறகு வெட்டி பிழைக்கவா? அல்லது வாழைத் தோட்டம் போட்டுப் பிழைக்கவா? ம்.....
அதெல்லாம் உனக்கு பிடிக்காதுதான்! அர்ச்சகர் வீட்டில் வளர்ந்தவள் பழுவூர் ராணி ஆகிவிட்டாய் அல்லவா?


நான் இதோடு திருப்தியடைவதாக எண்ணம் இல்லை...
சோழ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்-தில் சக்கரவர்த்தினியாக இருக்க விரும்புகிறேன்.
தங்களுக்கு விருப்பம் இருந்தால் சொல்லுங்கள், பழுவேட்டரையர்கள் இருவரையும் கொன்றுவிட்டு சுந்தர சோழரைச் சிறையில் அடைத்துவிட்டு தாங்கள் சக்கரவர்த்தியாகி என்னை தங்கள் பட்டமகிஷியாக்கிக் கொள்வதாயிருந்தால் சொல்லுங்கள்.
ஐயோ! என்ன பயங்கரமான வார்த்தைகளை சொல்கிறாய்?


காயமடைந்து கிடந்த பாண்டியனை எனது கண்முன்னே கொன்றது பயங்கரமான காரியமில்லையா?
அடிப்பாவி! சண்டாளி உன் முகத்தில் விழி-ப்பதே பாவம்!
என்று கூறிவிட்டு எனது கோபத்தை எல்லாம் அங்கிருந்த பொருட்களின் மீது காட்டிவிட்டு வந்தேன்.


அப்போதும் அவள் என்னை விடவில்லை....
இளவரசே..!
எப்போதாவது தங்களுடைய மனதை மாற்றிக் கொண்டால், என்னிடம் திரும்பி வாருங்கள்... என்னை சக்கரவர்த்தினியாக்கிக் கொள்ள தங்கள் மனம் இடம் கொடுக்கும் பொழுது!
என்று கூறிவிட்டு என்னை வார்த்தைகளினால் சித்திரவதை செய்தாள்.


இதற்குமேல் நாம் இங்கிருந்தால், இவளுடைய விருப்பப்படி நம்மை நடக்கும்படி செய்துவிடுவாள். இனியும் இவளை சந்திக்காமல் இருப்பதுதான் நமக்கும், சோழ குலத்திற்கும் நல்லது!

இதுவரை கரிகாலனின் கதையை பார்த்திபனோடு சேர்ந்து நாம் கேட்டோம். இப்போது மலையமானோடு சேர்ந்து அரவான் களப்பலி கூத்து பார்ப்போம்.

தமிழ் நாட்டில் பௌத்த, சமண சமயப் பிரச்சாரத்தினால் மக்கள் சாதுக்களாகப் போயிருந்த காலத்தில் மீண்டும் தமிழ் நாட்டில் வீர உணர்ச்சி பொங்க வேண்டும் என்பதற்காக, காஞ்சியை ஆண்ட மகேந்திர பல்லவர் நாடெங்கும் மண்டபங்களை ஏற்படுத்தி அதில் பாரதக் கதைகளை சொல்ல ஏற்பாடு செய்தார். அன்று தொட்டு இன்றும் தொண்டை மண்டல மக்கள் மகாபாரதக் கதையை, கதையாகவும், கூத்தாகவும் நடத்தி வருகிறார்கள். பாரதக் கதையில் வரும் அரவான், அர்ஜுனனுக்கும், நாக இளவரசி உலூப்பிக்கும் பிறந்தவன். தான் சார்ந்த அணி வெற்றிபெற வேண்டும் என்பதற்காகத் தானே முன்வந்து தன்னை பலியாக்கிக் கொள்கிறான். அக்காலத்தில் தமது வீரர்களின் அச்சத்தைப் போக்க போர் துவங்கும் முன்னே ஒரு வீரன், தானே முன்வந்து தன்னை பலி கொடுத்துக் கொள்ளும்படி அக்கால அரசர்கள் ஏற்பாடு செய்து வைப்பார்கள். அவ்வாறு பலியாகும் அந்த வீரனுக்கு அந்நாட்டின் அரசன் அவன் குடும்பத்துக்கு வேண்டிய நீர், நிலம், சொத்துபத்துக்களெல்லாம் எழுதி வைப்பான்.




தபசுமரம்: அர்ஜுனன் தபசு என்ற கூத்து நடைபெறும் அன்று அர்ஜுனன் கதாபாத்திரம் ஒவ்வொரு படிக்கும் ஒரு பாட்டு பாடி, தபசுமரத்தில் ஏறி உச்சிக்கு வந்து ஒற்றைகாலில் நின்று சிவனை குறித்துப் பாடல் பாடி இறுதியில் அங்கிருந்து எலுமிச்சம் பழத்தை வீசுவார். அதை குழந்தை பாக்கியம் இல்லாத பெண்கள் சேலை முந்தானையில் பிடித்துக் கொள்வது வழக்கம்.


கிருஷ்ணன் - சகாதேவன் மேடையில் தோன்றியிருக்கிறார்கள்.
கிருஷ்ணா! இந்த பாரதப் போரில் நாங்கள் வெற்றி அடைய வேண்டும். அதற்கு நீதான் துணை புரிய வேண்டும்.
சகாதேவா! அனைத்து சாஸ்திரங்களையும் அறிந்தவன் நீ. நீயே இப்படி கேட்டால் எப்படி? போர் துவங்கும் முன்பே உங்களுக்குத்தான் வெற்றி வேண்டும் என்று கேட்கிறாயே...! தியாகத்தை செய்யாமல் போரில் வெற்றி என்பதை அடைய முடியாது என்பது உனக்கு தெரியாதா என்ன?
கிருஷ்ணா, நீ கூறுவது ஒன்றும் எனக்கு புரியவில்லை...! என்ன தியாகம் செய்ய வேண்டும்?


போர் துவங்கும் முன், தங்களில் துணிவுமிக்க வீரன் ஒருவன், தானே முன்வந்து காளி தேவிக்கு பலி கொடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி செய்தால் அவர்களுக்கு வெற்றி நிச்சயம். அப்படி பலி கொடுப்பவனுக்கு 32 லட்சணம் பொருந்தியிருக்க வேண்டும்.


ஆ...! கிருஷ்ணா! இது என்ன விளையாட்டு? எங்களில் ஒருவர் உயிர் பிரிந்தாலும் நாங்கள் அனைவருமே உயிரை விட்டுவிடுவோம் என்ற விரதத்தை மேற்கொண்டிருக்கிறோம் என்பது உனக்கு தெரிந்ததுதானே! அதை அறிந்த நீயே இப்படி கூறினால் எப்படி? உன் மாய வித்தையை எங்களிடமும் காட்ட வேண்டுமா? எங்களில் அர்ஜுனன் ஒருவனே 32 லட்சணம் பொருந்தியவன்.


சகாதேவன் கூறியதை கேட்ட கட்டியக்காரன்,
மக்களே! கேட்டீங்களா இந்த கதைய? எதிரிப்படை அழிய வேண்டுமாம், ஆனால் இவர்களில் யாரும் சாகக் கூடாதாம்! இது என்ன நியாயம்?


ஹா..ஹா..ஹா..
ஹா..ஹா..ஹா..



தித்தை.. தித்தை.. தாம்தோம்!
ஜிங்
ச்சக்
தத்தோம்.. தரிகிடதோம்... தத்தோம்.. தத்தோம்!
ஜல்
ஜல்
என்று அடவுபோட்டு வந்தான் அரவான்.
தந்தையே! நான் ஒருவன் இருக்கும் பொழுது தாங்களுக்கு என்ன கவலை? என் தந்தையைப் போல் நானும் 32 லட்சணம் பொருந்தியவன். முதலாவதாக என்னை பலிகொடுங்கள்!
ஆனால் ஒரு நிபந்தனை...
மலையமான் அரவான் களப்பலி கூத்தை பார்த்து விட்டு வரட்டும்... நாம் கரிகாலனின் கதையை பார்ப்போம்.


ஆதித்த கரிகாலனின் காதல் கதையை கேட்ட பார்த்திபேந்திரன்,
அரசே! இப்போதுதான் எனக்கு எல்லாம் தெளிவாக புரிகிறது...., தாங்கள் ஏன் தலைநகருக்கு செல்வதில்லை என்பதும், வந்தியத்தேவனிடம் எதற்காக ஓலையை கொடுத்து அனுப்பினீர்கள் என்பதும்.
ஆனால், ஒரு சாம்ராஜ்யத்திற்கே சக்கரவர்த்தியாகப் போகும் தாங்கள், கேவலம் ஒரு பெண்ணின் மீது கொண்ட ஆசையினால் இவ்வளவு பெரிய துயரத்தை மனதில் வைத்திருப்பீர்கள் என்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை!
சக்கரவர்த்தியாகவே இருந்தால் என்ன? யாராக இருந்தாலும் என்ன? ஒரு பெண்ணிடம் காதல் வயப்பட்டு விட்டால்...
பார்த்திபா, இதெல்லாம் உனக்கு சொன்னால் புரியாது.


இல்லை அரசே! நான் ஒருபோதும் தங்களை போல் வஞ்சிக்கப்பட்டிருக்கமாட்டேன். மாறாக, வீரபாண்டியனின் தலையை கொய்த அன்றே அவளையும் கொன்றிருப்பேன். அல்லது அவளை சிறைபிடித்து என் அந்தப்புரத்தில் எனக்கு சேவகம் செய்ய வைத்திருப்பேன்!
ஒவ்வொரு கலைநிகழ்ச்சியும் முடியும் தருவாயில் மங்கள இசை பாடி முடிப்பது நம்முடைய மரபு.
தேவி அருள்வாயே......
தேவி அருள்வாயே...... (பாட்டு)
அதோ கூத்தில் மங்களம் பாடு-கிறார்கள். பாட்டன் மலையமான் சிறிது நேரத்தில் வந்துவிடுவார்.


வந்தியத்தேவனிடம் பலமுறை நான் கூறி அனுப்பினேன், போகுமிடத்தில் உன் வீரப்பிரதாபங்களை காட்ட வேண்டாம் என்று...
அவன் என்ன ஆனான் என்றே தெரியவில்லை...
அரசே! வந்தியத்தேவனை குறித்து தாங்கள் எதற்காக கவலைப்படுகிறீர்கள்? சோழ நாட்டு பெண்களை குறித்தல்லவா தாங்கள் கவலைப்பட வேண்டும்!!!
ஹா..ஹா..ஹா..
நீ கூறுவதும் சரிதான்.
ஹா..ஹா..ஹா..
ஹா..ஹா..ஹா..
நீங்கள் இருவரும் இன்னும் உறங்கச் செல்லவில்லையா?







ஆதித்த கரிகாலரின் கதை கேட்ட பின் நமக்கே ஒன்றும் புரியவில்லை, இல்லையா? ஒரு ராஜகுமாரனுக்கு இப்படியெல்லாம் நடக்குமா? அந்த நிலையில் கரிகாலரின் மனம் எப்படி இருந்திருக்கும். இப்போது எல்லாம் தெளிவாக தெரிகிறது. அவன் ஏன் தலைநகர் தஞ்சைக்கு செல்ல தயங்குகிறான் என்று. நாம் ஒரு பெண்ணால் என்ன செய்ய முடியும் என்று நினைப்பது உண்டு. ஆனால், இவள் ஒரு சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரத்தை அல்லவா! அசைத்துப் பார்க்கிறாள் இந்த பழுவூர் இளையராணி.


இளவரசர் அருள்மொழியை காஞ்சிக்கு அழைத்துவர, புலிக்கொடி பறக்க சோழநாட்டு கப்பலை எடுத்துக் கொண்டு இலங்கை பயணிக்கிறான் பார்த்திபேந்திரன்.
நண்பா! வெற்றியோடு திரும்பி வா.
பார்த்திபேந்திரன் இலங்கைக்கு செல்லட்டும், நாம் வந்தியத்தேவன் எங்கு என்ன கூத்தடிக்கிறான்? என்று பார்ப்போம். வாருங்கள்....


பழையாறை
இன்றைக்கு கிருஷ்ண ஜெயந்தி என்பதனால், நந்திபுர விண்ணகரத்து பெருமாள் கோவில் வீதிகளில் திருவிழா கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. வீதிகளில் அழகிய ஆடைகளும் ஆபரணங்களும் அணிந்து ஆடவரும், பெண்டிரும், சிறுவர் சிறுமியரும் கொண்டாடி வருகிறார்கள். ஆங்காங்கு மக்கள் கும்பல் கூடி நிற்கின்றனர். சிலர் தங்கள் குழந்தைகளுக்கு கிருஷ்ணர் வேடமிட்டு, ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் ஒருவரையொருவர் நலம் விசாரித்துக் கொண்டும் கிருஷ்ண ஜெயந்தியை கொண்டாடி மகிழ்கிறார்கள்.
உங்க வீட்டுக்கு கிருஷ்ணன் வந்துட்டானா?
வந்துட்டான், வந்துட்டான்!! மூன்று வருடத்துக்கு முன்பே வந்துட்டான்.
நம் மக்கள், தங்கள் வீட்டில் ஆண் குழந்தைகள் பிறந்தால் கிருஷ்ணனாகவும், பெண் குழந்தைகள் பிறந்தால் மகாலட்சுமியாகவும் பாவித்து வளர்த்து வந்தார்கள்.


ஆங்காங்கே உறியடிப் போட்டிகள் நடைபெறுகிறது.
விடாதே அடி!
கொஞ்சம் உறியை இறக்குப்பா.
போதும், போதும். மேல தூக்கு!
மஞ்சத்தண்ணிய முகத்துல படுறமாதிரி ஊத்து!
பலமா ஊத்து!
டொப்
அடிச்சிட்டேன்!!


பழையாறை நகரமே ஒரே கோலாகலமாக இருக்கிறது. ஆங்காங்கே உறியடிப் போட்டியும், நாடகமும், கேளிக்கையுமாக உள்ளது. இதோ, இங்கே கம்சநாடகம் நடைபெறுகிறது, வாருங்கள் அருகில் சென்று பார்ப்போம்.
அடே! கிருஷ்ணா!
சொல்லுடா மாமா!


உன் மாயவேலையெல்லாம் என்னிடம் பலிக்காதுடா! பொடிப்பயலே, என்னையா எதிர்க்கத் துணிந்தாய்? இன்றோடு நீ ஒழிந்தாய்!
அடே கம்சா! காட்டு உன் வீரத்தை, வெறும் வாய் சவடால் பேசாதே.


அடே கிருஷ்ணா! நான் நிராயுதபாணியை கொல்பவன் அல்ல. முதலில் நீ சென்று உன் ஆயுதத்தை கொண்டு வா!!
அடே! மாமா கம்சா, உன்னை அழிப்பதற்கு எனக்கு எவ்வித ஆயுதமும் தேவையில்லை, எந்த ஆயுதமும் இல்லாமலே நான் உன்னை வதம் செய்வேன்.


வழக்கமா வாத்தியார்தானே கம்சன் வேஷம் போடுவார்! இவன் யாரு புதுசா இருக்கானே! வாத்தியாரோட மகனோ?


கம்சனா வேஷம் போட்டிருக்கிறவன் ரொம்ப நல்லா செய்யுறானே!
இந்த குரலை இதற்கு முன் எங்கேயோ கேட்ட மாதிரி இருக்கே... ம்...!


ம்...! ஒருவேளை அவனாக இருப்பானோ! எதற்கும் சற்று அருகில் சென்று பார்ப்போம்.
யாரோ தன்னை உற்று கவனிப்பதை உணர்ந்த வந்தியத்தேவன்,
அடேய்....! கிருஷ்ணா!
இவன் ஏன் இங்கு வந்து தொலைந்தான்!
இவன் நம்மை விடமாட்டான் போலிருக்கிறதே...! இந்த கிருஷ்ணனை முடிப்பதற்கு முன், இந்த வைஷ்ணவனை முடித்துவிட வேண்டியதுதான்.


அப்படியா சங்கதி!...
இரு வரேன்.


இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால்....
காஞ்சியிலிருந்து வந்த ஒற்றன் ஒருவன், கடம்பூர் அரசரின் மகன் இளைய சம்புவராயரை அசந்தர்ப்பமான நேரத்தில் முதுகில் குத்தி விட்டது மட்டுமல்லாமல் தஞ்சை கோட்டைக்குள்ளும் நுழைந்து பல குழப்பங்களை விளைவித்துவிட்டு தப்பிவிட்டான்!
தடும்
தடும்


திடும்
திடும்
அவனை பிடித்து தருபவர்களுக்கு ஆயிரம் பொன் வெகுமதி...!
என்னது! ஆயிரம் பொன்னா.......!? கஜானாவுல காசே இல்லைனு சொன்னாங்களே!
இது அரசு உத்தரவு! இதை மீறி யாராவது ஒற்றனுக்கு உதவினால் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும்! திடும்.... திடும்....


ஒற்றனாம் ஒற்றன். எந்த காட்டிலிருந்து ஒற்றன் இங்கே வந்துவிடப் போகிறான்! குமரி முனையிலிருந்து வட பெண்ணை வரையில்தான் புலிக்கொடி பறக்கிறதே.


இதெல்லாம் இந்த பழுவேட்டரையர்களின் வேலை!


இளவரசர் பொன்னியின் செல்வர் வெற்றிமேல் வெற்றி பெற்று வருகிறாராம். ஆனால், இந்த பழுவேட்டரையர்கள் நம் வீரர்களுக்கு தேவையான உணவு அனுப்புவதே இல்லையாம் இலங்கைக்கு.


தஞ்சாவூர் கோட்டையில் உள்ள தானியக் களஞ்சியங்களில் ஏராளமான நெல்லை நிரப்பி வைத்திருக்கிறார்களே, அவ்வள-வும் என்னத்திற்கு?
இந்த சமயத்தில் நம்முடைய வீரர்-களுக்குப் பயன்படாத தனமும், தானியமும் என்னத்திற்கு?


எல்லாவற்றையும் இந்த பழுவேட்டரையர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?


பழுவேட்டரையர்கள் போகும்போது
எல்லாவற்றையும் தங்களோடு யம-
லோகத்திற்கு கொண்டு போவார்களா?


மக்கள் இப்படி வெளிப்படையாகவே பேச
துணிந்துவிட்டார்களே! இவ்வாறு மக்கள்
கொந்தளிப்பதை பார்த்தால், சோழ நாடு
என்ன ஆகும் என்றே தெரியவில்லை!!


இதையெல்லாம் ஆழ்வார்க்கடியானும் கேட்டுக் கொண்டே அங்கிருந்து போகிறான்.
முதலில் இதையெல்லாம் ஒன்று விடாமல் நம் குருநாதரிடம் போய் சொல்லிவிட வேண்டும். அதற்குள் பெரிய ராணி செம்பியன் மாதேவியையும், இளைய பிராட்டி குந்தவையையும் ஒரு எட்டு பார்த்து விட்டுச் செல்ல வேண்டும்.


இந்த பொல்லாத வைஷ்ணவன் நம்மை இந்த வேடத்தில் கண்டுபிடித்திருப்பானா? அவனுக்கு நான் உதவி செய்யவில்லை என்பதற்காக பழுவேட்டரையர்களிடம் காட்டிக் கொடுத்து விட்டால் என்ன செய்வது!?
இளவரசியை சந்தித்து கரிகாலர் கொடுத்த ஓலையை கொடுத்துவிட்டால் நாம் வந்த வேலை முடிந்துவிடும். அதன்பின் பழுவேட்டரையர்களிடம் அகப்பட்டுக் கொண்டாலும் கவலையில்லை.
தொடரும்...

## அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| சப்பட்டை | - | சிறகு |
| பிசகு | - | தவறு |
| பள்ளிப்படை | - | போர்க்களத்தில் உயிர் துறந்த மாவீரர்களின் நினைவாக வீரக்கல் நட்டு அத்துடன் ஒரு தெய்வத்தின் சிலையையும் வைத்து வழிபடுவதே பள்ளிப்படை |
| கோட்டான் | - | ஆந்தை இனத்தை சேர்ந்த ஒரு வகை பறவை |
| வீர பாண்டியன் | - | பாண்டிய மன்னன் |
| கங்க நாடு | - | தற்போதைய கர்நாடகத்தின் தென் பகுதி |
| ஆபத்துதவி | - | மெய்காப்பாளன் |
| வீர சொர்க்கம் | - | போரில் வீர மரணம் அடைவோர் சொர்க்கத்தை அடைவதற்கு சமம் என கருதப்பட்டது |
| அபயம் | - | அடைக்கலம் / பாதுகாப்பு |
| வண்மை | - | ஈகை / தானம் |
| அணி அலங்காரம், இல்பொருள் உவமை | - | தமிழ் இலக்கணம் |
| மறலி | - | எமன் |
| சுவீகாரம் | - | தத்து எடுத்தல் |
| சிலாகித்து | - | புகழ்தல் |
| ஜாலக்கு | - | தந்திரம் மிகுந்த நடிப்பு / அற்புதம் |
| ஈழம் | - | இலங்கை |
| ராஷ்ட்டிரகூடர் | - | சோழ சாம்ராஜ்யத்தின் எதிரி நாடு |
| சமிக்ஞை | - | மறைமுக அடையாளம் / சைகை |

# அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| கைங்கர்யம் | - | தொண்டு அல்லது சேவை |
| ஜந்து | - | ஊர்வன இனத்தைச் சேர்ந்த உயிரினம் |
| தண்டோரா | - | பறை சாற்றுகை |
| அநுராதபுரம் | - | தற்போதைய இலங்கையின் வடமத்திய மாகாணத்தின் தலைநகரம் |
| பரிகாசம் | - | கேலி (அ) கிண்டல் |
| அபாயம் | - | ஆபத்து |
| குன்றத்தூர் கிழார் | - | சோழ பேரரசின் கீழ் ஆட்சி செய்து வந்த குறுநில மன்னன் |
| முகஸ்துதி | - | எதிர் நின்று கூறும் புகழ்ச்சி மொழி |
| இராஷ்டிரகூடர் | - | கிபி 6 முதல் 10 ஆம் நூற்றாண்டு வரை இந்தியாவை ஆண்ட அரச மரபினர் ஆவர் |
| தொண்டை மண்டலம் | - | காஞ்சியைத் தலைநகராகக் கொண்டதும், ஆற்காடு, செங்கற்பட்டு, நெல்லூர் ஜில்லாக்களை உள்ளடக்கியதுமான தமிழ்நாட்டுப் பகுதி தொண்டை மண்டலம் |
| சாளுக்கியர்கள் | - | இந்தியாவின் அரச வம்சம் ஒன்றைச் சேர்ந்தவர்கள். கிபி 6 ஆம் நூற்றாண்டுக்கும், 12 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், தெற்கு மற்றும் மத்திய இந்தியாவின் பெரும் பகுதியை ஆண்டவர்கள் |
| கட்டாரி | - | குத்துவாள் |
| பாசறை | - | போர் நடைபெறும் இடத்தில் வீரர்கள் தங்கும் இடம் |
| அரவான் | - | பாண்டவர்களில் ஒருவரான ஆர்ஜுனனுக்கும், நாக இளவரசி உலுப்பிக்கும் பிறந்த மகன் |